24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

சுடர் 34 | கதிர் 141 | சித்திரை 05ஆம் நாள் | வியாழக்கிழமை | 18 ஏப்ரல் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050

# இரட்டைப் பெண் குழந்தைகளுடன் முழுக்குடும்பமே சாவடைந்த துயரம்

## மகியங்கனை விபத்தில் பிரிந்தன 10 உயிர்கள் கண்ணீரில் மிதக்கின்றது மட்டக்களப்பு நகர்

மட்டக்களப்பு, ஏப். 18
மகியங்கனையில் நேற்று அதிகாலை இடம்பெற்ற தனியார் பேருந்து - ஹைஏஸ் விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர். ஹைஏஸில் பயணித்த மட்டக்களப்பைச் சேர்ந்த குடும்பமொன்றின் அனைத்து உறுப்பினர்களும் இந்த விபத்தில் சிக்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். அவர்களில் இரட்டைப் பெண் குழந்தைகளும் அடங்குகின்றனர். இந்த விபத்து நாடளாவிய ரீதியில் பெரும் அதிருப்தியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.


ஜோசப் ரெலின்டன் ஜோப்ஸ் (வயது - 56), அவரது மனைவி சில்வியா ஜோப்ஸ் (வயது - 50), அன்ரனி லிஸ்டர் அலெக்ஸாண்டர் (வயது -35), அவரது மனைவி நிசலி அலெக்ஸாண்டர் (வயது - 27), அவர்களது இரட்டைப் பெண் பிள்ளைகளான ஹனாலி அலெக்ஸாண்டர் (வயது - 4), பைகா அலெக்ஸாண்டர் 21



## கோலாகல இந்திரவிழாவுக்கு தயாராகியது வல்வை நகரம்

*நாளை லட்சக் கணக்கில் மக்கள் திரள்வர் என எதிர்பார்ப்பு*

யாழ்ப்பாணம், ஏப். 18
வல்வெட்டித்துறை இந்திர விழா நாளை கொண்டாடப்படவுள்ள நிலையில், அதற்கான ஏற்பாடு 21



# எந்நேரத்திலும் அரசு கவிழும்!

## மகிந்த எச்சரிக்கை



கொழும்பு, ஏப்ரல் 18
'ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கவிழ்ப்பதற்கு நாம் எப்போதும் தயாராகவுள்ளோம். எந்த நேரத்திலும் இந்த அரசு கவிழும்.' இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் அரச தலைவருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்தார். 21

## கண்ணிவெடி அகற்றிய இரு பெண்கள் படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப். 18
கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்ட இரு பெண்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அதி தீவிர சிகிச் 21

## மின்னல் தாக்கிய இருவர் அவசர சிகிச்சைப் பிரிவில்

சாவகச்சேரி, ஏப். 18
மரத்தின் கீழ் அமர்ந்திருந்த இரு ஆண்கள் மின்னலால் தாக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் மீசாலையில் நேற்று இரவு இடம்பெற்றது. 21

யாழ்ப்பாணம்

## மாவட்ட செயலக வளாகத்தில் மக்களை ஏமாற்றியவர் கைது!

காணொளி ஆதாரத்துடன் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 18
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு வரும் பொதுமக்களிடம், ஆவணங்களை துரிதமாகப் பெற்றுத் தருகின்றேன் என்று கூறி அவர்களிடம் இருந்து பணத்தைப் பெற்று ஏமாற்றிவந்த நபர் பிடிபட்டார். அவர் உரிய ஆதாரங்களுடன் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்ப 21

## சஜித்தின் கோரிக்கை ரணிலால் நிராகரிப்பு!

கொழும்பு, ஏப். 18
ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மைய அமைப்பாளர் பதவியைத் தருமாறு அமைச்சரும் ஐ.தே.க. 21

## காப்புறுதிக்கான வாய்ப்புக்கள் விவசாயிகளுக்கும் வேண்டும்!

*யாழ். மாவட்ட கமக்கார அமைப்புக்களின் அதிகார சபைத் தலைவர் வலியுறுத்தல்*

யாழ்ப்பாணம், ஏப். 18
கடற்றொழிலாளர்களுக்கு இருக்கும் காப்புறுதி வாய்ப்பை விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும் என்ற எமது கோரிக்கையின் நியாயப்பாட்டை மயிலங்காட்டில் இடம்பெற்ற இடி மின்னல் தாக்குதல் உணர்த்தியுள்ளது என்று யாழ்ப்பாண மாவட்ட 21

மாவை சேனாதிராசாவை எதிர்த்து

## தமிழ் அரசுக் கட்சித் தலைமைக்கு போட்டியிட இதுவரை யாருமில்லை

விண்ணப்பிக்க இறுதித் தினம் நாளை 21

## போதையில் பொலிஸார் சாரத்தியம் காயங்களுடன் மருத்துவமனையில்!

வேலியே பயிரை மேய்ந்த கதை

யாழ்ப்பாணம், ஏப். 18
மதுபோதையில் உந்துருளியைச் செலுத்திய பலாலிப் பொலிஸார் வீதியில் வீழ்ந்து படுகாயமடைந்து தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர், 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்**

மலர் ஒழுங்கமைப்பு
பொ.தங்கராசா

**Iynkaran Store**
Kaithady East,
Kaithady.

**K.S.Ponnampalam**
Lanka Filling Station
**P.S.Kanthan Food City**
Suganthan Bus Booking Center
Jaffna to Colombo
A9 Rd, Kaithady.
077 526 2370

**ஸ்ரீ வாலாம்பிகை அம்மன்**
கட்டடப் பொருள்
விற்பனை நிலையம்
A9 வீதி, கைதடிச் சந்தி,
கைதடி.
077 639 1009

**நியூ கணேசன் ஸ்ரோர்**
கைதடிச் சந்தி,
கைதடி.

**Vishaga Trade**
Kaithady Junction
Kaithady.
T.P: 075 040 2302

**சூரியன் அழுத்தகம்**
கைதடி.
077 557 7435

**ஊருபன் களஞ்சியம்**
கைதடி மத்தி,
கைதடி.

**சந்தானம்**
மல்ரி சென்ரர்
பிள்ளையார் கோயில் வீதி, கைதடி.
**RNCD HOME**
(N.A.Losan)
கம்பிலுவில் - 02 அம்பாறை.
076 6574596, 077 285 8406

**கோபன்**
பந்தல் சேவை
கோபன் கட்டடப் பொருள்கள்
விற்பனை நிலையம்
கைதடி கிழக்கு,
கைதடி.

**நியூ ராஜீகா**
இரும்பகம் & பல்பொருள்
வாணிபம்
கைதடி மத்தி,
கைதடி.
075 673 6874

**சிறி வாலாம்பிகை ஸ்ரோர்ஸ்**
கைதடி மத்தி,
கைதடி.

**ஓம் முருகா**
பல்பொருள் வாணிபம்
பிள்ளையார்
கோயில் வீதி,
கைதடி தெற்கு,
கைதடி.

**Positif**
Pharmaceuticals
Kaithady Junction,
Jaffna.

**Pillaiyaar**
Multi Centre
Manipay Road,
Kaithady
Junction.

**பொ.செல்வராசா**
கைதடி தெற்கு,
கைதடி.

**Veva Elactrical & Hard Ware**
Kandy Road,
Kaithady Junction.
021 205 7028

**ஸ்ரீ முருகன்**
இரும்பு தொழிற்சாலை
மானிப்பாய் வீதி,
கைதடி சந்தி.

**ராம் றேட் சென்ரர்**
மானிப்பாய் வீதி,
கைதடி.
077 877 5976
021 205 7135

**இலட்சுமி மரக்காலை**
மானிப்பாய் றோட்,
கைதடி.

**சு.வரதராசா**
கைதடி
தென்கிழக்கு,
கைதடி.

**விஜிதா**
உழவு
இயந்திரம்
கைதடி தெற்கு,
கைதடி.

**வேணுகா**
சைவ
உணவகம்
கண்டி வீதி,
கைதடி.
077 771 3244

**கதிர்வேலன்**
ஹாட்வெயர்
கதிர் வேலன்
அரிசி ஆலை
கைதடி.
021 222 9525

குகன் மின்னிணைப்பு
நீர்க்குழாய் பொருத்துதல்
நீர் ஓடி வீழி பூட்டும்
சேவைகள்
கைதடி கிழக்கு,
கைதடி.

**அருள் ராஜா**
தச்சுத்
தொழிலகம்
கைதடி கிழக்கு.
077 900 2040

**திலக்சன்**
பல்பொருள்
வாணிபம்
கைதடி.
077 431 4176

**டனோஜ**
பந்தல்
சேவை
கைதடி தெற்கு,
கைதடி.

**Northern Eagles**
352 Nunavil Junction,
Kandy Road,
Chavakachcheri,
Sri Lanka.
077 881 0777

**ஆர்த்திகன்**
படமாடம்
அலுமினிய
பிற்றிங்
077 750 6997

**சுமித்திரன் ஸ்ரோர்ஸ்**
கைதடி மத்தி,
கைதடி.

**ஸ்ரீநிஷி**
பல்பொருள் வாணிபம்
கைதடி மத்தி,
கைதடி.

**விமல்**
வெல்டிங் வேர்க் சொப்
அலுமினிய பிற்றிங் அன்
வோட்டபம்
மெக்கானிக்
கைதடி மத்தி.
077 902 7184

**சிங்கராசா**
அரைக்கும் ஆலை
கைதடி மத்தி,
கைதடி.

சிவறஞ்சன் குடும்பம்
கைதடி மத்தி,
கைதடி.

**ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ்**
கைதடி கிழக்கு,
கைதடி.

**நாகபூசணி**
ஆட்டோ சேவை
அன் டெக்நேசன்
கைதடி கிழக்கு
077 186 2432

**Mahinthini Stores**
Kaithady East
Kaithady.
077 720 4296

**அவிஸ்கன் ஸ்ரோஸ்**
மானிப்பாய் வீதி,
கைதடி.

**வவி ஆட்ஸ்**
வர்ணவேலை
கைதடி மத்தி.
075 042 1959

தொடர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பிதழ் தொடர்ச்சி

**Selva Studio**
A9 Road,
Kaithady Junction
Jaffna, Sri Lanka.
077 923 3184

**வீடியோ றங்கன்**
கைதடி.

**சின்னப்பா குடும்பம்**
கைதடி கிழக்கு.
கைதடி.

**தீபன் சைக்கிள் வேக்ஸ் சொப்**
கைதடி மத்தி.
கைதடி.

**சபேஸ் ஐஸ்கிறீம்**
கைதடி மத்தி.
கைதடி.

**சீபன் பாஸ்கர் லேணர்ஸ்**
கண்டி வீதி, கைதடி.
077 057 0459.
021 223 2050

**AACHE Hot Food and Food Factory**
Kaithady East.
021 205 7455
021 205 7456

**பிள்ளையார் அரைக்கும் ஆலை**
கைதடி கிழக்கு.
கைதடி.

**நேயன் தையல் அகம்**
கைதடிச் சந்தி.
077 180 7567

**வே.பொன்னுத்துரை தீபன் களஞ்சியம்**
கைதடி.

**S.K.றான்ஸ்போட்**
கட்டடப் பொருள் விற்பனை நிலையம்
கைதடி மத்தி.
கைதடி

**விநாயகர் ஸ்ரோஸ்**
பிள்ளையார் கோயில் வீதி,
கைதடி.

**பிரியங்கா கதிரை வாடகை**
கைதடி கிழக்கு.
கைதடி.
077 869 5736

**ஆரியபவான் சைவ உணவகம்**
கைதடி சந்தி.

**பிரசாந் எலக்றோனிக்**
232,
கடற்கரை வீதி,
கொழும்பு 11

# 45ஆம் நாள் உறங்கா நினைவுகளுடன்....

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு வத்திராயனை பிறப்பிடமாகவும் 60/7, 6ஆம் ஒழுங்கை வேப்பங்குளம், வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் காத்தலிங்கம் பிறேமரமணன்



ஆற்றலனாய் விளங்கிய அழகனே
ஆற்றாத துயர்தந்து போனாயா
மாற்றவர் விரித்த சாவலைக்குள்ளும்
மடியாமல் மீண்டெழுந்தவன் நீ
சாற்ற முடியாச் செயல்வீரன் உனைச்
சாகடித்தார் யாரோ சதிசெய்து
தேற்றவொண்ணாத் துயரில் துவளுது மனம்
தேம்பியழ அதற்குள் நாற்பத்தி ஐந்து நாள்கள்
விரைந்து விட்டன இருந்தாலும் நீ
அப்படியே இருக்கிறாய் எம்மனக் கண்களில்

கடந்த 05.03.2019 அன்று கிளிநொச்சியில் அகாலமரணமடைந்த ரமணன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் (16.04.2019)நேற்று முன்தினம் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. அன்னாரின் அந்தியேட்டி நிகழ்வுகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (18.04.2019) வியாழக் கிழமை வவுனியாவில் உள்ள தற்காலிக இல்லத்தில் இடம்பெறும்.
இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**60/7, 6ஆம் ஒழுங்கை,**
**வேப்பங்குளம், வவுனியா.**

குடும்பத்தினர்.

கருநாவல் பற்று தெற்கு– மாங்குளம் – அம்பகாமம்
அருள்மிகு மம்மில் பிள்ளையார் ஆலய

## வருடாந்த சித்திரா பௌர்ணமி

உற்சவம் 19.04.2019 வெள்ளிக்கிழமை காலை விஷேட அபிஷேகத்துடன் ஆரம்பித்து வழமை போன்று நடைபெறும்.

அடியவர்களுக்கான போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளது.

ஆலய பரிபாலன சபையினர்.

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரி ஆசிரியர்
நாராயணநாதன் ஜெயராசா
அவர்களின் தந்தையார்
**வேலுப்பிள்ளை நாராயணநாதன்**
11.04.2019 அன்று காலமானார்.
இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர் வட்டம்**

## தேவை

யாழ். நகரை அண்மித்த பகுதியில் உள்ள சைவ உணவகத்திற்கு வேலையாள்கள் தேவை. சப்ளையர்ஸ், சமையலறை உதவியாளர் (பெண்கள்)
- 077 906 3036, 076 295 7750

## பணிப்பெண் தேவை

வெள்ளவத்தையில் சிறிய குடும்பம் ஒன்றுக்கு பணிப்பெண் ஒருவர் உடனே தேவை.

**077 052 7090**

## அறை வாடகைக்கு

வேலை செய்யும் ஆண் ஒருவருக்கு யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள வீடொன்றில் அறையொன்று வாடகைக்கு உண்டு.

**077 315 5589**

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111

ஈழ மக்களின் வாழ்வும் வரலாறும்
ஒரு ரிக்கட் வாங்கினால் ஒரு ரிக்கட் இலவசம்
யாழ். கார்கில்ஸ் M.C
வியாழன் 10 - 15 & 1.15
சனிக்கிழமை முதல் 4 . 15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம் நீர்வேலி கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

24.03.2019 இல் நடைபெறாத மேற்படி கிளைக்குழு தெரிவுக்கூட்டங்கள் எதிர்வரும் 21.04.2019 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கீழ்க்காணும் விவரப்படி நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

| கிளை இல | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|
| 01 | அச்செழு | அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம். |
| 07 | நீர்வேலி இராசவீதி | கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம். நீர்வேலி. |
| 09 | நீர்வேலி கோயிலடி | ஸ்ரீமுருகன் ஐக்கிய நாணயசங்கம். நீர்வேலி கந்தசாமி கோயிலடி. |
| 10 | நீர்வேலி பூதர்மடம் | ஸ்ரீமுருகன் ஐக்கிய நாணயசங்கம். நீர்வேலி கந்தசாமி கோயிலடி. |
| 11 | நீர்வேலி ஐங்கரன் | கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம். நீர்வேலி. |
| 12 | கோப்பாய் சந்தி | கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம் |
| 16 | கோப்பாய் இராசவீதி | கோப்பாய் காளிகோயிலடி சனசமூக நிலையம் |
| 17 | கோப்பாய் மத்தி | நாவலர் வித்தியாலயம். கோப்பாய் மத்தி |
| 18 | கோப்பாய் மத்தி | கிளைக் கட்டடம். கோப்பாய் மத்தி |
| 24 | உரும்பிராய் தெற்கு | கிளை நிலையக் கட்டடம் உரும்பிராய் தெற்கு. (கிளை 24 B இயங்கும் கட்டடம்) |
| 25 | உரும்பிராய் கணேசா | உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் |
| 29 | உரும்பிராய் வடக்கு | சரஸ்வதி சனசமூக நிலையம். உரும்பிராய் வடக்கு |

நீர்வேலி
17.04.2019

செயலாளர்



# போராளியா? காப்பானா?

## சூர்யாவின் காப்பான் ரிலீஸ் திகதி அறிவிப்பு

கே.வி.ஆனந்த் இயக்கத்தில் சூர்யா மோகன்லால் நடிப்பில் உருவாகி இருக்கும் 'காப்பான்' படத்தின் முன்னோட்டம் நேற்றுமுன்தினம் வெளியாகிய நிலையில், படத்தின் ரிலீஸ் திகதியை படக்குழு வெளியிட்டுள்ளது.

சூர்யா கே.வி.ஆனந்த் கூட்டணியில் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் உருவாகி இருக்கும் `காப்பான்' படத்தின் முன்னோட்டக் காணொளி தமிழ் புத்தாண்டை முன்னிட்டு நேற்று முன்தினம் வெளியாகி வரவேற்பை பெற்று வருகிறது.

படத்தில் சூர்யா தலைமை அமைச்சரின் பாதுகாப்பு அதிகாரியாக நடித்திருப்பதாக முன்னதாக பார்த்திருந்தோம். காணொ ளியைப் பார்க்கும்போது படத்தில் சூர்யா பாதுகாவலராக வருகிறாரா? அல்லது போராளியா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

தமிழ்நாட பாலைவனம் ஆக்கிட்டு. இந்தியாவ சூப்பர் பவர் ஆக்கப்போறீங்களா?, இயற்கையாகவே உற்பத்தியாகிற நதிய தனக்கு மட்டும் தான் என்று சொந்தம் கொண்டாடுற உரிமையை யாருங்க கொடுத்தா?, போராடுறதே தப்புன்னா, போரா டுற சூழ்நிலைய உருவாக்குறதும் தப்புதான்? உள்ளிட்ட வசனங்கள் தற்போதைய தமிழக மக்களின் குரலாக ஒலிக்கிறது.

இந்த படத்தில் மோகன்லால் தலைமை அமைச்சராகவும் ஆர்யா அவரது மகனாகவும், சமுத்திரக்கனி, பொம்மன் இரானி, சிரக் ஜனி உள்ளிட்ட பலரும் முக்கிய் கதா பாத்திரங்களிலும் நடித்திருக்கிறார்கள். நாயகியாக சாயிஷா நடித்திருக்கிறார். லைகா புரொடக்ஷன்ஸ் பிரம்மாண்டமாக தயாரித்துள்ள இந்த படத்திற்கு ஹாரிஸ் ஜெயராஜ் இசையமைத்திருக்கிறார்.

படம் ஆகஸ்ட் 30ஆம் திகதி திரைக்கு வரும் என்று படக்குழு அறிவித்துள்ளது. சூர்யா நடிப்பில் அடுத்ததாக என்ஜிகே மே 31ஆம் திகதி திரைக்கு வர இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பழையில் பின்வரும் காணிகள் விற்பனைக்கு உண்டு.

1. துர்க்கை அம்மன் கோவிலுக்கு அண்மையில் 5 பரப்பு (K.K.S. வீதியில்)
2. தெ. சந்தியில் 12 பரப்பு
3. Hospital க்கு பக்கத்தில் 30 பரப்பு

- 076 697 2287

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 08 . 04 . 1968

விண்ணில் 20 . 04 . 2016

### அமரர் தியாகராசா ஸ்ரீநாகேஸ்வரன்

(A.G.OFFICE, JAFFNA)

திதி : வளர்பிறை சதுர்த்தசி (18.04.2019)

எமது குடும்பத்தின் குலவிளக்காய் நெஞ்சமதில் நீக்கமற நிலைத்து எண்ணமதில் என்றும் நிலையா இடம் பிடித்து எம் இதயத்துடன் இரண்டறக்-கலந்த எமது அன்புத் தெய்வமே ! நாம் உயிராய், உலகமாய் வாழ்ந்த வாழ்க்கையை எண்ணி அனுதினம் வருந்துகின்றோம். வண்ண மலர் வாசமாக எம் உள்ளங்களில் அழியா வரம் பெற்று வீற்றிருந்தீர். கண்ணிமைக்கும் நேரத்தில் காலன் உம்மைக் கவர்ந்து சென்ற கொடுமையை எண்ணிக் கலங்குகின்றோம். நேற்று வரை நிஜமாகி இன்று நினைவாகி கனத்த இதயங்கள் நொருங்கி, இமைகள் நனைய எம்மை தவிக்கவிட்டுச் சென்று மூன்று ஆண்டுகள் எப்படி ஆனதையா எத்தனை ஜென்மங்கள், யுகங்கள் ஆனாலும் எமது துயரம் ஆறாதையா கனத்த இதயத்துடன் வானமதில் அனுதினம் தாங்கள் விடிவெள்ளியாக காண்பீர்களோ எனக் கனத்த இதயத்துடன் வானை நோக்குகிறோம். எமது பாசதீபமே உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
**அன்பு மனைவி, சித்தப்பா,
சித்தி குடும்பத்தினர்.**

## 35 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 06 . 02 . 1938

இறைவன் அடியில் 15 . 03 . 2019

### அமரர் பரமானந்தம் யசோதை

ஆலமரமாய் எம் குடும்பத்தில்
விழுதுகள் பரப்பி
அன்பின் அணிகலனாய்
பண்பின் சிகரமாய் இருந்து
எங்கள் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் வித்திட்டு
நல்லன சொல்லி வழிகாட்டி
இவ் வையத்துள் நாம் இன்புற்று வாழ
மெழுகுவர்த்தியாக இருந்து
தன்னையே உருக்கி ஒளியூட்டி
சிவபதம் அடைந்த
எங்கள் குலவிளக்கே
உங்களின் ஆத்மா சாந்தியடைய
ஸ்ரீ முருகபுரம் கருணாகரப் பிள்ளையாரிடம்
வேண்டிப் பிரார்த்தனை செய்கின்றோம்.



என்றும் உங்கள் நினைவுகளுடன்
**குடும்பத்தினர்.**

**ஏழாலை தெற்கு,
மயிலங்காடு, சுன்னாகம்.**

## மரண அறிவித்தல்



### நாகச்சந்திரன் சிவச்சந்திரன்

*(ஆசிரியர் - யாழ். இந்துக்கல்லூரி)*

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகச்சந்திரன் சிவச்சந்திரன் நேற்று (17.04.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இலங்கை வங்கி முன்ஒழுங்கை,
சுன்னாகம் தெற்கு.**

**தகவல்: குடும்பத்தினர்.
0212241137**

## மரணஅறிவித்தல்

### அருட்சகோதரி மேரி டெல்வின் பத்திநாதர் தி.கு



பத்தாவத்தையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்.திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி டெல்வின் பத்திநாதர் (17.04.2019) புதன்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி 17.04.2019 புதன்கிழமை பி.ப 7.30 மணிக்கு இளவாலை கன்னியர் மடத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் இன்று (18.04.2019) வியாழக்கிழமை மு.ப 9.30 மணிக்கு யாழ் ஆயர் தலைமையில் இறுதி வழிபாடும் ஆசிரும் இடம் பெற்று இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

**தகவல்: அருட்சகோதரி தியோவின் குருஸ்
மாகாணத்தலைவி.
121, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

## இது புதுசு



சமையலறையில் பயன்பாட்டுக்கு எளிதாக சரக்குகள் போட்டு வைக்கக்கூடிய போத்தல்கள் புதிதாக அறிமுகமாகியுள்ளன. இவை இரண்டாயிரத்து 250 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு 18 . 07 . 1949 | இறப்பு 17 . 04 . 2019

# சின்னத்தம்பி கமலேஷ்வரன்

*(ஓய்வுபெற்ற பொலிஸ் பரிசோதகர்)*

துன்னாலை தாமரைக்குளத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கமலேஸ்வரன் நேற்று (17.04.2019) புதன்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி லச்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் செல்வதுரை லச்சுமி தம்பதிகளின் மருமகனும் தயாளினியின் அன்புக் கணவரும் கருணாசிங்கம், கருணாபதி, கமலதேவி, கனகரத்தினம், காலஞ்சென்ற கருனேஷ் வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கார்த்திகா (பொறியியலாளர்), கமலகோபன் (மின் அத்தியட்சகர் இலங்கை மின்சார சபை), ஜனார்த்தன் (கணக்காளர் - கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் றமணன் (பொறியியலாளர்), அகலியா (விளையாட்டு உத்தியோகத்தர், பிரதேச செயலகம், கோப்பாய்), பிருந்திக்கா (ஆசிரியை - கிளி/ விவேகானந்தா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஹரிஷ், அஷ்னிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற தமயந்தி, கிருஷ்ணபிள்ளை, காலஞ்சென்றவல்லிபுரம், வசந்தலீலா, அருள்மலர், செல்வச்சந்திரன், செல்வபாஸ்கரன், பவாணி, பிரபா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஜெயராணி, மிருணாளினி, சிறிதரன், ஜெயதீஷ்வரன் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2019) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேருண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தாமரைக்குளத்தடி,**
**துன்னாலை, கரவெட்டி.**

(CS 23136/15/17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



பிறப்பு 25 . 12 . 1960 | இறப்பு 16 . 04 . 2019

# கணபதிப்பிள்ளை சண்முகலிங்கம்

*(சண்முகம் - பெரியபரந்தன், பிள்ளையார், காளி கோவில் பூசகர்)*

பெரிய பரந்தன் பரந்தனை பிறப்பிடமாகவும், யாழ். கச்சாய் தெற்கு கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சண்முகலிங்கம் (சண்முகம்) அவர்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (16-04-2019) இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் வசந்தராணியின் பாசமிகு கணவரும் விஜியேந்திரன் சுபாசினி ஆகியோரின் மைத்துனரும் தாட்சாயினி (கனடா), தபுலாசினி (ஆசிரியர் - நெடுங்கேணி ம. வி.), சத்தியா (கிழக்கு பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜேந்திரன் கிசானின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, செல்லத்துரை மற்றும் கமலாதேவி (திருகோணமலை), கனகாம்பிகை (வடமராட்சி) சிங்கராஜா (கனடா), பரமேஸ்வரி, காமாட்சி, இராஜேஸ்வரி (கனகாம்பிகைக்குளம்), தங்கேஸ்வரி (ஜேர்மனி), ஈஸ்வரி (மதி - மீசாலை), சுந்தரலிங்கம் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஆய்ஷா (கனடா), பபின் (கனடா) ஆகியோரின் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18-04-2019) வியாழக்கிழமை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கச்சாய் எறியால் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஜெயதரன் (மருமகன்) - 0766655256**
**தீபன் (பெறாமகன், கனடா) - 0014169532794**
**சுந்தரலிங்கம் (தம்பி, கனடா) - 0014163564239**

(CS 23136/15/17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## காணி விற்பனைக்கு

எழுதுமட்டுவாள் A9 வீதியில் 4 1/2 பரப்பு வீட்டுடன் அமைந்துள்ள காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு - 077 101 1111
**உரிமையாளர்**

## தவறிவிட்டது

நீர்வேலியில் இருந்து இராஜபாதை ஊடாக நல்லூர் வரும் வழியில் தே.அ.அ (760974420V), வங்கி அட்டை, பேர்ஸ் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

**077 576 2816, 077 2317230**

## மரண அறிவித்தல்கள்

# கதிரவேலு தம்பையா

*(ஓய்வுபெற்ற பரிசோதகர், புகையிரதத்திணைக்களம்)*



பிறப்பு 08.04.1936 | இறப்பு 15.04.2019

யாழ்.மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு தம்பையா (ஓய்வுபெற்ற பரிசோதகர், புகையிரதத்திணைக்களம்) கடந்த 15.04.2019 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மகேந்திரமலரின் அன்புக் கணவரும் சைலஜா (கனடா), கிரிஜா (பிரான்ஸ்), குருபரன் (இலங்கை) காலஞ்சென்ற ரசிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சசிகரன், நரேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சனுஷ்கா, சர்மிகா, சௌமியா, நிஷானி, நிஷான் ஆகியோரின் அன்புப்பேரனும் தெய்வானைப் பிள்ளை காலஞ்சென்ற பார்வதம் மற்றும் விசாலாட்சி காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் அழகம்மா, காலஞ்சென்ற துரைசிங்கம் மற்றும் கமலேஸ்வரன் காலஞ்சென்ற கமலேஸ்வரி மற்றும் இராசேந்திரம் ஆகியேரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.04.2019) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நேரியதுா இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**மட்டுவில் தெற்கு,**
**சாவகச்சேரி.**

**சசிகரன்: +16479990927, சைலஜா: +16474067273**
**கிரிஜா: +33641280569, விஜி:+947662176461, குருபரன்**

# திருமதி சிவநேசரத்தினம் குணரத்தினம் (ரதி)

**இளைப்பாறிய பிரதி அதிபர் (கொக்குவில் இந்துக் கல்லூரி), முன்னாள் ஆசிரியர் யா/இந்து மகளிர் கல்லூரி, அனு /விவேகானந்தா கல்லூரி**



யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும், கொக்குவில் மற்றும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. சிவநேசரத்தினம் ஆ.சி.குணரட்ணம் 16.04.2019 செவ்வாய்க்கிழமை நள்ளிரவு கொழும்பில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவபாத சுந்தரம் - இரத்தினம்மா தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு - சேதுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவசம்பு குணரட்ணத்தின் (விளையாட்டுத்துறை உதவிப்பணிப்பாளர்) அன்பு மனைவியும் பார்த்தீபன் (பொறியியலாளர்), பிரதீபன் (பொறியியலாளர்), சுகந்தீபன் (முன்னாள் மருத்துவபீட மாணவன்), தர்சிகா (முன்னாள் உதவி முகாமையாளர் - மக்கள்வங்கி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் துஷ்யந்தி, யசீலா (ஆசிரியர்), தயாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பேராசிரியர் மகேஸ்வரன் (இரசாயனத்துறை - யாழ் பல்கலைக்கழகம்), ஞானேஸ்வரன் (பொறியியலாளர்), சுதந்திரேஸ்வரன் (தொழில்நுட்ப உதவியாளர்), இராஜேஸ்வரன் (பொறியியலாளர் - பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்) மற்றும் திருமதி.சிவநேசராணி பத்மநேசன் (ஓய்வு நிலை ஆசிரியர்- யா/திருக்குடும்ப கன்னியர் மடம்), திருமதி சிவநேசமலர் ஜெயபாலன் (ஓய்வு நிலை உப அதிபர் - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), திருமதி சிவநேசஜோதி சிவானந்தராஜா (பொறியியலாளர் - நியூசிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராஜேஸ்வரி (ஓய்வு நிலை பேராசிரியர் இரசாயனத்துறை), ருக்குமணிதேவி (நியூசிலாந்து), காலஞ்சென்ற இரஞ்சினி (தொழில்நுட்ப உதவியாளர்) மற்றும் பத்மநேசன் (ஓய்வுநிலை முகாமையாளர் - இலங்கை வங்கி), சிவாஜினி, ஜெயபாலன் (ஓய்வுநிலை ஆசிரியர் - யா/இந்துக்கல்லூரி), சிவானந்தராசா (பொறியியலாளர் - நியூசிலாந்து), காலஞ்சென்றவர்களான நயினாதீவு நடராஜா, பாக்கியலஷ்மி, பரமசாமி, பத்மநாதன், மற்றும் பழனிவேல், சோதீஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் கேதாரன், அபிராம், சிவகன், வாதாபன், கேசிகன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.04.2019 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் (குளங்கரை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு) காலை 8 மணியளவில் நடைபெற்று பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**குளங்கரை ஒழுங்கை,**
**கொக்குவில் கிழக்கு.**

(CS 24692)
(14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**0718561334**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விகாரி வருட தமிழ்ப் புத்தாண்டு பொதுப் பலன்கள் 2019

**எதையும் வெளிப்படையாகப் பேசுபவர்களே!**

சுக்கிரன் உங்கள் ராசியைப் பார்க்கும் நேரத்தில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால், அடிப்படை வசதி, வாய்ப்புகள் பெருகும். தள்ளிப் போய்க் கொண்டிருந்த சுபகாரியங்கள் இனி சிறப்பாக நடந்தேறும். பணப்புழக்கம் அதிகரிக்கும். ஆனால், உங்கள் ராசிக்கு 12ல் சந்திரன் இருக்கும் போது வருடம் பிறப்பதால், செலவுகள் அதிகரிக்கும். சேமிக்க நினைத்தாலும் முடியாது.

செவ்வாய் 10ல் வலுவாக அமர்ந்திருக்கும் நேரத்தில் தமிழ்ப் புத்தாண்டு பிறப்பதால், எதைத் தொட்டாலும் வெற்றியில் முடியும். சவாலான விடயங்களைக் கூட சர்வ சாதாரணமாக முடித்துக் காட்டுவீர்கள். புதிய பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். வீண் விவாதங்கள் நீங்கும். அரசால் அனுகூலம் உண்டு. வேலை தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு புது வேலை கிடைக்கும்.

வருடம் முழுவதும் சனியும் கேதுவும் 5ல் இருப்பதால், முடிவுகளை எடுப்பதில் குழப்பம் ஏற்படக்கூடும். வயிறு தொடர்பான பிரச்னைகள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், குடும்பச் சூழ்நிலையை அவர்களுக்குப் பக்குவமாக எடுத்துச் சொல்லிப் புரிய வைக்கவும். மகளின் திரும ணத்துக்காகக் கடன் வாங்க நேரிடும். மகனின் உயர்கல்வி, உத்தியோகம் தொடர்பான முயற்சிகள் இழுபறியாகி முடியும்.

வருடம் முழுவதும் ராகு லாபவீட்டில் இருப்பதால், பங்கு மூலம் லாபம் கிடைக்கும். வரவேண்டிய பணம் கைக்கு வந்து சேரும். வழக்குகள் சாதகமாக முடியும். ஆன்மிகப் பெரியோர்களைச் சந்தித்து ஆசி பெறுவீர்கள்.

வருடத் தொடக்கம் முதல் 18.5.2019




வரை குருபகவான் உங்கள் ராசிக்கு அதிசாரமாக 5ம் வீட்டில் அமர்ந்திருப்பதால் நினைத்த காரியம் நிறைவேறும். எதிர்பார்த்த பணம் வரும். வீடு, மனை வாங்குவீர்கள். சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். திருமணம், போன்ற சுபநிகழ்ச்சிகள் நடக்கும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும்.

ஆனால், 19.5.2019 முதல் 27.10.2019 வரை உங்களின் ராசிக்கு குருபகவான் 4ம் வீட்டில் அமர்வதால் வேலைச்சுமை அதிகரிக்கும். உணர்ச்சிவசப்படாமல் அறிவுப் பூர்வமாக முடிவெடுக்கவும். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். சொத்துப் பிரச்னையை சுமுகமாகப் பேசித் தீர்க்கவும். யாருக்காகவும் சாட்சி கையெழுத்திட வேண்டாம்.

ஆனால், 28.10.2019 முதல் 27.3.2020 வரை 5ம் வீட்டிற்கு குரு செல்வதால் எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். மகளின் திருமணத்தைச் சிறப்பாக நடத்துவீர்கள். மகனுக்கு உயர்கல்வி, உத்தியோகம் எதிர்பார்த்த நிறுவனத்தில் அமையும்.

குலதெய்வ வழிபாட்டை நிறைவேற்றுவீர்கள்.

17.12.2019 முதல் 9.1.2020 வரை சுக்கிரன் 6ல் மறைவதால் சிறுசிறு விபத்துகள் வந்து போகும். வாகனத்தை வேகமாக இயக்க வேண்டாம். கணவன் மனைவிக்கிடையே ஈகோ பிரச்சினையால் சில சங்கடங்கள் ஏற்படும்.

மாணவர்கள் அவர்கள் விரும்பிய கல்வி நிறுவனத்தில் உயர்கல்வி தொடரும் வாய்ப்பு ஏற்படும். சிலருக்கு வெளிநாடு சென்று படிக்கும் வாய்ப்பு ஏற்படும்.

வியாபாரத்தில் வருடப் பிறப்பின்போது சுக்கிரன் சாதகமாக இருப்பதால், தேங்கிக் கிடந்த சரக்குகள் விற்றுத் தீரும். ஆனி, ஆவணி மாதப் பிற்பகுதி, புரட்டாசி, தை, மாசி மற்றும் பங்குனி மாதங்கள் சாதகமாக இருக்கும். ராகு லாப ஸ்தானத்தில் இருப்பதால், புகழ் பெற்ற நிறுவனங்களுடன் கூட்டு சேர்ந்து அதிக லாபம் சம்பாதிப்பீர்கள்.

உத்தியோகத்தில் உங்களுக்கு ஏற்பட்ட அவப்பெயர் விலகும். உங்கள் செல்வாக்கு உயரும். இழந்த சலுகைகள், பதவிகளை மீண்டும் பெறுவீர்கள். அதிகாரிகளிடம் பக்குவமாக நடந்துகொள்ளவும்.

கலைஞர்களுக்குப் புதுப் புது வாய்ப்புகள் கிடைக்கும். வருமானமும் அதிகரிக்கும். இந்த புத்தாண்டு உங்களைச் சாதிக்க வைப்பதுடன், பொருளாதார ரீதியில் வளர்ச்சி தருவதாகவும் அமையும்.

# கனவுகளின் நன்மைகளும், தீமைகளும்!



நல்ல கனவாக இருந்தால் மகிழ்ச்சி, கெட்ட கனவாக இருந்தால் அதன் கடுமையை குறைக்க பரிகாரம் செய்யலாம். கெட்டகனவு கண்டவர்கள் அதை பற்றி யாரிடமும் சொல்ல கூடாது. அன்று பசுவுக்கு புல், பழம், கீரை கொடுக்க வேண்டும். அதன் முன் நின்று, தான் கண்ட கனவை மனசுக்குள் சொல்ல வேண்டும்.

நாம் காணும் ஒவ்வொரு கனவுகளுக்கும், ஒவ்வொரு பலன்கள் உண்டு. அதிலும், நாம் கண்ட கனவுகளின் நேரத்தை பொருத்து அதன் பயன்கள் அமையும். இரவில் மாலை 6 -8.24 மணிக்குள் கண்ட கனவு ஒரு வருடத்திலும், இரவு 8.24 - 10.48 மணிக்குள் கண்ட கனவு 3 மாதத்திலும், இரவு10.48 - 1.12 மணிக்குள் கண்ட கனவு 1 மாதத்திலும், இரவு 1.12 - 3.36 மணிக்குள் கண்ட கனவு 10 தினங்களிலும், விடியக்காலை 3.36 - 6.00 மணிக்குள் கண்ட கனவு உடனடியாக பலிக்கும் என்று பஞ்சாங்க சாஸ்திரங்கள் கூறுகின்றன. பகல் கனவு காண்பவர்களும் உண்டு. ஆனால், பகலில் காணும் கனவுகள் பலிப்பதில்லை.

**நற்பலன்தரும் கனவுகள்:**

* விவசாயிகள் உழுவதைப்போல் கனவு கண்டால், சேமிப்பு பெருகும்.
* வானவில்லை கனவில் கண்டால் பணம், செல்வாக்கு அதிகரிக்கும். பதவி உயர்வு கிடைக்கும்.
* ஒன்றுக்கு மேற்பட்ட நட்சத்திரங்களை கனவில் கண்டால் பதவி உயர்வு நிச்சயம் உண்டு.
* ஆசிரியர் பாடம் நடத்துவதைப் போல் கனவு கண்டால் நாம் நினைத்தது எல்லாம் நிறைவேறும்.
* கனவில் நிலவை கண்டால் தம்பதிகளிடையே அன்பு பெருகும்.
* திருமணமாகாதோர் பாம்பு கடித்து ரத்தம் வருவது போல் கனவு கண்டால், சீக்கிரம் திருமணம் நிகழும். திருமணமானோருக்கு செல்வம் வந்து சேரும்.
* இறந்தவர்களின் சடலத்தைக் கனவில் கண்டால் சுபநிகழ்ச்சிகள் நடக்கும்.
* சிறு குழந்தைகளை கனவில் கண்டால் நோயிலிருந்து விடுதலை கிடைக்கும்.
* நண்பன் இறந்ததாக கனவு கண்டால் நண்பனின் ஆயுள் கூடும்.
* உயரத்தில் இருந்து விழுவது போல் கனவு கண்டால் பணம், பாராட்டு குவியும்.
* தெய்வங்களை கனவில் கண்டால் புதையல் கிடைக்கும்.
* திருமண கோலத்தை கனவில் கண்டால், சமூகத்தில் நன்மதிப்பு உயரும்.
* தற்கொலை செய்து கொள்வதை போல் கனவு கண்டால் நொருங்கி வந்த ஆபத்துகள் நீங்கி, நன்மை பிறக்கும்.
* ஆமை,மீன், தவளை போன்ற நீர்வாழ் உயிரினங்களை கனவில் கண்டால் கவலைகள் பறந்து போகும், மனதிலே நிம்மதி பிறக்கும்.
* கர்ப்பிணியை கனவில் கண்டால் பொருள் வந்து சேரும், நலம் அதிகரிக்கும்.
* இறந்தவருடன் பேசுவதைப் போன்று கனவு கண்டால் அதிகாரம் .பதவி, லாபம் நிச்சயம் கூடி வரும்.
* மாமிசம் உண்பது போல் கனவு கண்டால் பெரிய அதிர்ஷ்டம் தேடி வரும்.
* மயில்,வானம் பாடியை கனவில் கண்டால் தம்பதிகளிடையே நெருக்கம் அதிகரிக்கும்.
* கழுதை,குதிரையை கனவில் கண்டால் வழக்குகள் சாதகமாக முடியும்.
* மலத்தை மிதிப்பதை போல் கனவில் கண்டால் சுபச்செலவுகள் ஏற்படும்.

**தீய பலன் தரும் கனவுகள்:**

- பூனையை கனவில் கண்டால் வியாபாரத்தில் திடீர் இழப்பு ஏற்படும்.
- இடியுடன் மழை பெய்வதைப் போல் கனவில் கண்டால், உறவினர்கள் விரோதியாவார்கள்.
- தேனீக்கள் கொட்டுவதை போல் கனவில் கண்டால் வீண் செலவுகள் ஏற்படும்,குடும்பம் பிரியும்.
- காக்கை கத்துவது போல் கனவு கண்டால் திருட்டு நடக்க வாய்ப்புள்ளது.
- எறும்புகளை கனவில் கண்டால் மன கஷ்டம் பொருள் இழப்பு உண்டாகும்.
- எலிகளை கனவில் கண்டால் எதிரிகள் பலம் பெருகும்.
- புயல் காற்று, சூறாவளி ஆகியவற்றை கனவில் கண்டால் நோய் உண்டாகும்.
- பழம் சாப்பிடுவது போல் கனவு கண்டால் நண்பர்களால் ஏமாற்றப்படுவீர்கள்.
- பசு விரட்டுவதை போல் கனவில் கண்டால் உடல் நலம் கெட்டு, வியாதி சூழும்.
- முட்டை சாப்பிடுவது போல் கனவு கண்டால் வறுமை ஏற்படும்.
- நோய் பிடித்ததாக கனவு கண்டால், நண்பர் ஏமாற்றுவார்.
- [illegible]தை போன்று கனவு கண்டால் சோகமான செய்தி வந்து சேரும்.
- [illegible]டுவது போல் கனவு கண்டால் செல்வாக்கு சரியும்.
- சமையல் செய்வது போல் கனவு கண்டால் அவமானம் வந்து சேரும்.
- நிர்வாண கோலத்தை கனவில் கண்டால், அவமானம் தேடி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிலவில் இசைக்க ஆசை!

ஒரே நிகழ்ச்சியில் ஒட்டுமொத்த உலகத்தையும் ஆச்சரியப்பட வைத்துவிட்டார் சென்னை யைச் சேர்ந்த லிடியன் நாதஸ்வரம். அமெரிக்காவில் தனியார் தொலைக்காட்சி நடத்திய 'தி வேர்ல்டு பெஸ்ட்' நிகழ்ச்சியில் இவரது இசை முதல் பரிசை வென்றது. இதன் மூலம் 'தி வேர்ல்டு பெஸ்ட்' என்ற பட்டத்துடன் பத்து கோடி ரூபாய் பரிசையும் பெற்றுள்ளார் லிடியன் நாதஸ்வரம்!

கர்நாடக இசையில் லிடியன் என்றால் கல்யாணி ராகம். நாதமும் ஸ்வரமும் இருக்கும் இசைக் கருவி நாதஸ்வரம் என்பதால் அதையும் சேர்த்துவிட்டார். எல்லோருக்கும் என் பெயர் கொஞ்சம் வியப்பாகத்தான் இருக்கும் என்கிறார் லிடியன்.

"என் அப்பாவும் அக்காவும் இசைக் கலைஞர்கள் என்பதால் இயல்பாகவே எனக்கும் இசையில் ஆர்வம் வந்துவிட்டது. இரண்டு வயதில் எனக்குப் பரிசாக ஸைலோபோன் இசைக்கருவிகிடைத்தது. அதை யாரும் கற்றுக்கொடுக்காமல் நானே வாசிக்க ஆரம்பித்து விட்டேனாம். அப்பாவுக்கு ஆச்சரியமாகிவிட்டது. உடனே எனக்கு டிரம்ஸ் வாங்கிக் கொடுத்தார். தபேலா, மிருதங்கம், வயலின் போன்றவற்றையும் கற்றுக்கொண்டேன்."

இவ்வளவு விஷயங்களை 12 வயதுக்குள் எப்படிக் கற்றுக்கொள்ள முடிந்தது என்று கேட்டால், "நான் இரண்டாம் வகுப்புவரைதான் பள்ளிக்குச் சென்று படித்தேன். பிறகு முழுமையாக இசைத்துறைக்கு வந்துவிட்டேன். அதனால் நிறைய இசைக் கருவிகளைக் கற்றுக்கொள்ள முடிந்தது. அக்கா பியானோ வாசிப்பார். நானும் கொஞ்சம் வாசிக்க ஆரம்பித்தேன். சீனச் சிறுவன் ஒருவன் பிரமாதமாக பியானோ வாசிப்பதைப் பார்த்தேன். என்னையும் பியானோ முழுமையாக ஈர்த்துக்கொண்டது.

8 வயதில் முறையாகக் கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன். 2 வருடங்கள் ஏ.ஆர். ரஹ்மா னின் இசைப் பள்ளியில் பியானோ கற்றுக்கொண்டேன். எங்கள் வீட்டில் டிவி கிடையாது. எனக்குப் படிப்பு, விளையாட்டு, பொழுதுபோக்கு எல்லாமே இசைதான். ஒரு நாளைக்கு 6 மணி நேரம் பியானோ வாசிப்பேன். சில நேரம் விரல்கள் வலிக்க ஆரம்பித்துவிடும்"

எந்த நிகழ்ச்சியையும் நான் சாதாரணமாக நினைத்ததில்லை. அதேநேரம் என்னுடைய வயதுக்கு அந்த நிகழ்ச்சி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்றெல்லாம் யோசித்ததும் இல்லை. எனக்கு பியானோ வாசிக்கத் தெரியும். நூறு சதவீதம் அர்ப்பணிப்போடு வாசிப்பேன்.

அப்பா உற்சாகப்படுத்த சொன்ன வார்த்தைகள் இன்று நிஜமாகிவிட்டன. ஆனாலும் 'குழந்தை இசை மேதை' என உலக இசைக் கலைஞர்களால் அழைக்கப்படும் லிடியனுக்கு, இசைஞானி இளையராஜா, ஏ.ஆர். ரஹ்மான் ஆகியோர் ஆதர்ச நாயகர்கள். 12 வயதில் உலக சாதனை நிகழ்த்திவிட்டாலும், வேறு ஏதாவது லட்சியம் இருக்கிறதா என்று கேட்டதற்கு, "உலகப் புகழ்பெற்ற இசையமைப்பாளர் பீத்தோவன் உருவாக்கிய 'Moonlight Sonata' இசையை நிலவுக்குச் சென்று வாசிக்க ஆசை. 'ஸ்பேஸ் எக்ஸ்' என்ற நிறுவனம் எதிர்காலத்தில் நிலவுக்கு இருபது கலைஞர்களை அழைத்துச் செல்லத் திட்டமிட்டுள்ளது. என்னையும் அவர்கள் தேர்ந்தெடுப்பார்கள் என்று நம்புகிறேன்.



# கலிலியோ கலிலி

விஞ்ஞானி கலிலியோ உண்மையை உலகுக்கு எடுத்துக் கூறியவர். கலிலியோ இத்தாலிய விஞ்ஞானி. எமது சூரிய குடும்பத்தின் அமைப்பு, வானசாஸ்திரம் ஆகியவை குறித்து புதிய விடயங்களைக் கண்டுபிடித்து அறிந்தவர். அவருடைய கண்டுபிடிப்புகள்தான். புதிய சிந்தனையை உருவாக்கின.

இத்தாலியின் பிசா நகரில் 1564ஆம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் திகதி பிறந்த இவர் 1642ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி இறந்தார். இவர் வானவியல் அறிஞர். வேதியல் வல்லுநர். கணிதவியலாளர், தத்துவஞானி, கண்டுபிடிப்பாளர் எனப் பன்முக ஆற்றல் பெற்றவர். தொலைநோக்கி, கொம்பாஸ், தேர்மா மீற்றர் ஆகியவை இவரது கண்டு பிடிப்புகளில் முக்கியமானவை.

இயற்பியலின் தந்தை நவீன சங்கிலியனின் தந்தை. நவீன வானியலின் தந்தை என்றெல்லாம் அழைக்கப்படுகிறார். 1610ஆம் ஆண்டு வியாழன் கிரகத்தை நான்கு பொருள்கள் சுற்றுவதைக் கண்டு பிடித்தார். இவை வியாழனின் மிகப் பெரிய நிலவுகளாகும். லோ, கவிஸ்டோ, ஈரோப்பா கனிப்பீடு என்றும் இவை அழைக்கப்படும்.

கலிலியோ, கோபர் நி கோலஸ், ஜோகன்னஸ் கெல்லர் ஆகியோரிக் ஆய்வுகள் முதன்முறையாக சூரியனை நடு நாயகமாகக்கொண்டு பூமி உள்ளிட்ட கோள்கள் சுற்றி வருவதாக நிரூபித்தார். பூமியின் கடல் சாலைகள் உருவாகுவதற்கு நிலவுதான் காரணம் என்ற கெப்லரின் கோட்பாட்டை ஏற்க கலிலியோ மறுத்தார்.

# கொக்....கொக்....



கொக்கொக் சேவல்
கொக்கரக்கோ சேவல்! அழகுக்
கொண்டை உள்ள சேவல் உன்
கொக்கரக்கோ உலகை எழுப்புகிறதே!
(கொக்)


கொள்ளையழகு இறகு வாலும்
கொற்றவனாய்
உன்னைக் காட்டும்
கொக் கொக் கொக்காம்
கொக்கியால் கோழியை வளைக்கிறாய்
(கொக்)

கொண்டைச் சேவல் கொக்கரக்கோ
கொல்லையில் நின்று கூவுவாய்
கொக்கரக்கோ கொடியை ஏற்றி
கொக்கரித்து நாளைத் தொடங்குகிறாய்
(கொக்)

வெள்ளை கறுப்பு சேவல்
கொள்ளையிடும் கலப்புநிறம்
உள்ளம் கவரும் கொக்கரக்கோ
உள்ளபடி ஒன்றுதான்
(கொக்)







# நல்வழி காட்டுங்கள்

- எது இதமானது? *தர்மம்*
- எது நஞ்சு? *பெரியவர்களின் அறிவுரையை அவமதிப்பவர்.*
- எது மதுவைப்போல மயக்கம் தரும்? *பற்று*
- யார் கள்வர்கள்? *புலன்களை இழுத்துக்கொண்டுபோகும் விடயங்கள்*
- யார் எதிர்? *சோம்பல்*
- எதற்கு எல்லோரும் பயப்படுவார்கள்? *சாவுக்கு*
- எவன் குருடனை விடக் குருடன்? *ஆசைகள் உள்ளவன்*
- எவன் சூரன்? *கெட்ட வழியில் மனம் செல்லாமல் அதை அடக்குபவன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## விரைந்து மீண்டெழ வேண்டும் நாட்ரே டாம் தேவாலயம்

பிரான்சின்தலைநகர்பரிஸில்அமைந்துள்ளஅந்த நாட்டுப் பாரம்பரியமும் யுனெஸ்கோ அமைப்பின் தொல்பொருள் சின்னமுமான நாட்ரே டாம் தேவாலயத்தில்கடந்தசெவ்வாய்க்கிழமைமிகப்பெரும் தீ விபத்து ஏற்பட்டது. இந்த இடரில் அந்தத் தேவாலயத்தின் கணிசமான பகுதிகள் எரிந்து சாம்பராயின. தேவாலயம் துரிதமான கதியில் மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டும் என்பதே உலகளாவிய எண்ணமுமாக உள்ளது.

நாட்ரே டாம் தேவாலயம் கத்தோலிக்க திருச்சபையுடன்மிகவும் ஆழமானவகையில் நெருங்கித் தொடர்புறுகின்றது. ஏனெனில் அந்தத் தேவாலயத்தில்வைக்கப்பட்டிருந்த பொருள்கள் அத்துணை பெறுமதியானவை, கனதித்தன்மை கொண்டவை. சிலுவையில் ஏற்றப்படும்முன்னர்இயேசுக்கிறிஸ்து அணிந்திருந்தார் என்று நம்பப்படும் முள் கீரிடம், சிலுவையின் ஒரு பகுதி, ஓர் ஆணி, மன்னர் ஒன்பதாம் லூயிஸ் பயன்படுத்தினார் என்று நம்பப்படும் ஆடை ஆகியவை அந்தப் பொருள்களில் அடங்குகின்றன. இதனால்தான் நாட்ரே டாம் உலகின் கவனத்தை வெகுவாகஈர்த்துள்ளது, கட்டிப்போட்டுள்ளது. அமெரிக்க அதிபர்ட்ரம்ப் முதல்கொண்டு இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த வரை இந்த இடருக்கு தமது அனுதாபத்தைத் தெரிவித்தமை இதனால்தான்.


அந்தத் தேவாலயத்தில் இருந்த ஓவியங்கள் வரும் வெள்ளிக்கிழமை முதல் அங்கிருந்து அகற்றப்படும் என்று அமைச்சர் பிராங்க் ரெய்ஸ்ட்டர் தெரிவித்துள்ளார். அடுத்த ஐந்து ஆண்டுகளில் தேவாலயம் மீண்டும் சீர்செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் காட்சியளிக்கும் என்று பிரான்ஸின் அதிபர் இம்மனுவல் மக்ரோன் தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டு பரிஸ் நகரில் ஒலிம்பிக் தொடர் நடத்தப்படவுள்ளது. இந்தத் தொடரைப் பார்க்க வரும் மக்கள் நாட்ரே டாம் தேவாலயத்தையும் பார்த்துச் செல்லும் வகையில் கட்டுமானங்கள் துரித கதியில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதுதான் பிரான்ஸ் அரசின் இலக்காகவும் உள்ளது. எனினும் அதற்கு சாத்தியமில்லை என்றவாறாகக் கருத்துத் தெரிவித்துள்ளார் தேவாலயத்தின் சீரமைப்புக்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் தலைவர். நாட்ரே டாம் பழைய நிலையை அடைவதற்கு இன்னும் சில ஆண்டுகள் ஆகும் என்கிறார் அவர்.

எது எவ்வாறாக அமைந்தாலும் நாட்ரே டாம் தேவாலயம் கூடிய விரைவில் சீர்செய்யப்பட வேண்டும் என்பதுதான் அனைவரினதும் பேரவா. ஆனால் பிரான்ஸ் அரசின் தனிப் பங்களிப்பு அல்லாமல் உலகளாவிய பங்களிப்புடன் அந்தத் தேவாலயம் மீண்டெழ வேண்டும்.

ஏனெனில் நாட்ரே டாம் இருப்பது வேண்டுமானால் பரிஸிலாக இருக்கலாம். ஆனால் அது உலகளாவிய சொத்து, பாம்பரியம். உலக மரபுரிமையான இந்த தேவாலயத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு இலங்கையர்கள்என்றவகையில், ஏதேனும் ஒத்துழைப்பை வழங்கமுடியுமாயின் அதனைசெய்வதற்குதயாராக இருக்கின்றேன் என்று தெரிவித்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, விரைந்து அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் ஏலவே குறிப்பிட்டதுபோன்று நாட்ரே டாம் உலகின் சொத்து.

# சோதனைக்களமாக மாறியுள்ள இலங்கையின் அதிபர் தேர்தல்



சேரலாதன்

அரச அதிபர் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன களமிறங்குவது ஓரளவு உறுதியாகிவிட்டது. தமது கட்சி ஆதரவாளர்களிடையே அவர் இதைத் தெரிவித்துவிட்டார். இனியும் மகிந்த தரப்பினரை நம்புவதால் பயனொன்றும் கிடைக்கப்போவ தில்லையெனத் தெரிவித்த அவர் கோத்தபாய அல்லது வேறு எவர் அரச அதிபர் தேர்தலில் போட்டியிட்டாலும் தமது முடிவில் மாற்றம் ஏற்படப்போவதில்லையெனவும் தெரிவித்துவிட்டார். தாம் போட்டியிடுவது தொடர்பாகப் பகிரங்கமாகத் தெரிவித்து வருவதாகவும் கட்சித் தொண்டர்களும் அவ்வாறே செய்யவேண்டுமெனவும் அவர் கோரிக்கையும் விடுத்துள்ளார்.

### மகிந்த -மைத்திரி இணைவு இல்லை

மகிந்தவும் மைத்திரியும் இனிமேல் இணைந்து கொள்ள மாட்டார்களென்பதை அரச தலைவரின் செயல்கள் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. கடந்த தடவையும் மகிந்தவுக்குச் சவால்விட்டுத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு அவரால் முடிந்தது.

ஆனால் இம்முறை வெற்றி வாய்ப்பு இலகுவானதல்ல என்பதை அறிந்திருந்தும் மைத்திரி துணிந்து களத்தில் இறங்குவதற்குத் தீர்மானித்துவிட்டார். முன்னாள் பாதுகாப்புச் செயலரான கோத்தபாய அரச அதிபர் தேர்தலில் தாமே வேட்பாளராக நிற்கப்போவ தாகக் கூறிவந்தார். இனவாதிகளும் அடிப்படைவாதிகளும் இவ்வரை ஆதரித்தனர். இவர் அரச தலைவராக வந்துவிட்டால் தமது எண்ணம் இலகுவாக நிறைவேறி விடுமென இவர்கள் நினைக்கின்ற னர். அதுமட்டுமல்லாது சிறுபான்மையி னர் தமது உரிமைகள் தொடர்பாகப் பேச முடியாது என்பதும் இவர்களது நம்பிக்கையாகும். ஆனால் கோத்தபாய அமெரிக்கா சென்ற கையோடு இவர்களது நம்பிக்கையும் தகர்ந்துவிட்டது.

இலங்கைச் சிறைச்சாலையொன்றில் தடுத்து வைக்கப்பட்டு கடுமையான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்ட றோய் சமாதானம் என்ற ஈழத் தமிழர் கோத்தபாயவுக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றமொன்றில் தொடர்ந்த வழக்கு கோத்தபாயவைப் பெரும் சங்கடத்தினுள் தள்ளிவிட்டது. அமெரிக்க நாட்டுச் சட்டதிட்டங்களின் பிரகாரம் உலகின் எப்பாகத்திலும் சித்திரவதைகள் இடம்பெற்றாலும் அதை அமெரிக்காவில் விசாரித்துத் தண்டனையை வழங்க முடிவும்.

கோத்தபாய அமெரிக்கக் குடியுரிமையைக் கொண்டிருப்பதால் அவருக்கு எதிரான வழக்கை விசாரிப்ப தற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே உள்ளன. அவர்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படு மானால் அவர் உரிய தண்டனையை அனுபவித்தே தீரவேண்டும்.

இதனால் இலங்கையில் இடம்பெறப்போகும் அரச அதிபர் தேர்தலில் அவரால் போட்டியிட முடியாமல் போய்விடும். அரசமைப்பின் பிரகாரம் மகிந்த தேர்தலில் போட்டியிட முடியாது என்பதால் அரச அதிபர் தேர்தலில் வேறொரு வேட்பாளரைத் தெரிவுசெய்ய வேண்டிய நெருக்கடிக்குள் மகிந்த தரப்பு தள்ளப்பட்டுள்ளது.

### ரணிலின் ஆட்சியை கலைப்பாரா மைத்திரி

தேர்தலில் மறுமுறையும் போட்டியிடமாட்டேனென ஏற்கனவே தெரிவித்த மைத்திரி தற்போது தாம் கூறியதை மறந்து தேர்தலில் இரண்டாவது தடவையும் போட்டியிடுவதற்காக முனைப்பு டன் காணப்படுகிறார். அவர் மீண்டுமொரு தடவை அரசியல் குழப்பமொன்றை ஏற்படுத்தி ரணில் அரசைக் கவிழ்த்து விடுவதற்கான இரகசியத் திட்டமொன்றையும் கொண்டிருப்பதாகச் செய்திகள் கசிந்துள்ளன. இதில் எந்த அளவுக்கு உண்மையுள்ளது என்பதை உறுதியாகக் கூற முடியவில்லை. ஆனால் அதை முற்றாக மறுத்துரைக்க முடியவில்லை.

மகிந்த தரப்பின் ஆதரவின்றியும் ரணிலைப் பகைத்துக்கொண்டும் அரச அதிபர் தேர்தலில் போட்டியிடுவது என்பது மைத்திரியைப் பொறுத்தவரையில் ஓர் அக்கினிப் பரீட்சையாகவே மாறி விடுமென்பதை உறுதியாகக் கூறமுடியும். கடந்த தடவை போன்று ரணில் சந்திரிகா ஆகியோரின் ஆதரவும் தமிழர்களின் ஆதரவும் இவருக்கக் கிடைக்கப்போவதில்லையென்பது உறுதியாகிவிட்டது. அந்த அளவுக்கு மைத்திரி அவர்களைக் காயப்படுத்திவிட்டார்.

### கோத்தபாய போர்க்குற்றவாளியென போட்டுடைத்தார் சந்திரிக்கா

அதேவேளை கோத்தபாய தொடர்பாக சந்திரிகா அம்மையார் வெளிப்படையாகவே தமது கருத்தைத் தெரிவித்து விட்டார். போர்க்குற்றவாளிகள் அரச தலைவராக முடியாது என அவர் கூறியமை இறுதிப் போரில் போர்க் குற்றங்கள் இடம்பெற்றதையும் கோத்தபாயவுக்கும் அதில் தொடர்புள்ளது என்பதையும் எடுத்துக்காட்டிவிட்டன.

அரச அதிபர் தேர்தலில் போட்டியிடுபவர்கள் சகல இனத்தவரையும் திருப்திப்ப டுத்தக்கூடிய ஒருவராக இருப்பது அவ சியமானதாகும். இந்தத் தகைமையைக் கோத்தபாய எப்போதோ இழந்துவிட்டார். அவர் பாதுகாப்புச் செயலராகப் பதவி வகித்தபோது சகல இனமக்களும் பாதிப்பை எதிர்கொண்டிருக்கிறார்கள்.

ஆள்கள் கடத்திக் கொல்லப்படுவதும் சித்திரவதைக்கு ஆளான பின்னர் கொல்லப்படுவதும் சாதாரணமாகவே இடம்பெற்றிருக்கின்றன. அவரது சகோதரர் அரச தலைவராக இருந்ததால் இவரால் வரம்புமீறிச் செயற்பட முடிந்தது. மைத்திரிபால சிறிசேன பதவிக்கு வந்தவுடக் தாம் அளித்த வாக்குறுதிகளை மறந்து செயற்பட ஆரம்பித்தார். குறிப்பாகத் தம்மைப் பதவியில் அமர்த்திய தமிழர்களை அவர் அறவே மறந்துவிட்டார். அவர்களுக்கான தீர்வு தொடர்பாக இவர் எள்ளளவும் சிந்திக்க வில்லை.

இந்த நிலையில் சம்பந்தன் முன்னர் புரிந்த தவற்றை மீண்டும் புரியமாட்டார் ஆகவே அரச அதிபர் தேர்தல் மகிந்த தரப்புக்கும் மைத்திரி தரப்பினரும் ஒரு அக்கினிப் பரீட்சையாகவே அமையப் போகின்றது என்பதை உறுதியாகக் கூற முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வில்லூன்றியில் சித்திராப் பூரணை

யாழ்ப்பாணம்,ஏப் .18
வில்லூன்றி புனித தீர்த்தத்தில் சித்திரா பூரணை நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை வழமைபோல் மிகச் சிறப்பாக இடம்பெறவுள்ளது.

வில்லூன்றி விநாயகர் ஆலயத்தில் அதிகாலை சிறப்பு அபிசேகம்,பூசைகளும் இடம்பெற்று காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெறும். காலை 8 மணிக்கு வில்லூன்றி புனித தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெற்ற பின்னர் பொது மக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று ஆலய தர்ம பரிபாலன சபை அறிவித்துள்ளது. (ஜ)

## அனைத்து அஞ்சல் முத்திரைகளையும் பார்வையிடலாம்

சாவகச்சேரி ஏப். 18
நாட்டில் அஞ்சல் சேவை ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் நேற்று வரை அஞ்சல் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட அஞ்சல் தலைகள் பற்றிய விபரங்கள் அடங்கிய தொகுதிப் படங்கள் முதன்முறையாக சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அஞ்சலகத்துக்கு வரும் பொதுமக்கள் மத்தியில் அஞ்சல் தலைகள் பற்றிய விபரங்களைஎடுத்தும்கூறும்விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் 50க்கு மேற்பட்ட தொகுப்புகள் கண்ணாடியில் பிரேம் செய்யப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அஞ்சலகத்துக்கு வரும் மாணவர்கள் உட்பட பொதுமக்கள் ஆரம்ப காலம் தொடக்கம் வெளியான அஞ்சல் தலைகளின் (முத்திரைகளின் ) விபரங்களை அறியக் கூடியதாக உள்ளது. எனத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தால் வருடாந்தம் பன்னாட்டு அஞ்சல் மாதவேளைகளில் பாடசாலைகள் உள்ளிட்ட இடங்களில் அஞ்சல் தலைகள் பற்றிய விபரங்கள் காட்சிப்படுத்தி மக்களுக்கு அஞ்சல் தலைகளின் பாவனை தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (ஜ-9)

## தொழில் தேடும் இளையோர் பதிவு செய்யவும்

யாழ்ப்பாணம்,ஏப். 18
யாழ்ப்பாண மாவட்ட செயலக தொழில் நிலையம், பிரதேச செயலகங்களுடன் இணைந்து தொழில் தேடும் இளையோருக்கு தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக பதிவுகள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் ஊர்காவற்றுறை , வேலனை,மற்றும் காரைநகர் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள தொழில் தேடுவோருக்கான பதிவுகள் இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை மேற்குறிப்பிட்ட பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட சகல கிராம அலுவலர் அலுவலகத்திலும் மேற்கொள்ளப்படவுள்ளன. (ஜ)

# நிலக்கீழ் குழாய் மூலம் வடக்குக்கு குடிதண்ணீர்

### ஈரானிய அரசிடம் உதவி கோருகிறார் வடக்கு மாகாண ஆளுநர்

*யாழ்ப்பாணம்,ஏப். 18*
*வடக்கு மாகாணத்தின் குடி தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க மத்திய மாகாணத்திலிருந்து நிலக்கீழ் குழாய் மூலம் வடக்குக்கு குடி தண்ணீரைக் கொண்டுவருவதற்கு ஈரானிய அரசிடம் வடக்கு மாகாண ஆளுநர் உதவிகோரியுள்ளார்.*





வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கும் இலங்கைக்கான ஈரான் தூதுவர் மொகமட் சீரி அமிரனிக்கும் இடையில் நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள ஈரானிய தூதரகத்தில் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போதே ஆளுநர் இந்த உதவியைக் கோரியுள்ளார்.

இதற்குச்சாதகமானசமிக்ஞை வெளியிட்ட ஈரானிய தூதுவர், முதற்கட்டமாக இது தொடர்பிலான சாத்தியமான வழிகளை ஆராயும் பொருட்டு இத்துறையில் நிபுணத்துவம் பெற்ற ஈரானின் மூன்று நிறுவனங்களை எந்தவித கட்டணங்களும் இல்லாமல் தன்னார்வ ரீதியில் இலங்கைக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக குறிப்பிட்டார்.

மேலும் இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாணத்தில் கனேடிய அரசால் மேற்கொள்ளக் கூடியதான அபிவிருத்தி உதவிகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன் கனேடிய அரசின் ஆசிய விவகாரங்களுக்கான பணிப்பாளரின் இலங்கை வருகை குறித்தும், இவ்வருகையின்போது கனேடிய அரசால் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்க கூடியதான நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன என்று ஆளுநர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-7)

## பொலித்தீன் பாவனை தொடர்பில் விழிப்புணர்வுப் பேரணி திங்களன்று

சாவகச்சேரி ஏப்.18
பொலித்தீன் பாவனையிலிருந்து முற்றாக விடுபட மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வுப் பேரணி இடம்பெறவுள்ளது.

உலக புவி தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி நகரப் பகுதியில் எதிர்வரும் 22ஆம்திகதிதிங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு பொலித்தின் பாவனையைத் தடுப்போம் என்னும் தொனிப் பொருளில் இந்தப் பேரணி இடம்பெறவுள்ளது.

வர்த்தகர்கள், வியாபாபரிகள், அரச பணியாளர்கள், பொதுமக்கள் இணைந்து பேரணியினை சங்கத்தானையிலிருந்து ஆரம்பித்து ஏ 9 முதன்மைச் சாலையூடாக வந்து சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் முடிவுறுத்தி நகர சபையினால் பொலித்தீன் பாவனையை முற்றாகத் தடை செய்வதற்கு எடுக்கப்படும்தீர்மானத்துக்கு தாங்கள் பரிபூரணமான ஒத்துழைப்பினை வழங்குவோம் என்னும் மனுவை தவிசாளரிடம் கையளிக்கவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

முதல்கட்டமாக பிரதி திங்கட்கிழமைகளில் பொலித்தீன் பாவனையை நிறுத்தவும் நகரப் பகுதி வர்த்தகர்கள் வியாபாரிகள் முடிவு செய்துள்ளனர்.

சாவகச்சேரி நகரசபையின் ஏற்பாட்டில் பொலித்தீன் அற்ற நகரமாக மாற்றும் திட்டத்தின் கீழ் பொலித்தீன் பொருள்கள் பாவனையை நிறுத்துவது தொடர்பாக நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட கருத்தமர்வில் கலந்து கொண்ட வியாபாரிகள் மற்றும் வர்த்தகர்கள் இவ்வாறு ஏகமனதாக முடிவு செய்துள்ளனர். அத்துடன் சந்தை வர்த்தகர்கள் வியாபாரிகளின் பாவனைக்கென பெருமளவு துணிப் பைகள் தயாரிக்கப்பட்டுள்ளன எனவும் துணியில் தயாரிக்கப்பட்ட பைகள் தேவைப்படுவோர் சாவகச்சேரி நகரசபை பொது சுகாதாரப் பரிசோதகருடன் தொடர்பு கொண்டு தேவையான அளவு துணிப்பைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் சாவகச்சேரி பொதுச் சந்தையில் திங்கட்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் பொருள்களுக்கு இலவசமாக பொலித்தீன் பைகள் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டு அவற்றிற்கான பணம் செலுத்தி பைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் பொதுமக்களைக் கேட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து வர்த்தக நிலையங்களுக்குஅனுப்பப்படும்பொருள்கள்பொலித்தீன்பைகளில் அடைத்து அனுப்பப்படுகிறது எனவும் அவ்வாறான பொலித்தீன் பைகளில் பொருள்கள் அனுப்புவதைத் தடை செய்யவேண்டுமெனவும் வர்த்தகர்கள் கேட்டுள்ளனர்.

முதல் கட்டமாக பொலித்தீன் பாவனையை முற்றாக நிறுத்துவது தொடர்பாக நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் தொடர்ச்சியாக மூன்று தினங்கள் பொலித்தீன் பாவனை தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையிலான பதாகைகளை தமது வர்த்தக வியாபார நிலையங்களில் காட்சிப்படுத்தி 22 ஆம் திகதி தொடக்கம் பொலித்தீன் அற்ற நகரமாக மாற்ற வர்த்தகர்களும் வியாபாரிகளும் முடிவு செய்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இரு வருடங்களுக்கு முன்னர் புகைத்தலுக்கு எதிரான அமைப்பினர் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் பயனாக வெள்ளிக்கிழமைகளில் வர்த்தக நிலையங்களில் புகையிலை உற்பத்திப் பொருள்கள் விற்பனையை நிறுத்தி வைத்து நாட்டில் முன்னுதாரணமாகச் செயற்பட்டனர் என்பதும் இந்த முயற்சியினால் பல வர்த்தக நிலையங்களில் புகையிலை உற்பத்திப் பொருள்கள் விற்பனை முற்றாக நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-9)

## அவசர சிகிச்சை பிரிவு திறப்பு

யாழ்ப்பாணம்,ஏப். 18
தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் அமரத்துவமடைந்த மருத்துவர் இரகுபதி ஞாபகார்த்தமாக அவசர சிகிச்சைப் பிரிவு ஒன்று நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள் ளது. இந்த அவசர சிகிச்சைப் பிரிவை மருத்துவர் இரகுபதியின் பாரியார் திறந்துவைக்க உள்ளார். (ஜ)

## தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம், ஏப்.18
சண்டிலிப்பாய் சீரணி அருள்மிகு நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தத் தேர்த் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணிக்கு தேர் திருவிழா நடைபெறும். மறுநாள் முற்பகல் 10.30 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும். (க)

## மண்புழு பசளைத் தொட்டி அமைக்க 50வீத மானியம்

யாழ்ப்பாணம்,ஏப்.18
யாழ்ப்பாண மாவட்டத்தில் மண்புழு பசளைத் தொட்டி அமைப்பதற்கு 50வீத மானியம் வழங்க அரசதலைவர் செயலகம் முன்வந்துள்ளது என்று மாவட்டச் செயலக விவசாய பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

நஞ்சற்ற உணவை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற எண்ணக்கருவில் விவசாய உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கு அரச தலைவர் செயலகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இயற்கை முறையில் விவசாய உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் கூட்டுப்பசளை தயாரிப்புக்கு என்று கடந்த வருடம் நிதி ஒதுக்கப்பட்டது. அதே போன்று இந்த வருடமும் விவாசாய உற்பத்திக்கு மண் புழு உர தொட்டி அமைப்பதற்கு நிதி ஒதுக்கப்படவுள்ளது.

சாதாரண கூட்டு பசளையை விட மண் புழுவுடன் கூடிய உரத் தொட்டியில் உற்பத்தி செய்யப்படும் பசளை அதிக விளைச்சலைக் கொடுக்கக் கூடியது.

ஆகவே இதனை அடிப்படையாகக் கொண்டு இந்த தொட்டிகளை அமைப்பதற்கு 50 வீத மானிய அடிப்படையில் நிதி ஒதுக்கீடுகளை வழங்கவுள்ளது.

முதற் கட்ட மாக காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 10 மண் புழு உரத் தொட்டிகள் அமைப்பதற்கு நிதி ஒதுக்குவதற்கு அரச தலைவர் செயலகம் முன்வந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருடாந்த பெருந்திருவிழா

சண்டிலிப்பாய்,ஏப். 18
யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 3 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.
இன்று வியாழக்கிழமை சப்பறத் திருவிழாவும், நாளை வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் நாளை மறுதினம் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.
உற்சவ காலங்களில் தினமும் இரவு 8 மணிக்கு ஆசிரிய ஆலோசகர் பிரசங்கப் பூசனம் சைவப் புலவர் செ. கந்தசத்திய தாசன் தெய்வீகத் தொடர் சொற்பொழிவை ஆற்றி வருகிறார். (ஐ)

★★★★

யாழ்ப்பாணம், ஏப். 18
அளவெட்டி அழகரெல்லை முத்து விநாயகர் ஆயல வருடாந்தப் பெருந்திரு விழா கடந்த 9 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.
இன்று வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும் நாளை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.
தினமும் மாலை 6 மணி தொடக்கம் 7 மணிவரை விநாயகர் மகத்துவம் என்னும் தலைப்பில் தெய்வீகத் தொடர் சொற்பொழிவை பிரசங்கப் பூசனம் சைவப் புலவர் செ.கந்தசத்தியதாசன் நிகழ்த்தி வருகிறார். (ஐ)

## பரு. சிவனுக்கு குடமுழுக்கு

வடமராட்சி,ஏப். 18
புலோலி திருவருள் மிகு சிறி பர்வதவர்த்தனி சமேத சிறி பசுபதீஸ்வரர் சுவாமி (பருத்தித்துறை சிவன்) ஆலயத்தின் குடமுழுக்கு எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.05 மணிமுதல் 10.25 மணிவரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.
இதற்கான கிரியைகள் நாளை வியாழக்கிழமை காலை 9 மணி முதல் ஆரம்பமாகவுள்ளது.
24 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிமுதல் மறுநாள் 25 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4 மணி வரைஅடியார்கள் எண்ணைக்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்
கோவில் குருமணி சிவ சாரங்கன் குருக்கள் உதவியுடன் சிவசிறி வேதாரணிக்குருக்கள் திருமுறை ஓத நயினாதீவு சிறி நாகபூசனி அம்மன் ஆலய முதன்மை சிவாச்சாரியார் சாகித்திய சிரோமணி நயினை குருமணி சிவஶ்ரீ வை.மு.ப முத்துக்குமார சுவாமிக்குருக்கள் குடமுழுக்கை நடத்துவார்.
கும்பாபிஷேகத்தை தொடர்ந்து நல்லை ஆதீன சுவாமிகள் சிறிலசிறி சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய தர்மகர்த்தா சபைத்தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறுமுகதிருமுருகன் ஆகியோர் அருளுரை வழங்குவார்கள்.
தொடர்ந்து 8 நாள்கள் மண்டலாபிஷேகம் இடம் பெறும். என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-173)

### கடுமையான வறட்சியை அடுத்து

# நெடுந்தீவில் குதிரைகளுக்கு தண்ணீர் வழங்கப்படுகின்றது

*யாழ்ப்பாணம்,ஏப். 18*
**க**டுமையான வறட்சியை அடுத்து நெடுந்தீவில் குதிரைகளுக்கு குடிதண்ணீர் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.



வனஜீவராசிகள் திணைக்களத்தின் உதவியுடன் குதிரைகளுக்கென அமைக்கப்பட்ட தொட்டிகளில் தினமும் குடி தண்ணீர் வழங்கும் பணிகள் இடம்பெற்று வருவதாக நெடுந்தீவு பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.
அதனைவிட பொது மக்களுக்குத் தேவையான குடி தண்ணீர் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவியுடன் இந்த குடிதண்ணீர் வழங்கப்பட்டு வரு கின்றது. சாராப்பிட்டியில் உள்ள நன்னீர் கிணற்றில் இருந்தும் மற்றும் தேசிய குடிதண்ணீர் வழங்கல் அபி விருத்தி அதிகார சபையிடம் இருந்தும் குடிதண்ணீர் பெறப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.
கடுமையான வறட்சி வெப்பத்தால் இந்தப் பிரதேசங்களில் உள்ள நீர்நிலைகளில் தண்ணீர் மட்டம் வெகுவாகக் குறைந்து காணப்படுகின்றன. (ஐ-17)

## பல்கலைக் கழக பண்பாட்டில் பகிடிவதை

*சிறப்புக் கலந்துரையாடல்*

யாழ்ப்பாணம்,ஏப். 18
சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் "பல்கலைக்கழகப் பண்பாட்டில் பகிடிவதை" என்ற தலைப்பிலான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.
கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
இக் கலந்துரையாடலில் அரசியல், பொருளாதார, சமூக, விஞ்ஞான, கலை, இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ஐ)

## அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பில் மக்கள் சந்திப்பு

பருத்தித்துறை, ஏப். 18
பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மேற்கொள்வது தொடர்பான மக்கள் சந்திப்பு நேற்று தொடக்கம் நடத்தப்பட்டு வருகின்றன.
உள்ளூராட்சி திணைக்களத்தால் உள்ளூராட்சிச் சபைகளின் ஒவ்வொரு வட்டாரத்திலும் மக்களின் தெரிவின் பிரகாரம் வேலைத் திட்டங்களை முன்னெடுக்குமாறு அறிவிக்கப்பட்டது.
இதன்படி முதற்கட்டமாக நேற்று 3ஆம் வட்டார மக்களுக்கான சந்திப்பு இடம்பெற்றது.
இன்று வியாழக்கிழமை 5 ஆம் வட்டார மக்களுக்கான சந்திப்பு உதயசூரியன் க.தொ.கூ.சங்கத்தில் மாலை 4 மணிக்கும், நாளைமறுதினம் சனிக்கிழமை 2ஆம் வட்டார மக்களுக்கான சந்திப்பு பருத்தித்துறை நகர மகளிர் கிராம அபிவிருத்தி சங்கத்தில் முற்பகல் 10 மணிக்கும், அன்றைய தினம் 6ஆம் வட்டார மக்களுக்கான சந்திப்பு தும்பளை மேற்கு சனசமூக நிலையத்தில் பிற்பகல் 3.30 மணிக்கும், 8ஆம் வட்டார மக்களுக்கான சந்திப்பு 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு விநாயகர் முதலியார் வீதியில் அமைந்துள்ள ஞானாலயம் மண்டபத்திலும், அன்றைய தினம் 07ஆம் வட்டார மக்களுக்கான சந்திப்பு பிற்பகல் 3 மணிக்கு மாதனை சனசமூகநிலையத்திலும், 22 ஆம் திகதி திங்கட்கிழமை 4ஆம் வட்டார மக்களுக்கான சந்திப்பு முற்பகல் 10.30 மணிக்கு 4ம் குறுக்குத்தெரு வில் அமைந்துள்ள ராஜாராணி சேவை நிலையத்திலும், அன்றைய தினம் 9ஆம் வட்டார மக்களுக்கான சந்திப்பு மாலை 4 மணிக்கு ஆத்தியடி பிள்ளையார் கோவில் மண்டபத்திலும், முதலாம் வட்டார மக்களுடனான சந்திப்பு எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு சுப்பர்மடம் பொதுநோக்கு மண்டபத்திலும் இடம்பெறவுள்ளன என்று பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

## தமிழ் அரசுக் கட்சி மாநாடு 26ஆம் திகதி யாழ். நகரில்

*கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தனும் கலந்துகொள்கிறார்*

யாழ்ப்பாணம், ஏப். 18
தமிழ் அரசுக் கட்சியின் மாநாடு, தந்தை செல்வாவின் 42 ஆவது நினைவு நாள் அன்று முற்பகல் 9 மணிக்கு தந்தையின் தூபி முன்னிலையில் மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்துவதுடன் ஆரம்பமாகவுள்ளது.
இவ்வாறு 26ஆம் திகதி தந்தை செல்வாவின் வழமையான நிகழ்வுகள் ஆரம்பிக்கப்படும்போதும் நினைவுப் பேருரை இந்தமுறை நினைவிடத்தில் இடம்பெறமாட்டாது. முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் தந்தை செல்வா ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட மண்டபத் திறப்பு விழா இடம்பெறும். இதில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கலந்துகொள்வார்.
மாலை 4 மணிக்கு கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் மாட்டீன் வீதியில் உள்ள கட்சித் தலைமையகத்தில் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா தலைமையில் நடைபெறும். மறுநாள் 27ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு பொதுக் குழுக் கூட்டம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் ஆரம்பமாகும். இதில் கட்சியின் அலுவலர்கள் மற்றும் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் தேர்வு இடம்பெறும். பிற்பகல் 3 மணிக்கு மாதர் முன்னணியும் மாலை 5 மணிக்கு வாலிபர் முன்னணிக் கலந்துரையாடலும் இடம்பெறும்.
28ஆம் திகதி இறுதிநாள் நிகழ்வுகள் முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பிக்கும். தந்தை செல்வா நினைவுச்சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்படும். அங்கிருந்து வீரசிங்கம் மண்டபத்துக்குச் சென்று கட்சிக்கொடியேற்றத்துடன் பேராளர் மாநாடு ஆரம்பமாகும்.
மாநாட்டில் கட்சியின் அங்கத்தவர்கள் கலந்துகொள்வார்கள். பொதுக் கூட்டம் பிற்பகல் 3.30 மணிக்கு சங்கிலியன் பூங்காவில் இடம்பெற்று மாநாட்டுத் தீர்மானங்கள் சிறப்புரைகள் என்பன இடம்பெறும். இதில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட பலரும் கலந்து கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-105)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம்,ஏப். 18
யாழ்ப்பாணம் தொல்புரம் மேற்கு மன்னன்தோட்டம் ஜெகஜோதி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்றுப் புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அபிசேகத்துடன் ஆரம்பமானது.
தொடர்ந்து பதினொரு நாள்கள் உற்சவம் இடம்பெற்று எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை அம்பிகைக்குரிய அபிசேகத்தை தொடர்ந்து மதியம் மகேஸ்வரபூஜை இடம்பெறும்.
மாலை அம்பிகை எழுந்தருளி திருவூஞ்சல் மற்றும் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும்.
மறுநாள் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வைரவர் மடையுடன் அலங்கார உற்சவம் நிறைவு பெறும் என்று ஆலய பரிபாலன சபையால் தெரிவிக்கப்பட்டது. (ஐ-63)

## பனம் பொருளில் இருந்து உணவு தயாரிக்கும் பயிற்சிகள்

யாழ்ப்பாணம், ஏப். 18
பனை அபிவிருத்திச் சபையால் வடக்கு மாகாணத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பனம் பொருளில் இருந்து உணவுப் பதார்த்தங்களை எவ்வாறு தயாரிப்பது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.
சபையின் ஆராய்ச்சிப் பிரிவு மற்றும் விரிவாக்கம் போன்றவற்றின் தொழில்நுட்பவியலாளர்கள் இந்தப் பயிற்சிகளை சங்கங்களுக்கு வழங்கி வருகின்றனர். பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற பனம் பொருளிலான உணவுப் பண்டங்களை தரம்மிக்க தொழில்நுட்பத்துடன் தயாரிப்பதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
இதற்கு அமைய பனை அபிவிருத்திச் சபை அதற்கான தொழில்நுட்ப பயிற்சிகள் மற்றும் ஆலோசனைகளை சங்கங்களுக்கு வழங்கி வருகின்றது.
குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 19 பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்தப் பனம் பொருளிலான உணவுப் பண்டங்களை தயாரிப்பதற்கான பயிற்சிகள், ஆலோசனைகள் போன்றவை துரிதமாக வழங்கப்பட்டு வருகின்றன என்று பனை அபிவிருத்திச் சபை தெரிவித்தது. (ஐ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல் அகழ்வு தொடர்வதால் கடல் நீர் உட்புகும் அபாயம்

## தென்மராட்சி தெற்கில் இந்த நிலை

சாவகச்சேரி ஏப். 18

தென்மராட்சி தெற்கு தனன்களப்பு மற்றும் மறவன்புலவு கிராமங்களில் தினமும் வாகனங்களில் வகைதொகையின்றி மணல் அகழ்ந்து எடுத்துச் செல்வதால் கிராமங்களுக்குள் கடல் நீர் புகும் அபாயம் காணப்படுகிறது.

இந்த நிலை நீடித்தால் எமது குடியிருப்புக்களை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்படும் என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

1996 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை படையினரின் அதியுயர் பாதுகாப்பு வலயமாக தென்மராட்சி தெற்குப் பகுதிக் கிராமங்கள் காணப்பட்டன.

அதன் பின்னர் கடந்த 2011 ஆம் ஆண்டு தொடக்கம் கட்டம் கட்டமாக மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டனர். அப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட வீடமைப்புத் திட்டங்களுக்கு மக்கள் அங்கு மணல் பெற்று பயன்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டது.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி அப் பகுதியைச் சேர்ந்த சிலர் மணலை தனியாருக்கு விற்பனை செய்தனர். பின்னர் அக் காலப் பகுதியில் கடமையிலிருந்த பிரதேச செயலரின் அறிவுறுத்தலுக்கமைய பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு காவலரண்களை அமைத்து 24 மணி நேரமும் கடமையில் இருந்ததால் மணல் அகழ்வு குறைந்து காணப்பட்டது.

தொடர்ச்சியாக வாகனங்களில் மணல் அகழ்ந்து வெளியே கொண்டு செல்வதால் அங்குள்ள பனைவளம் அழிக்கப்பட்டு வருவதுடன் கிராமங்களுக்குள் வெள்ளம் புகும் அபாயம் காணப்படுகிறது.

இது தொடர்பில் அப் பகுதியைச்சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் கையொப்பமிட்டு பிரதேச செயலருக்கு முறையிட்டனர். பிரதேச செயலரின் அறிவுறுத்தலின் பிரகாரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாடு செய்யப்பட்ட தினத்தன்று செயலில் இறங்கிய பொலிஸார் 3 டிப்பர் வாகனங்களையும் மண் அகழும் வாகனத்தையும் கைப்பற்றி நீதி மன்றில் முற்படுத்தினர்.

நீதிமன்றில் தண்டம் விதிக்கப்பட்டு வாகனங்கள் விடுவிக்கப்பட்டன.

அதன் பின்னர் தினமும் 30 அடி ஆழத்துக்கு மேல் மணல் அகழ்ந்து வாகனங்களில் கொண்டு செல்லப்படுகின்றன.

இது தொடர்பாக பொலிஸாருக்கு அறிவித்தால் அவர்கள் அங்கு வருவதில்லை. இதனைத் தடுக்கச் செல்லும் உள்ளூர் மக்களை ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்துகின்றனர்.

சில வாகனங்கள் அப்பகுதிகளில் உள்ள வயல் வரம்புகளை இரவோடிரவாக வெட்டி ஏற்றி எடுத்துச் செல்கின்றனர். இந்த நிலையில் மணல் அகழ்வு தொடருமானால் மணல் அகழ்வினைத் தடுக்க எவரும் முன்வராத பட்சத்தில் இங்கு குடியமர்ந்துள்ள நூற்றுக்க ணக்கான குடும்பங்கள் தமது குடியிருப்புகளை விட்டு வெளியேறும் நிலை ஏற்படுமெனவும் அவர்கள் தெரிவித்தனர். (9)

## ஆன்மிக சுற்றுலா

யாழ்ப்பாணம், ஏப்.18

கைதடி அரச முதியோர் இல்லத்தைச் சேர்ந்த முதியோர்கள் முன்றுநாள்கள் ஆன்மீகச் சுற்றுலாவுக்காக இம்முறை கண்டிக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை இந்தச் சுற்றுலா ஆரம்பமாகும் என்று இல்ல அத்தியட்சகர் வ.செல்வம் தெரிவித்தார்.

இல்லத்தைச் சேர்ந்த 30 வரையான முதியோர்கள் அங்குள்ள ஆலயங்களுக்குச் சென்று ஆன்மிக வழிபாட்டில் ஈடுபடவுள்ளனர். (ஜ-17)

## பவள விழாவும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம், ஏப்.18

மூத்த எழுத்தாளரும் 'தாயக ஒலி' சஞ்சிகையின் ஆசிரியருமான தம்பு சிவ சுப்பிரமணியத்தின் பவளவிழாவும் மலர் வெளியீடும் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரியின் சரஸ்வதி மண்டபத்தில் பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்கினேஸ்வரன் தம்பதியர் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஓய்வு பெற்ற மூத்த விரிவுரையாளர் முருகேசு கௌரிகாந்தன் வரவேற்புரையையும் பிரம்மசிறி உ.அபராஜிதக் குருக்கள் ஆசியுரையையும் வழங்குவர். (க)



## அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.18

யாழ்ப்பாணம் கோண்டாவில் அன்னக் கந்தன் ஆலயத்தின் மூலஸ்தானத்துக்கு நேற்றுமுன்தினம் அடிக்கல் நட்டு வைக்கப்பட்டது. நிகழ்வில் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் மதுசூதன் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டு வைத்தார். (ஜ)

## அபிவிருத்தி தொடர்பில் மக்கள் சந்திப்பு

வலி.மேற்கு, ஏப்.18

வலி.தென்மேற்கு பிரதேச எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மேற்கொள்வது தொடர்பான மக்கள் சந்திப்பு நேற்றுமுன்தினம் தொடக்கம் நடத்தப்பட்டு வருகின்றது.

உள்ளூராட்சி திணைக்களத்தால் உள்ளூராட்சி சபைகளின் ஒவ்வொரு வட்டாரத்திலும் மக்களின் தெரிவின் பிரகாரம் வேலைத் திட்டங்களை முன்னெடுக்குமாறு அறிவிக்கப்பட்டது.

இதன்படி முதற்கட்டமாக இளவாலை , பெரியவிளான் ஆகிய இரு வட்டாரங்களுக்கான மக்கள்சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நேற்று புதன்கிழமை சண்டிலிப்பாய் தென்மேற்கு, சில்லாலை ஆகிய இரு வட்டாரங்களுக்கான மக்கள் சந்திப்பு இடம்பெற்றது. மானிப்பாய் தென்கிழக்கு சுதுமலை ஆகிய வட்டாரங்களுக்கான மக்கள் சந்திப்பு இன்று வியாழக்கிழமை 9.30 மணிக்கு பிரதேச கலாசார மண்டபத்திலும், பிற்பகல் 3 மணிக்கு சிந்மய பாரதி வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

மாகியப்பிட்டி,சண்டிலிப்பாய் வட்டாரத்துக்கான மக்கள் சந்திப்பு நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாகியப்பிட்டி ஜே/134 கிராம அலுவலகர் அலுவலகத்திலும்,மானிப்பாய் வடமேற்கு,நவாலி வடக்கு ஆகிய வட்டாரங்களுக்கான மக்கள் சந்திப்பு 21ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு மருதடி விநாயகர் அறநெறிப்பாடசாலை மண்டபத்திலும், மாலை 3மணிக்கு நவாலி மகாவித்தியாலயத்திலும் நடைபெறும்.

வடலியடைப்பு மாதகல் ஆகிய வட்டாரங்களுக்கான மக்கள் சந்திப்பு 22 ஆம்திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வடலியடைப்பு ஆர்.டி.எஸ் கட்டடத்திலும், மாலை 3 மணிக்கு மாதகல் மத்தி ப.நோ.கூ.ச.சம்மேளனக் கட்டடத்திலும் நடைபெறவுள்ளன. நவாலி தென் கிழக்கு ,சாவல்கட்டு ஆகிய வட்டாரங்களுக்கான மக்கள் சந்திப்பு 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30மணிக்கு முருகானந்தா சனசமூக நிலையத்திலும், மாலை 3 மணிக்கு மகாத்மா சனசமூக நிலையத்திலும் நடைபெறவுள்ளன.

உயரப்புலம்,ஆனைக்கோட்டை ஆகிய வட்டாரங்களுக்கான மக்கள் சந்திப்பு 24ஆம்திகதி புதன்கிழமை முற்பகல் 9.30மணிக்கு பாரதி சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 3 மணிக்கு மூத்த விநாயகர் ஆலய முன்றலிலும் நடைபெறவுள்ளன.


பிரான்பற்று, பண்டத்தரிப்பு ஆகிய வட்டாரங்களுக்கான மக்கள் சந்திப்பு 25ஆம் திகதி காலை 9.30மணிக்கு பிரான்பற்று [illegible] ஆலய மண்டபத்திலும், பிற்பகல் 3 மணிக்கு [illegible] றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலையிலும் நடைபெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-115)

## மதகுகள் அமைப்பு

கொடிகாமம், ஏப்.18

மறவன்புலவு மணற்காட்டு வீதியிலுள்ள வண்ணாத்திக் குளத் திலிருந்து தண்ணீர் வெளியேறக் கூடிய வகையில் இரு இடங்களில் மதகுகள் அமைக்கப்பட்டுள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

மழை காலங்களில் இந்த குளத்தில் இருந்து வெள்ளம் வெளியேறக் கூடிய வாய்க்கால்கள் அமைக்கப்படாததால் வெள்ள நீர் வயலினுள் புகுந்து வயல்களை அழித்து வந்தன.



இந்த நிலையில் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் அ.நிமலரோகன் மேற்கொண்ட முயற்சியால் தென்மராட்சி பிரதேச செயலரால் இடர் முகாமைத்துவ திணைக்களத்திடமிருந்து பெற்ற 2 லட்சம் ரூபா நிதியிலிருந்து பொன்னம்பலம் வீதியிலும் மணற்காட்டு வீதியிலும் வெள்ளம் வழிந்தோடக் கூடிய வகையில் மதகுகள் அமைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. பொன்னம்பலம் வீதியில் இரட்டை போக்கு குழாயும், மணற்காட்டு வீதிக்கு ஒரு கல்லுக்குழாயும் வைத்து மதகுகள் அமைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தனர். (ஜ-159)

## தீடிரென பெய்த மழையால் வெங்காயம், புகையிலை பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.18

வலி.கிழக்குப்பிரதேசத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை கொட்டிய மழையால் வெங்காயம் மற்றும் புகையிலை என்பன பாதிக்கப்பட்டன

சில விவசாய நிலங்களில் அறுவடை செய்யப்பட்டு வெயிலில் உலரவிடப்பட்ட வெங்காயங்கள் மழையில் நனைந்து பாதிக்கப்பட்டன. அதனைவிட விவசாயிக ளால் பயிரிடப்பட்டு அறுவடை செய்யப்பட்டு காயவைக்கப்பட்ட புகையிலைகளும் மழையில் நனைந்துபாதிக்கப்பட்டன. கடும் வறட்சி வெப்பத்தால் விவசாய பயிர்கள் பாதிக்கப்பட்டும் இருந்தன என்றாலும் இந்த மழை பயிர்களுக்கு குளிர்ச்சியை ஏற்படுத்தியதாக செய்கையாளர்கள் தெரிவித்தனர். (ஜ-17)

## அஞ்சல் பெட்டி அமைப்பு

சாவகச்சேரி, ஏப். 18

சாவகச்சேரி அஞ்சலகச் சந்தியில் ஏ 9 முதன்மைச் சாலையில் வாகனங்களில் செல்லும் பொதுமக்கள் மற்றும் அப்பகுதி குடியிருப்பாளர்களின் நலன் கருதி அஞ்சல்பெட்டி வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அடுத்த அஞ்சலகம் உள்ள தூரம் அடங்கிய விவரங்களையும் பொருத்தியுள்ளனர்.

சாவகச்சேரி அஞ்சல் நிலையம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் அஞ்சல்களை பெட்டிகளில் போடுவதற்கு பொதுமக்கள் அஞ்சலகத்துக்குச் சென்றுவந்தனர்.

அத்துடன் ஏ-9 முதன்மைச் சாலையில் வாகனங்களில் பயணிப்போர் அஞ்சல் நிலையச் சந்தியில் அஞ்சல் பெட்டி இல்லாததால் அஞ்சலகம் வரை வாகனங்களில் சென்று அஞ்சல்களைச் சேர்ப்பிக்கின்றனர்.

இந்த நிலையில் அஞ்சல் அதிபர் இன்பராஜ் லம்போர்ட் மேற்கொண்ட முயற்சியின் பயனாக முதல் தடவையாக அஞ்சலகச் சந்தியில் அஞ்சல் பெட்டி பொருத்தப்பட்டுள்ளது. அதனுடன் இணைந்த நிலையில் அடுத்த அஞ்சலகம் உள்ள தூர அளவினையும் குறிக்கும் பலகைகளையும் பொருத்தியுள்ளனர். (க -9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீதி சீரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு


கொடிகாமம், ஏப்.18
யாழ்ப்பாணம் கொடிகாமம் கொலணி வீதியின் சீர மைப்புக்கு முதற்கட்டமாக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் 25 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த வீதியை அதிகளவு மக்கள் பயன்படுத்தும் நிலையில் குன்றும் குழியுமாக காணப்படுகிறது.

இது தொடர்பில் சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ. மயூரன் மற்றும் உறுப்பினர் சி.சிவனேசன் ஆகியோர் விடுத்த வேண்டுகோளையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் நேரில் வந்து பார்வையிட்டு நிதி ஒதுக்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-159)

# யாழ்ப்பாணத்தில் பசுப்பாலின் நுகர்வு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.18
யாழ்ப்பாண குடாநாட்டில் பசுப்பாலின் நுகர்வு திடீரென அதிகரித்திருப்பதால் அவை உடனடியாக விற்றுத் தீர்ந்து விடுவதாக மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (யாழ்.கோ) தெரிவித்தது.



சங்கம் மேலும் தெரிவித்ததாவது:
குறிப்பாக பால்மா பைக்கெட்டுக்களின் விலை அதிகரிப்பாலும் மற்றும் தற்போது ஆலயங்களில் நடைபெற்றுவரும் பெருந்திருவிழாக்கள், சுபகாரியங்கள் போன்றவற்றையொட்டி இந்த பசும்பாலின் நுகர்வு அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் 24 பால் விற்பனை நிலையங்கள் ஊடாகக் கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு 5 ஆயிரத்து 500 லீற்றர் தொடக்கம் 6 ஆயிரம் லீற்றர் வரையிலான பசும்பால் விற்று தீர்ந்து விடுகின்றன.

சங்கத்தின் 650 வரையிலான கால்நடை வளர்ப்போர் அங்கத்தவர்களிடம் இருந்து இந்தப் பசும்பால் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றன.

தற்போதைய நிலமையில் பசும்பால் பால் சாலைகளில் காலை வேளைகளில் உடனடியாக விற்று தீர்ந்தும் விடுகின்றன. சில பால் சாலைகளில் பசும்பால் முடியும் தறுவாயில் அவற்றை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நுகர்வோருக்கு வழங்கியும் வருகின்றன.

கடந்த புத்தாண்டு தினத்திலும் அதற்கு முன்னைய நாள்களிலும் இந்தப் பசும்பாலுக்கு பற்றாக்குறை ஏற்பட்டது.

அத்துடன் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் (யாழ்.கோ) தயாரிப்பான யூஸ் பைக்கெற்றுக்களுக்கு அதிக வரவேற்பும் கிராக்கி யும் ஏற்பட்டுள்ளன.

யாழ்.கோவின் உற்பத்தியான இந்த ஜூஸ் நாள் ஒன்றுக்கு 8 ஆயிரத்துக்கு மேற்பட்ட பைக்கெற்றுக்கள் விற்கப்பட்டு வருகின்றன எனவும் சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ-17)

# அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பில் மக்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.18
நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மேற்கொள்வது தொடர்பான மக்கள் சந்திப்பு இன்று தொடக்கம் நடத்தப்படவுள்ளது.

உள்ளூராட்சி திணைக்களத்தால் உள்ளூராட்சி சபைகளின் ஒவ்வொரு வட்டாரத்திலும் மக்களின் தெரிவின் பிரகாரம் வேலைத் திட்டங்களை முன்னெடுக்குமாறு அறிவிக்கப்பட்டது.


இதற்படி முதற்கட்டமாக இன்று வியாழக்கிழமை 2 ஆம் வட்டாரம் ஜே/118, ஜே/119 கிராம அலுவலகர் பிரிவு மக்களுக்கு. 20 ஆம் திகதி 3ஆம் வட்டாரம் ஜே/116,ஜே/120 ஆகிய கிராம அலுவலகர் பிரிவு மக்களுக்கும் கோண்டாவில் ஆசிமட அரசடிப் பிள்ளையார் ஆலய மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணிக்கும் நடைபெறவுள்ளன.

20ஆம் திகதி 4ஆம் வட்டாரம் ஜே/124,ஜே/128 ஆகிய கிராம அலுவலகர் பிரிவு மக்களுக்கு கொக்குவில் ஞானபண்டிதர் வித்தியாசாலையில் முற்பகல் 9 மணிக்கும், 21ஆம் திகதி 6ஆம் வட்டாரம் ஜே/121,ஜே/123 ஆகிய கிராம அலுவலகர் பிரிவு மக்களுக்கு கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையத்தில் முற்பகல் 9 மணிக்கும் , தொடர்ந்து 8ஆம் வட்டாரம் ஜே/114 கிராம அலுவலகர் பிரிவு மக்களுக்கு முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் முற்பகல் 10.30 மணிக்கும் அன்றைய தினம் 7ஆம் வட்டாரம் ஜே/122, ஜே/126 கிராம அலுவலகர் பிரிவு மக்களுக்கு கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தில் பிற்பகல் 3.30 மணிக்கும் நடைபெறும்.

எதிர்வரும் 22ஆம் திகதி முதலாம் வட்டாரம் ஜே/115,ஜே/117 கிராம அலுவலகர் பிரிவு மக்களுக்கு விவேகானந்தா சனசமூக நிலையத்திலும்,10ஆம் வட்டாரம் ஜே/112,ஜே/113 கிராம அலுவலகர் பிரிவு மக்களுக்கு கல்வியங்காடு செங்குந்தா இந்துக்கல்லூரியில் முற்பகல் 9 மணிக்கும், 2ஆம் வட்டாரம் ஜே/89,ஜே/90 கிராம அலுவலகர் பிரிவு மக்களுக்கு அரியாலை நாவலடி சிகிச்சை நிலையத்தில் முற்பகல் 9 மணிக்கும் இடம்பெறவுள்ளன.

அதேவேளை அன்றைய தினம் 9ஆம் வட்டாரம் ஜே 110,ஜே111 கிராம அலுவலகர் பிரிவு மக்களுக்கு திரு நெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் மாலை 3.30 மணிக்கும் நடைபெறும்.

எதிர்வரும் 23 ஆம் திகதி 5ஆம் வட்டாரம் ஜே/99, ஜே/127 கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கு கொக்குவில் பிடாரி அம்மன் ஆலய மண்டபத்திலும், 11 வட்டாரம் ஜே/94,ஜே/96 கிராம அலுவலகர் பிரிவு மக்களுக்கு அரியாலை முள்ளி யூதா கோயிலிலும் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் என சபையின் தவிசாளர் த. தியாகமூர்த்தி தெரிவித்துள்ளார். (ஐ-37)



கரவெட்டி கரணவாய் கொற்றாவத்தை மத்திய சனசமூக நிலையத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் 2 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சுற்று மதில் அமைக்கப்பட்டது. அண்மையில் இந்த மதிலை பார்வையிட வருகைதந்த நாடாளுமன்ற உறுப்பினரை நிலையத் தலைவர் வரவேற்பதைப் படத்தில் காணலாம். (ஐ-173)

# புத்தாண்டை முன்னிட்டு விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.18
புத்தாண்டை முன்னிட்டு நெடுந்தீவில் மிகப் பிரமாண்டமான கலை கலாசார விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்த விளையாட்டுக்கள் நெடுந்தீவு மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை நடைபெறவுள்ளன.

குதிரை ஓட்டம்,ஈருருளி ஓட்டம்,மரதன் ஓட்டம்,கயிறு இழுத்தல்,வழுக்குமரம் ஏறுதல் போன்ற போட்டிகளும் இரவு கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

நெடுந்தீவு பிரதேச செயலகம்,பிரதேச சபை, கடற்படையினர் போன்றவை இணைந்து இந்த நிகழ்வுகளை நடத்தவுள்ளன. (ஐ-17)



# வருடப்பிறப்பு சிறப்பு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.18
காங்கேசன்துறை பிராந்திய பொலிஸாருக்கான சித்திரை வருடப்பிறப்பு சிறப்பு நிகழ்வுகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன. காங்கேசன்துறை பொலிஸ் நிலைய மைதானத்தில் காலை முதல் மாலை வரை இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

ஓட்டப்போட்டி,பணிஸ் சாப்பிடுதல் ,முட்டி உடைத்தல் ,மரதன்ஓட்டம் உட்பட பல விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் புத்திக உடுகம சூரிய தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ராஜித சிறி தமிந்த முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கி வைத்தார். (க-26)

# சித்திரைக் கஞ்சியும் குளிர்த்தி உற்சவமும்

யாழ்ப்பாணம்,ஏப்.18
யாழ்ப்பாணம் புத்தூர் கிழக்கு கன்னியர் வைரவர் ஆலயத்தின் வருடாந்த சித்திரைக் கஞ்சியும் குளிர்த்தி உற்சவமும் நாளை வெள்ளிக்கிழமை சித்திராப் பௌர்ணமி அன்று நடைபெறவுள்ளது. பிற்பகல் 11 மணிக்கு சிறப்பு அபிசேகமும் 12 மணிக்குப் பூசையும் இடம்பெற்று ஒரு மணிக்கு அடியார்களுக்கு அன்னதானமும் சித்திரைக் கஞ்சியும் வழங்கப்படும்என்றுஅறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஈஸ்டர் சந்தை

யாழ்ப்பாணம், ஏப். 18
கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில்ஈஸ்டர்சந்தைசனசமூக நிலைய மண்டபத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும்.

இதில் கூட்டுறவுச் சங்க பொருள்கள், சகல அன்றாட பாவனைப்பொருள்கள், பனை உற்பத்திப்பொருள்கள்போன்றவற்றை பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டது.

இதேவேளை விசன் கெயர் நிறுவனத்தால் இலவச கண் மற்றும் காது பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் எனவும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

# செயற்குழு தெரிவு

யாழ்ப்பாணம்,ஏப்.18
யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை தட்டா தெரு சந்தியில் அமைந்துள்ள கலாஜோதி சனசமூகநிலையத்தினரின் நீண்டகாலமாக தொடர்புகளைப் பேணி வரும் அறிஞர்கள் ,சூழவுள்ள பெருமக்கள், விளையாட்டுத்துறை சார்ந்தோர்களின் கருத்துரைகள், ஆலோசனைகளின் பின் நடப்பாண்டு நிர்வாகக் குழுவினராக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் , துணைத் தலைவராக கே.சரணநாதன், செயலராக எம்.ரவிசங்கரும், துணை செயலராக ஏஸ்.சுதந்திர ராஜாவும், பொருளாளராக ஏ.தவசொரூபன் இவர்களுடன் 9 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னச்சாளம்பன் குள அபிவிருத்திக்கு மகாவலி அபிவிருத்தி அதிகார சபை தடை

யாழ்ப்பாணம், ஏப்.18

முல்லைத்தீவு மாவட்டம் கொக்குத்தொடுவாய் பிரதேசத்தில் அமைந்துள்ள சின்னச்சாளம்பன் குளத்தின் அபிவிருத்திக்குரிய பணம் அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளபோதிலும் அப் பணியை மேற்கொள்வதற்கு மகாவலி அபிவிருத்தி அதிகார சபை தடையாக இருப்பதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

சின்னச்சாளம்பன் குளத்தை நம்பி பல்வேறு விவசாயிகள் செய்கையில் ஈடுபடும் நிலையில் போருக்குப் பின்னர் இந்தக் குளத்தில் எந்த அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படாத நிலமையில் குளத்தை சீரமைத்துத் தருமாறு கமநல சேவைத் திணைக்களம் முதல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரையில் நடையாக அலைந்தோம். தற்போது குளத்தின் அபிவிருத்திக்காக 13 மில்லியன் ரூபா பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு கமநல சேவைத் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளது. அதன் பின்னரும் திணைக்களம் பாராமுகமாக இருப்பது தொடர்பில் ஐயம்கொண்டு தேடுதலில் ஈடுபட்ட சமயம் குளம் அமைந்துள்ள பிரதேசம் தமது ஆளுகையின் கீழ் வருவதனால் அங்கே எந்த அபிவிருத்தியும் மேற்கொள்ளக் கூடாது என மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை தடைவிதிக்கின்றதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் அதிகாரிகள் உடன் தலையிட்டு குளத்தை சீரமைத்துத் தர வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

"தமது ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் தாமே அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டும் எனக் கூறுகின்றனர் . பணிகள் தடைப்பட்டுள்ளன. மகாவலி தொடர்பில் உள்ள ஏனைய பிரச்சினைகள் தொடர்பிலும் எதிர்வரும் 26 ஆம் திகதி மகாவலி அபிவிருத்தி அதிகார சபையுடன் ஓர் சிறப்பு கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது"என்று மாவட்டச் செயலர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். (க-105)

## தவக்காலத்தின் இறுதி வழிபாடுகள்

கொழும்புத்துறை ஏப்.18

தவக்காலத்தின் இறுதி நாள்களான புனித வார மற்றும் உயிர்ப்புவிழா திருப்பலி வழிபாடுகள், பாதம் கழுவும் சடங்கு, நற்கருணைச் சந்திப்பு, சிலுவைப்பாதைகள்,சிலுவைமுத்தி செய்தல், இறந்த இயேசுவின் திருவுடல் ஆசந்திப் பவனி, உயிர்ப்பு விழா பவனி என்பன இன்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை அனைத்து கத்தோலிக்கஆலயங்களிலும் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம் மரியன்னை பேராலயத்தில் புனித வியாழன் திருப்பலி இன்று மாலை 5 மணிக்கும், நற்கருணைப் பொது ஆராதனை இரவு 9.30 மணிக்கும் இடம்பெறும். புனித வெள்ளியான நாளை காலை 6 மணிக்கு திருச்சிலுவைப் பாதையும், மாலை 5 மணிக்கு திருப்பாடுகள் வழிபாடு, சிலுவை முத்தி என்பன இடம்பெறும்.

தொடர்ந்து நாளைமறுதினம் சனிக்கிழமை பாஸ்கா திருவிழிப்புத் திருப்பலி இரவு 10.30 மணிக்கு இடம்பெறும். உயிர்ப்பு ஞாயிற்றுத் திருப்பலிகள் 21ஆம் திகதி காலை 5.30 மணிக்கும் 7 மணிக்கும் இடம்பெறவுள்ளதாக பங்குத்தந்தை அருட்பணி நேசராஜா தெரிவித்துள்ளார். (ஐ-135)

## மடு பிரதேச செயலர் பிரிவில் வறட்சியால் கால்நடைகள் சாவு

மடுப்பிரதேசத்துக்குட்பட்ட பகுதியிலும் வறட்சியால் கால்நடைகள் இறக்கின்றன என மடுப்பிரதேச செயலர் பி.ஜெயகரன் தெரிவித்தார்.

குடிநீர்ப் பிரச்சினையால் பொதுமக்களுடன் கால்நடைகள் மரம் செடிகளும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், பொது மக்களுக்கான குடிநீர் வழங்கல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் நேற்று தெரிவித்தார்.

வறட்சி பாதிப்பிற்குள்ளாகும் பிரதேசமாக மடுப்பிரதேசம் காணப்படுவதால், கால்நடைகளின் இறப்பு உண்மை. அவை நோயினால் இறக்கிறதா அல்லது வறட்சியினால் நீர் இன்றி இறக்கிறதா தெரியவில்லை என மடுப்பிரதேச செயலர் பி.ஜெயகரன் தெரிவித்தார்.

மன்னார் கால் நடை வைத்தியர்களிடம் கேட்டபோது, மன்னாரில் கால் நடைகள் புது வகை நோயினால் இறப்பதற்கு சாத்தியமில்லை. நீர் ஆகாரம் இன்மையே இறப்பிற்கு காரணம் என்றுதெரிவித்தனர். (க-213)

## சிறப்பு பூசை நிகழ்வுகள்

வவுனியா சிறிநகர் சிறி துர்கை அம்மன் ஆலயத்தில் சித்திரா பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நாளை வெள்ளிக்கிழமை, விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

காலை முதல் மதியம் வரை வழிபாடுகளை மேற்கொள்ளமுடியும் என்று ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்தனர். (க-110)

## மடுக்குளத்திலிருந்து திறந்து விடப்படும் தண்ணீரை தனிநபர் தடுப்பதாக முறைப்பாடு

வவுனியா,ஏப்.18

வவுனியா மடுக்குளத்தில் சிறுபோகத்துக்காக குளத்திலிருந்து திறந்து விடப்படும் தண்ணீரை நபரொருவர் அடாத்தாக தடுத்து நிறுதியுள்ளதாக மடுக்குளம் விவசாயிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வவுனியா மடுக்குளம் கிராமத்தில் சிறுபோக நெற்செய்கைக்காக நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் கமநலசேவைகள் திணைக்களத்தால் ஒதுக்கப்பட்ட 25 ஏக்கர் நெற்செய்கை காணிகளுக்கு அலியா மருதமடுக்குளத்திலிருந்து தண்ணீர்திறந்து விடாமல் அடாத்தாக தடுத்து வருவதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அரச திணைக்களத்தின் முடிவுகளை மீறி செயற்படுவதாகவும்,இதன் காரணமாக கிராமத்தில் சிறுபோக நெற்செய்கை பாதிப்படைந்துள்ளதாகவும் கிராம மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பொலிஸ் நிலையம், நீர்ப்பாசனத் திணைக்களம்,வவுனியா பிரதேசசெயலகத்திலும் எழுத்து மூலம் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக நீர்பாசனத் திணைக்களத்தின் அதிகாரியிடம் கேட்டபோது, இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்காக எமது அலுவலர், சென்றிருக்கிறார். இது தொடர்பாக நாம் மாத்திரம் முடிவுகளை எடுக்கமுடியாது பிரதேச செயலகம், மற்றும் கமநலஅபிவிருத்தி திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து உரியதீர்வுவழங்கபடும், அதேவேளை காணி உரிமை தொடர்பிலும் சிக்கல்கள் நிலவுகின்றது. எனவே இது தொடர்பாக ஆராயப்படுவதாகவும் தெரிவித்தார். (க-110)

## டைனமற் பயன்படுத்தி மீன்பிடித்த மீனவர்கள் கடற்படையினரால் கைது

யாழ்ப்பாணம் , ஏப்.18

முல்லைத்தீவு செம்மலைக் கடற்பரப்பில் டைனமற் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த புல்மோட்டை மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மாவட்ட நீரியல்வளத் துறைத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

திருகோணமலை மாவட்டம் புல்மோட்டையைச் சேர்ந்த இருவர், நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர். டைனமற் மற்றும் திரி என்பனவற்றுடன் மின்பிறப்பாக்கி மின்குமிழ்களும் கைப்பற்றப்பட்டிருந்தன. இருவரையும் எதிர்வரும் 23 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. (க-105)

## கிளிநொச்சி சந்தையில் மீன்கள் அழிப்பு

கிளிநொச்சி, ஏப். 18

கரைச்சி பிரதேச சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள கிளிநொச்சி நகரப் பொதுச் சந்தையில் நேற்றுக் காலை 11 மணியளவில் சுகாதார பரிசோதகர் தலைமையில் பழுதடைந்த நிலையில் காணப்பட்ட மீன்கள் அழிக்கப்பட்டுள்ளன.

## அனைவரும் வளர்வது அவசியம்

தவக்கால தியானங்கள்

ஆற்றங்கரையோரம் தியானத்தில் இருந்த ஒரு துறவியிடம் வந்த இளைஞன் ஒருவன், செடி ஒன்றைக்காட்டி இது பூக்குமா... பூக்காதா?' என்று கேட்டான். சிறிது நேரத்தில் அந்தத் துறவி, இது பூக்கும்...' என்று உறுதியாகச் சொன்னார். அடுத்த நொடியே அதைப் பிடுங்கி வீசினான் அந்த இளைஞன். அன்று மாலையில் வீசிய சுழற்காற்றும் மழையும் மக்களை நிலைகுலையச் செய்தது. அந்த இளைஞனால் பிடுங்கி வீசப்பட்ட செடி மட்டும் மண்ணில் வேரூன்றி எழுந்தது.

செடியைப் பிடுங்கி எறிந்த இளைஞன் துறவியிடம் வந்து பிடுங்கி எறியப்பட்ட செடி மீண்டும் எப்படி முளைத்தது என்பதுபோன்ற சில விவரங்களைக் கேட்டான். அதற்குத் துறவி, நான் ஜோதிடம் சொல்லவில்லை... அந்தத் தாவரத்தின் இயல்பில் மலர வேண்டும் என்ற தவிப்பு இருப்பதைத் தெரிந்துகொண்டேன். அதனால்தான் அவ்வளவு உறுதியாகச் சொன்னேன். வளர வேண்டும் என்று விரும்புகிறவர்கள் நிச்சயம் வளர்வார்கள்' என்றார்.

மண்ணுலகில் பிறந்த ஒவ்வொருவரும் வளர வேண்டியவர்கள். அவர்கள் வளர்வது மட்டுமல்லாமல், மிகுந்த கனிகொடுக்க வேண்டியவர்கள். இப்படிப்பட்ட உயர்ந்த செய்தி விவிலியத்தில் கூறப்பட்டுள்ளது.

## குடிதண்ணீர் கேட்கும் எமக்கு மதுபானசாலையா

### பெரிய பரந்தன் மக்கள் கொந்தளிப்பு

கிளிநொச்சி,ஏப்.18

சுத்தமான குடிதண்ணீர் கேட்கும் எங்களது கிராமத்துக்கு மதுபானசாலையா தீர்வு என கேட்டு கிளிநொச்சி பெரிய பரந்தன் கிராம மக்கள் ஐந்தாவது தடவையாக புதிய மதுபானசாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

நேற்றுக் காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக முன்றலில் புதிதாக அமைக்கப்படவுள்ள மதுபானசாலைக்கு எதிராக இந்த கவன வீர்ப்பில் ஈடுப்பட்டுள்ளனர்.



கொழும்பிலிருந்து வருகை தந்த இலங்கை மதுவரித் திணைக்கள ஆணையாளர், சட்டத்தரணிகள், புதிய மதுபானசாலைகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டனர். (க-214)

## பூநகரியை வாட்டியெடுக்கும் வறட்சி 15 கிராம அலுவலர் பிரிவுகள் பாதிப்பு

கிளிநொச்சி.ஏப்.18

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் உள்ள 19 கிராம அலுவர் பிரிவுகளில் 15 கிராம அலுவலர் பிரிவுகள் வறட்சியினால் பாதிக்கப்பட்டுள்ளதாக பூநகரி பிரதேச செயலர் கிருஸ்னேந்திரன் தெரிவித்தார்.

தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியினால் பூநகரி பிரதேசத்தில் ஆயிரத்து 600 குடும்பங்களைச் சேர்ந்த 5ஆயிரத்து 500 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாவட்டச்செயலகம் ஊடாக தேசிய இடர்முகாமைத்துவ நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பூநகரிப் பிரதேச சபை வழமையான செயற்பாட்டில் குடிநீர் வழங்கலை மேற்கொண்டு வருகின்றது. (க-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கோணாவில் காந்திக்கிராம வீதி சீரமைப்பு வேலைகள் ஆரம்பம்

கிளிநொச்சி,ஏப்.18

கிளிநொச்சி கோணாவில் காந்திக்கிராம வீதி சீரமைப்பு வேலைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனூடாக துரித கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் கோணாவில் காந்திக்கிராம வீதி சீரமைப்புக்காக இரண்டு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு வீதியைப் சீரமைப்புச் செய்வதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன் தினம் மாலை 4 மணியளவில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் பல வீதிகள் நீண்ட காலமாகப் சீரமைப்புச் செய்யப்படாதமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனால் சுட்டிக்காட்டப்பட்டு சீரமைப்புச் செய்யுமாறு கோரப்பட்டு வந்ததற்கமைவாக,தற்போது கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் துரித கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் கிராமிய வீதிகள் சீரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

அடிக்கல் நடும் நிகழ்வு கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் சி.சுப்பையா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கலந்துகொண்டு வீதி சீரமைப்புக்கான அடிக்கல்லினை நட்டு வைத்தார்.

நிகழ்வில் கரைச்சிப் பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளர் வ.நகுலேஸ்வரன், கோணாவில் மகாவித்தியாலய ஆசிரியர் மற்றும் காந்திக்கிராமம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், மாதர்கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (க-426)

# கிளிநொச்சியில் ஆரம்பித்த பயிர்கள் சிகிச்சை முகாம்

கிளிநொச்சி,ஏப்.18

விவசாய பெருமக்களின் பயிர்ச்செய்கையில் ஏற்படக் கூடிய பூச்சி பீடைகள் மற்றும் நோய்த் தாக்கத்தை அடையாளம் கண்டு உடனுக்குடன் தீர்வு வழங்கும் நோக்குடன், கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தினரால் பிரதி 2 ஆவது மற்றும் 4 ஆவது செவ்வாய்க்கிழமைகளில் காலை 6 மணி தொடக்கம் 8 மணி வரை கிளிநொச்சி பொதுச் சந்தையில் நிரந்தர பயிர்ச்சிகிச்சை முகாம் நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக விவசாய ஊக்குவிப்பு வாரத்தை முன்னிட்டு கடந்த 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சம்பிரதாய பூர்வமாக தேசிய விவசாய தகவல் தொழில்நுட்பநிலையத்தின் பணிப்பாளர் சி.பெரியசாமி மற்றும் கிளிநொச்சி பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் மேலதிக பணிப்பாளர் கலாநிதி சி.ஜே.அரசகேசரியின் பங்குபற்றுதலுடன் கிளிநொச்சி மாவட்ட விவசாய திணைக்களத்தின் பாடவிடய அலுவலர்களும் விவசாயப்போதனாசிரியர்களும் அன்றய தினம் விவசாயிகளினால் சமர்பிக்கப்பட்ட பயிர்செய்கை சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கயிருந்தனர்.



இந்த முகாமில் விவசாய தொழில்நுட்ப வழிகாட்டல் பிரசுரங்களும் வழங்கப்பட்டதுடன் வருகை தந்த விவசாயிகளுக்கு விவசாய உற்பத்தி பொருள்களின் சந்தைப்படுத்தலில் 'கொவி பொல' எனும் செயலி தொடர்பாகவும் விளக்கம் வழங்கப்பட்டது.

ஆர்வமுள்ள விவசாயிகள் குறித்த தினங்களில் கிளிநொச்சி பொதுச்சந்தையில் இயங்கிவரும் நிரந்தர பயிர்ச்சிகிச்சை முகாமுக்கு வருகை தந்து தீர்வுகளையும் வேண்டிய ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன் தெரிவித்திருந்தார். (க)

## நிறுவை அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடல்

வவுனியா,ஏப்.18

நிறுவை அளவை உபகரணங்களுக்கான முத்திரையிடப்படும் காலம் வவுனியா மாவட்டசெயலகத்தின் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள்பிரிவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுக்கான நிறுவை , அளவை உபகரணங்களுக்கான முத்திரையிடும் நடவடிக்கைகள் வவுனியா மாவட்டச் செயலகத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணியிலிருந்து 1 மணிவரை பதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே , அளவை உபகரணங்கள் சரி, பிழை பார்த்து முத்திரையிடப்படுவதால் அனைத்து வர்த்தகர்களும் வருகை தந்து சேவையை பெற்றுகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 12 மாதக்காலப்பகுதியில் இலச்சினை இடப்படாத நிறுக்கும் அல்லது, அளக்கும் உபகரணங்களை வியாபாரநோக்கில் உடைமையில் வைத்திருப்பது 1995 ஆம் ஆண்டின் 35 ம் இலக்க அளவீட்டு சட்டங்களின் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றம் என்றும் வவுனியா மாவட்டசெயலகத்தின் அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-110)

## பௌர்ணமி கலந்துரையாடல்

கிளிநொச்சி,ஏப். 18

கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்திச் செயலணியின் மாதாந்த பௌர்ணமி கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணி வரை கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்துக்கு அருகாமையில் உள்ள கிளிநொச்சி மாவட்டச்செயலகப் பயிற்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிறப்பு பேச்சாளராக மருத்துவ கலாநிதி மா.ஜெயராஜா, கலந்துகொண்டு "போருக்கு பின்னரான உளசமூகப் பிரச்சினைகளும் தலையீடுகளும்" எனும் தலைப்பில் உரை நிகழ்த்தவுள்ளார்.

இந்த மாதாந்தக் கலந்துரையாடலானது கடந்த இரண்டு ஆண்டுகளாக தொடர்ச்சியாக கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி அபிவிருத்தியை மையமாகக்கொண்டு நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கலந்துரையாடலில் ஆர்வலர்களைக்கலந்து கொண்டு பயன் பெறுமாறும் தங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைக்குமாறும் கிளிநொச்சி மாவட்டக் கல்வி அபிவிருத்திச் செயலணியின் தலைவர் வைத்திய கலாநிதி மு.சிறிதர் அறிவித்துள்ளார். (க-23)

## குளிரூட்டி செயலிழந்ததால் சடலம் பழுதடைந்துவிட்டது

### தவறு இடம்பெற்றுள்ளதென்பதை மருத்துவமனை நிர்வாகம் ஏற்கிறது

யாழ்ப்பாணம், ஏப். 18

முல்லைத்தீவு மாஞ்சோலை மருத்துவமனை சடலங்கள் வைக்கும் குளிரூட்டி பழுதடைந்ததால், அதற்குள் இருந்த சடலம் பார்க்க முடியாதளவுக்கு உருச்சிதைந்து விகாரமடைந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அதனால் உறவுகள் சடலத்தை பார்க்க முடியாத நிலை ஏற்பட்டது என்று தெரிவித்தனர். தவறு இடம்பெற்றுள்ளதை மருத்துவமனைப் பணிப்பாளர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

துணுக்காயில் கடந்த திங்கட்கிழமை காலை 6.45 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் பழையமுறிகண்டியைச் சேர்ந்த புவனேஸ்வரநாயகம் நிசாந்தன் (வயது - 27) அவர் ஒரு பிள்ளையின் தந்தை. சிகிச்சை பயனளிக்காது மருத்துவமனையில் உயிரிழந்திருந்தார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மல்லாவி மருத்துவமனையிலிருந்து நல்ல நிலையில் கடந்த திங்கட்கிழமை முல்லைத்தீவு மாஞ்சோலை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. விசாரணை உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை நேற்றுமுன்தினம் உறவுகளிடம் ஒப்படைத்தபோது, உறவுகள் அதிர்ச்சியடைந்தனர்.

அதாவது கொடிய தொற்று நோயால் உயிரிழந்தவரின் சடலம் போன்று சடலம் வைக்கப்பட்டிருந்த பெட்டியைத் திறக்க முடியாதவாறு மூடி சீல் வைக்கப்பட்டிருந்தது. இது பற்றி உறவினர்கள் மருத்துவமனை நிர்வாகத்திடம் கேட்டபோது, தவறு இடம்பெற்றுவிட்டதாகக் கூறினர். அதாவது, சடலத்தைப் பாதுகாக்கும் குளிரூட்டியிலேயே வைத்திருந்தோம் என்றும் குளிரூட்டி பழுதடைந்து இயங்காதிருந்தமை பின்னர் தெரியவந்தது என்றும் நிர்வாகத்தினர் கூறினர் என்றும் உறவுகள் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் முகத்தைக்கூட பார்க்க முடியாத நிலமையை உறவுகளுக்கு நிர்வாகம் ஏற்படுத்திவிட்டது என்று உறவினர்கள் கவலை தெரிவித்தனர். இது தொடர்பில் மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் கஜேனிடம் கேட்டபோது, குறித்த குளிரூட்டி பழுதடைந்து அண்மையில் சீர் செய்யப்பட்டிருந்தது. அது இயங்குகிறது என்ற நம்பிக்கையில் சடலம் அதற்குள் வைக்கப்பட்டது. சடலத்தை எடுக்கும் வரையில் இடையில் அவதானிக்கவில்லை. இறுதியில் சடலத்தை எடுக்கும்போதே குளிரூட்டி பழுதடைந்து இயங்கவில்லை என்பது தெரியவந்தது. அதனால் ஏற்பட்ட வெப்பத்தில் சடலம் பழுதடைந்துவிட்டது. என்பது [illegible] உண்மையை உறவுகளிடம் தெரிவித்தோம் என்றார். (த-105)

## மூடமுயற்சித்த தொடருந்து பாதை மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டது

வவுனியா ஓமந்தை பன்றிக்கெய்தகுளம் பகுதியில் அமைந்துள்ள பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவைக்கு திருச்சபை ஒன்றின் நிதி உதவியுடன் சிலமாதங்களுக்கு முன்பு பாதுகாப்பு கேற் ஒன்று அமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது. இந்த நிலையில் குறித்த கடவை சட்டவிரோதமானது என தெரிவித்து, பொதுமக்கள் பயணம்செய்யமுடியாத படி தண்டவாளங்களால் வேலி அமைக்கப்பட்டு புகையிரதத்திணைக்களத்தால் தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கடந்த 5 ஆம் திகதி பொதுமக்களின் நன்மைகருதி தடைப்பட்ட பாதை திறக்கப்பட்டு போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டது. நேற்று வரை பாதை திறக்கபட்டிருக்கும் என்று அன்று தெரிவிக்கப்பட்டது. நேற்றையதினம் காலை தொடருந்துத் திணைக்களத்தில் இருந்து வருகை தந்திருந்த ஊழியர்கள் பாதையை மீண்டும் தடைசெய்து மூட முயற்சித்துள்ளனர் மக்களின் எதிர்ப்பால் இந்த நடவடிக்கை நேற்று கைவிடப்பட்டுள்ளது. (க-110)

## கால்களால் கணினியை இயக்கும் கைகளில்லா முன்னாள் போராளி

### அவரது கணினி நிலையக் கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம், ஏப். 18

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து போரில் இரண்டு கைகளையும் இழந்த செ.செல்வநாயகி (குட்டி) தனது திறமையால் இரண்டு கால்களாலும் கணினிகளை இயக்கி வருகின்றார்.



இவர் ஆரம்பித்த கணினி உலகஉலாநிறுவனத்துக்கு கட்டடம் அமைக்கப்பட்டு மாணவர்கள் கல்வி கற்க வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதற்கான நிதியை, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் லண்டன் தலைவர் சட்டத்தரணி இரத்தினசிங்கம் கட்டடத்துக்கான நிதியை வழங்கியிருந்தார். [illegible] கணினிக் கல்வி பயின்ற மாணவர்களுக்குச் சான்றிதள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணியில் அமைந்த இந்த நிலையத்தின் திறப்பு விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் அதன் நிர்வாகி செ.செல்வநாயகி தலைமையில் நடைபெற்றன. நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார். சட்டத்தரனி இரத்தினசிங்கம் வாடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் க.கனகேஸ்வரன், மருதங்கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.திரவியராசா மற்றும் மக்கள், மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர். (த-70)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாளைப் பகுதியில் மீன்பிடிக்க தெற்குப் படகுகளுக்கு அனுமதி

## சதி எனக் குற்றஞ்சாட்டுகின்றனர் உள்ளூர் மீனவர்கள்

முல்லைத்தீவு, ஏப். 18

**பருவகால கடற்றொழில் நடவடிக்கைகளுக்காக நடப்பாண்டில் தென்னிலங்கையைச் சேர்ந்த மேலும் 26 படகுகளுக்கு முல்லைத்தீவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.**

கொழும்பு கடற்றொழில் திணைக்களம் இந்த அனுமதியை வழங்கியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் சாளை கடற்பரப்பில் தங்கி நின்று தொழில் செய்வதற்கே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மீன்பிடிபாடுகள் உள்ள சாளை, கொக்கிளாய் முகத்துவாரங்களில் தென்னிலங்கையைச் சேர்ந்த மீனவர்களுக்குத் தொடர்ந்தும் அனுமதி வழங்கப்படுவது மாவட்ட மீனவர்களிடையே கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கனவே வழங்கிய அனுமதிகளை குறைப்பதாகக் கூறிக் கொண்டு மேலும் அனுமதிகளை வழங்குவதில் சதிகள் இருக்கும் என்று மாவட்ட மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கடற்றொழில் திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்டவர்களில் 18 படகுகள் நீர்கொழும்பு, சிலாபம், புத்தளம் பகுதிகளைச் சேர்ந்த சிங்கள மீனவர்களுடையது, 8 படகுகள் முஸ்லிம்களினுடையவை. என்று கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தென்னிலங்கையைச் சேர்ந்த ஏராளமான மீனவர்கள் கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். நாயாறு கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், செம்மலை, சாளை என்று அவர்களுடைய பரம்பல் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இந்தமீனவர்களுக்கு வழங்கப்படும் அனுமதிகளை நிறுத்துமாறும், மட்டுப்படுத்துமாறும் மாவட்ட மீனவர்களால் தொடர்ந்தும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன. கடற்றொழில் அமைச்சர், பணிப்பாளர் நாயகம், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் திணைக்களத் தலைவர்கள் என்று அனைவரிடத்திலும் மீனவர்கள் கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். அவர்களுடைய கோரிக்கை தொடர்ந்தும் புறந்தள்ளப்பட்டு வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் தீர்க்கமான முடிவுகளை எட்ட வேண்டும் என்றும், மீனவர்களின் வாழ்வாதாரத்தை, இருப்பை திட்டமிட்டு சிதைக்கும் செயலைக் கண்டிக்க வேண்டும் என்றும் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-21)

## சடலம் மீட்பு

வவுனியா,ஏப்.18

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் நேற்று மதியம் 12.30 மணியளவில் சடலம் ஒன்றை பொலிஸார் மீட்டெடுத்துள்ளனர்.

உறவினர்கள் இல்லாத சமயத்தில் சடலமாக மீட்கப்பட்ட குறித்த இளைஞன் தனிமையில் பண்டாரிக்குளத்தில் உள்ள அவரது இல்லத்தில் இருந்துள்ளார்.

மதியம் 11.30 மணியளவில் தந்தை மகனுக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்டிருந்தபோது மகன் தொலைபேசி அழைப்பை எடுக்கவில்லை. இதனையடுத்து தந்தை வீட்டுக்குச் சென்று மகனின் அறையுள் நுழைந்த பொழுது மகன் தவறான முடிவெடுத்து உயிரிழந்த நிலையில் சடலமாக கிடந்துள்ளார்.

அயலவர்கள் பண்டாரிக்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பண்டாரிக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-222)

## புதிய பொருளாதார மத்திய நிலையம் வெற்றியளிப்பது கேள்விக்குறி

### நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு

புதிதாக அமைக்கப்பட்டுள்ள பொருளாதார மத்தியநிலையம் வெற்றியளிக்கும் என்பது கேள்விக்குறியே என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

வவுனியா ஓமந்தை கமநல சேவை நிலையத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது :

இந்த பிரதேசத்தில் உள்ள மக்கள் பரம்பரை பரம்பரையாக விவசாயம், கால்நடை வளர்ப்பைப் பிரதான தொழிலாக கொண்டுள்ளனர். எனினும் இப்பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு சரியான சந்தை வாய்ப்பு இல்லை. அதேபோல் குறிப்பிட்ட விலைக்கு விற்பனை செய்ய முடியாத நிலமை இருக்கின்றது.

வியர்வை சிந்தி உழைப்பவர்கள் அதனை விற்பனை செய்யும் போது இடைத்தரகர்கள் அதற்குரிய விலையை வழங்குவதில்லை. இது காலம்காலமாக நடந்து வருகின்றது.

உற்பத்தி செய்யப்படும் பொருளுக்கு நிர்ணய விலை இருக்க வேண்டும். உரிய விலையில் விற்பனை செய்வதற்கு பல பிரச்சினைகள் உள்ளன.

நிரந்தரமான தீர்வு காணப்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய நீண்டகால விருப்பம்.

அதற்காகத்தான் எமக்கு கிடைத்த அரிய சந்தர்ப்பமான ஓமந்தையில் பொருளாதார மத்திய நிலையத்தை அமைப்பதற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி அதற்காக ஓமந்தையில் இருபது ஏக்கர்காணியும் ஒதுக்கப்பட்டது. அதனை இங்கு கொண்டு வருவதற்கு நாங்கள் எவ்வளவோ முயற்சி செய்தோம். ஆனால் இன்று அது குறிப்பிட்ட சில நபர்களும் சில அரசியல் கட்சிகளும் தங்களுடைய கட்சி நலனுக்காக செயற்பட்டமையால் வவுனியாவின் எல்லையான மதவுவைத்தகுளத்தில் அதனை அமைத்திருக்கிறார்கள்.

போரால் பாதிக்கப்பட்ட எங்களுடைய பிரதேசத்துக்கு அரசிடமிருந்து பணத்தை பெற்றுக்கொடுப்பதற்கு எங்களுடைய தமிழ் தலைமைகள் பெரிய தவறிழைத்திருக்கிறார்கள்.

எங்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் தலைமைகள் இந்த நான்கு வருடத்தில் பேர் சொல்லக்கூடிய வகையில் எதுவுமே செய்யவில்லை. அதேபோன்று ஒட்டுமொத்தமான பிரச்சினைக்கு தீர்வைக் காண்பது கூட தவறவிடப்பட்டுள்ளது - என்றார். (க-110)

## கமநல சேவை நிலையத்தின் கேட்போர்கூடம் சீரமைப்பு

வவுனியா,ஏப்.18

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனின் 2019 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியில், ஐந்து இலட்சம் ரூபா செலவில் ஓமந்தை கமநல சேவை நிலையத்தின் கேட்போர்கூடம் சீரமைக்கப்பட்டுள்ளமைக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வு கமநல சேவை நிலையத்தில் நேற்று இடம்பெற்றது.

ஓமந்தை கமநலசேவை நிலைய அபிவிருத்தி அலுவலர் கலைச்செல்வன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் ம.தியாகராசா, பிரதேச சபை உறுப்பினர் சிவராசா மற்றும் ஓமந்தை கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள கமக்கார அமைப்பினர் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது ஓமந்தை கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள கமக்கார அமைப்புக்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினருக்கும் இடையிலான சந்திப்பொன்றும் இடம் பெற்றிருந்தது. (க-110)

## மக்கள் விரும்பும் அபிவிருத்தி மதிப்பீட்டுக் கலந்துரையாடல்



கிளிநொச்சி,ஏப்.18

கரைச்சி பிரதேச சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள 21 வட்டாரங்களில் எதிர் வரும் மூன்று ஆண்டுகளுக்குள் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக ஆராய்கின்ற கூட்டங்கள் பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்று வருகிறன.

நேற்று முன்தினம் பரந்தன் வட்டாரத்தில் உறுப்பினர் வி.சாந்தி தலைமையில் பரந்தன் பொது நோக்கு மண்டபத்தில் காலை 10 மணியளவில் கூட்டம் நடைபெற்றது. கரைச்சி பிரதேச சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள ஒவ்வொரு வட்டாரங்களிலும் பொது மக்கள் முன்னுரிமைப் படுத்துகின்ற வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் குறுகிய, நடுத்தர, நீண்ட காலத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களை ஆராய்ந்து அதனை முன்னுரிமைப் படுத்துவது அதனை நிறைவேற்ற மக்கள் கண்காணிப்பு குழு உருவாக்குவது ஆகிய நடைமுறைகளுக்காக இத்தகைய பகுப்பாய்வு கூட்டங்கள் நடைபெற்று வருகிறன எனத் தெரிவிக்கப்படுகிறது (க)

## கற்றாளை பிடுங்குவதற்கு தடை மும்மொழியிலான அறிவித்தல்

மன்னார்,ஏப்.18

வங்காலை கற்றாளம்பிட்டிப் பகுதியில் கற்றாளைச் செடிகளை பிடுங்குவது தடை செய்யப்பட்டுள்ளது என்ற மும்மொழியினாலான அறிவித்தல் பலகை நானாட்டான் பிரதேச சபையால் வைக்கப்பட்டுள்ளது.

வங்காலைப் பகுதியில் தொன்றுதொட்டு அதிகமாக காணப்பட்டுவந்த பல வகை நோய்களை தீர்க்கும் கற்றாளைச் செடியைக் கடந்த வருடத்தில் இருந்து தென்னிலங்கை வியாபாரிகளாலும், மன்னார் மாவட்டத்தில் வசிக்கும் சிலராலும் களவாடப்பட்டு தற்போது மிக குறைந்தளவு செடிகளே காணப்படுகின்றன.

மீதமுள்ள கற்றாளைச் செடிகளைப் பாதுகாக்கும் நோக்கத்தில் நானாட்டான் பிரதேச சபையின் உறுப்பினர் ஞானராஜ் சோசை சபையின் பதினோராவது கூட்டத்தில் தீர்மானம் ஒன்றை முன் வைத்தார்.




வங்காலைப்பகுதியில் கற்றாளை பிடுங்குவதைத் தடை செய்யும் அறிவித்தல் பலகையை மும்மொழிகளிலும் வைக்கவேண்டும் என்று அந்த முன் மொழிவு சபையில் அனைவரினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானமாக நிறை வேற்றப்பட்டது. அதன்படி நானாட்டான் பிரதேச சபை உறுப்பினர்களால் நேற்று முன்தினம் குறித்த பெயர்ப்பலகை வங்காலை கற்றாளம்பிட்டிபகுதியில் வைக்கப்பட்டது. (க-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸார் உட்பட 10 பேரைத் தாக்கி பெண்ணை வன்புணர்ந்தது கும்பல்!

## கந்தளாயில் இப்படி நடந்துள்ளது
## சபை உறுப்பினர் உட்பட இருவர் கைது

கொழும்பு, ஏப். 18

**பொ**லிஸ் அலுவலர்கள் நால்வர் உட்பட 10 பேரைத் தாக்கி வீழ்த்திவிட்டு ஒரு பொலிஸ் அலுவலரின் மனைவியை வன்புணர்ந்துவிட்டுச் சென்றுள்ளது ஒரு கும்பல் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் உட்பட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தளாய், பட்டஹதர பகுதியில் உள்ள குளத்தில் சில நாள்களுக்கு முன்னர் நீராடிக் கொண்டிருந்தபோது இது இடம்பெற்றுள்ளது.

கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும்பொலிஸ்அலுவலர்கள்இருவர்விடுமுறையில் சென்று தமது குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுடன்குறித்தஇடத்தில்நீராடிக்கொண்டிருந்தனர். அதன்போது அங்குவந்த கும்பல் அடாவடியில்ஈடுபட்டுள்ளது. அதுபற்றிஅறிவிக்கப்பட்டதும் பொலிஸ் நிலையத்தில் கடமையிலிருந்துஇரண்டுபொலிஸ்அலுவலர்கள்அந்த இடத்துக்குச் சென்றுள்ளனர். அவர்களையும் விடுமுறையில்வந்தஇரண்டுபொலிஸ்அலுவலர்களையும்அவர்களது குடும்பத்தினரையும் அந்தக் கும்பல் தாக்கியுள்ளது. அந்தக்கும்பலைச் சேர்ந்தவர்களில் சிலர் போதையில் காணப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் காயமடைந்திருந்த குடும்பப் பெண் ஒருவரை அந்தக் கும்பல் வன்புணர்ந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. அந்தப் பெண்பொலிஸ்அலுவலர்ஒருவரின்மனைவி. காயமடைந்தபொலிஸ்அலுவலர்கள்நால்வர் உட்பட10பேர்கந்தளாய்மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ்அலுவலர்களுக்கு, அவர்களதுகுடும்பத்தினருக்கே இப்படி அநீதி நடக்குமென்றால் ஏனையவர்களின் நிலை என்ன என்று சமூக வலைத்தளங்களில் கேள்வியெழுப்பப்படுகிறது. பொலிஸாருக்கும் ஒரு வகையில் தலைகுனிவையே இந்தச் சம்பவம் ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் இவை பற்றிய மேலதிக தகவல்களைப்பொலிஸார்வெளியிடவில்லை. இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். விசாரணை நடக்கிறது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(த-22)

# மாக்கந்துரே மதூஷ் உட்பட 6 பேர் நேற்று நாடு கடத்தல்

## சி.ஐ.டி, போதை தடுப்புப் பிரிவின் கிடுக்கிப் பிடிக்குள் அவர்கள்

கொழும்பு, ஏப். 18

பிரபல பாதாள உலகக் குழுத் தலைவர் மாக்கந்துரே மதூஷுடன் டுபாயில் கைதுசெய்யப்பட்டஅவரின் உறவினர்உள்ளிட்ட6பேர் நாடுகடத்தப்பட்டுள்ளனர்.

அவர்கள்நேற்றுஅதிகாலை 4.50அளவில்நாடுகடத்தப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். குறித்த 6 சந்தேகநபர்களையும் குற்றப்புலனாய்வுத்திணைக்களம்பொறுப்பேற்றுள்ளது. குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் மற்றும்பொலிஸ்போதைப் பொருள்ஒழிப்புப்பிரிவினர் இணைந்துகுறித்தநபர்களிடம் தற்போது விசாரணை நடத்திவருகின்றனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ருவன்குணசேகரதெரிவித்தார்.

இதற்கமைய, மாக்கந்துரே மதூஷுடன்கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களில் 21 பேர் இதுவரையில் நாடு கடத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். கடந்த மாதம் டுபாய் விடுதி ஒன்றில்வைத்துஅவர்உட்பட 20க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். போதைப் பொருள் கடத்தலில் பெரும் புள்ளி என்று இலங்கைப் பொலிஸாரால் தேடப்பட்டுவந்தவரே மாக்கந்துரே மதூஷ். அவருக்குக் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியில் சொத்துக்கள்உள்ளனஎன்று விசாரணைகளைக் கொண்டுபொலிஸார்கூறியிருந்தனர். (த)

# கூட்டணி அமைத்தாலும் எந்தப் பாதிப்புமில்லை!

## ஐ.தே.கட்சி கூறுகிறது

கொழும்பு, ஏப். 18

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும்சிறிலங்காபொதுமக்கள் முன்னணி இணைந்த கூட்டணி வெற்றியடையாது. அது கூட்டணி அமைத்தாலும் இனி ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பாதிப்புவராது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்ஆசுமாரசிங்க தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி மற்றும் பொதுமக்கள் முன்னணியின் கூட்டணி தொடர்பாக ஐக்கிய தேசிய கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் வினவியபோது அவர் மேலும்தெரிவித்ததாவது:

அந்தக் கூட்டணியைக் கலைப்பதற்கான அவசியம் தமக்குக் கிடையாது. அந்தக்கூட்டணியால்தமது அரசுக்கு எவ்வித சவாலும் ஏற்படாது.

தேசியஅரசிலிருந்துசுதந்திரக்கட்சி விலகிச் சென்றதிலிருந்து ஐக்கிய தேசிய கட்சி சுயாதீனமாகவே செயற்பட்டு வருகிறது. சுதந்திரக் கட்சியின் பங்குபற்றல் இல்லாமல் அரசு வெற்றிகரமாகப்பயணித்துவருகின்றது. எனவே எதிர்காலத்தில் சுதந்திரக்கட்சிமகிந்தஅணியினருடன் கைகோர்த்தாலும் அந்த கூட்டணியால் தங்களின் அரசுக்குப் பாதிப்பு ஏற்படாது. எதிர்வரும் அரசதலைவர் தேர்தலும் தங்களுக்குச் சாதமாகவேஅமையும் - என்றார்.

எதிர்வரும் அரசதலைவர் தேர்தலில்மைத்திரி, மகிந்த கூட்டணியைவிடபலமான கூட்டணியொன்றை ஐக்கிய தேசிய முன்னணி அமைக்கும். ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் உருவாகவுள்ளமுன்னணி பொதுமக்கள் முன்னணிக்குச் சவாலாக அமையும் என்றும் ஆசு மாரசிங்க மேலும்தெரிவித்துள்ளார். (த)

### அரச நிறுவன முறைகேடுகளை விசாரிக்க மேலதிக பொலிஸ்

கொழும்பு, ஏப். 18

அரசநிறுவனங்களில் கடந்த 4 வருடங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல் முறைகேடுகள் தொடர்பிலான விசாரணைகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள அரசதலைவர் விசாரணை ஆணைக்குழுவுக்குக்கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் ஆரம்பகட்ட விசாரணைகளுக்காக மேலதிக பொலிஸ் குழுவொன்றுநியமிக்கப்பட்டுள்ளது என்று அரசதலைவர் விசாரணை ஆணைக்குழுவின் தகவல்கள் தெரிவித்தன. புதிய பொலிஸ் பிரிவில் 18 அலுவலர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர். ஆணைக்குழுவின் சாட்சி விசாரணைகள் எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளன.

(த)

### தாய் அடித்துக்கொலை தந்தைக்குப் படுகாயம்

*மகள்பொலிஸாரால்கைது*

கொழும்பு, ஏப். 18

மகள் தாக்குதல் நடத்தினார் என்று கூறப்படும் சம்பவத்தில் தாய் உயிரிழந்துள்ளார். தந்தை காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் கஹவத்தை, மடலகமவில் நேற்று இடம்பெற்றது.

காயமடைந்த இருவரும் கஹவத்தை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் தாய் உயிரிழந்துள்ளார். கஹவத்தையைச் சேர்ந்த 52 வயதுடையவரே உயிரிழந்துள்ளார். சம்பவத்துடன் தொடர்புயை குற்றச்சாட்டில் மகள் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மனநிலை பாதிக்கப்பட்டிருக்கிறார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

(த)

# உதயணன் இலக்கிய விருதுக்கு படைப்புகளை அனுப்பவும்

இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும் லண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து இலங்கை மற்றும் அயலகப் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வண்ணம்இரா.உதயணன் இலக்கியவிருதுவழங்கிமதிப்பளிக்கவுள்ளது. இவ்வாண்டுக்கான விருதுத் தேர்வுக்காகப் படைப்பாளிகள் நூல்களை அனுப்பி வைக்கலாம். அனைத்துப்படைப்புக்களும் முதல் பதிப்பாக இருத்தல் வேண்டும்.

அயலகப் படைப்பாளிகளுக்கான விருதுக்குரிய நூல்கள் தவிர்ந்த ஏனைய துறைசார் நூல்கள் அனைத்தும் இலங்கையில் வாழும் எழுத்தாளர்களினால் எழுதப்பட்டிருக்க வேண்டும். நூல்கள் இலங்கையில் பதிப்பித்திருக்க வேண்டும். ஐ.எஸ்.பி.என் இலக்கம் இடம்பெற்றிருத்தல் வேண்டும்.

அயலகப் படைப்பாளிகளுக்கான விருதுக்குரிய நூல்கள் உலகின் எந்தப் பகுதியில் வாழும் எழுத்தாளர்களினாலும் எழுதப்பட்டிருக்கலாம். உலகின் எந்தப் பாகத்திலும் பதிப்பித்திருக்கலாம். சிறுகதை, நாவல் ஆகிய இரு துறைசார் நூல்களை மட்டும் அனுப்பவேண்டும்.

நூல்கள் 2018 தை முதலாம் திகதி தொடக்கம் 2018 மார்கழி 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பதிப்பித்திருக்கவேண்டும்.

தேர்வுக்காகமூன்றுபிரதிகள் ஜூன் மாதம் 6ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும். இரா.உதயணன் இலக்கிய விருது இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம், இல. 9.2/1, நெல்சன் இடம், கொழும்பு - 06 என்ற முகவரிக்கு நூல்களை அனுப்ப வேண்டும்என்ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (க)

# இந்த வருட இறுதியில் அரசதலைவர் தேர்தல்

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 18

இந்த ஆண்டின் இறுதியில் நிச்சயமாக அரசதலைவர் தேர்தல் நடத்தப்படும் என்று மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் அஜித் மன்னப்பெரும தெரிவித்தார்.

இந்தஅரசதலைவர்தேர்தலிலிருந்துதப்பிக்கவோ அல்லது தேர்தலை உரிய காலத்தில் நடத்துவதைத்தடுத்துநிறுத்தவோஎவராலும் முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கடந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்புதியதேர்தல்முறைமைக்குஅமைவாக நடத்தப்பட்டமையால் உள்ளூராட்சி மன்றங்களின்உறுப்பினர்களின்அதிகரிப்புடன்செலவுகளும்பிரச்சினைகளும்அதிகரித்திருந்தன. இந்த நிலையை எதிர்வரும் மாகாணசபைகளுக்கானதேர்தலின்போது இடமளிக்க முடியாது.

அரசதலைவர் தேர்தலுக்கு முன்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டியுள்ளதை மறந்துவிடக் கூடாது. மாகாண சபைகளுக்கான தேர்தல் புதிய முறையில் நடத்தப்படவேண்டும் - என்றார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தனோடு நிற்பவர்கள் மூளையில்லா முட்டாள்கள்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவிப்பு

வவுனியா, ஏப்.18

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்குப் பின்னால் நிற்பவர்கள் மூளையில்லாத முட்டாள்கள் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலர் செ.கஜேந்திரன்தெரிவித்தார்.

வவுனியா புளியங்குளத்தில் நேற்று முந்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கருத்து தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

மகிந்த ராஜபக்ச பதவிக்கு வரக்கூடாது என்பதற்காகவே நாம் இந்த அரசுக்கு ஆதரவு வழங்குவதாக நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் அண்மையில் தெரிவித்திருக்கிறார்.

சிங்கள மேலாதிக்கத்தை ஏற்படுத்தும் ஒற்றையாட்சி அரசமைப்புக்கு ஆதரவு கொடுத்துவிட்டு இந்தத் தீவில் வேறு எதை நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்?

தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது தமிழ்தேசம் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு அரசியல்தீர்வு. அதனைக் கைவிட்டு பன்னாட்டு மட்டத்தில் அரசைப் பிணை எடுக்கும் வேலையையே கூட்டமைப்பு செய்துவருகின்றது. அது தமிழ்மக்களின் 60 வருட கோரிக்கைகளை நீங்கள் கை விட்டுவிட்டீர்கள் என்பதாகவே அமைகின்றது.

தமிழ் மக்களுக்கு விடுதலை பெற்றுத்தருவோம் என்று பூச்சாண்டி காட்டிகொண்டு இன்னும் எத்தனை காலம் இவர்கள் கடத்தப்போகின்றார்கள்?

**பீதியைக் கொடுத்துள்ளதாம்**

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரவேசம் அரசுக்கும் கூட்டமைப்பு மற்றும் மேற்கு நாடுகளுக்கும் பீதியைக் கொடுத்திருக்கிறது. தமிழ் மக்களின் பேரம் போசும் பலத்தை விட்டு கொடுக்காத ஒரு சக்தி உருவாகப்போகின்றது. அதனைத் தடுத்து தமது எடுபிடிகளின் மூலம் மக்களுக்கு எதையாவது வழங்கவேண்டும். என்ற நோக்கிலேயே கிராம எழுச்சித் திட்டம் உருவாக்கபட்டது. அதற்கு கடந்த தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் எழுச்சியே காரணமாக அமைந்துள்ளது - என்றார். (த-110)

# மேடையிலும் மோதுகின்றனர் அமைச்சர்களான ரவி–சஜித்!

கொழும்பு, ஏப். 18

ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்களும் அமைச்சர்களுமான ரவி கருணாநாயக்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கிடையில் பெரும் கருத்து முரண்பாடு உருவாகி, அந்தச் சண்டை தற்போது பொது மேடைகளில் பேசும் அளவுக்கு வளர்ந்துள்ளது.

அதை இருவருமே அண்மையில் பொது நிகழ்வுகளில் குத்திக்காட்டியும் வெளிப்படையாகப் பேசியும் வருகின்றனர்.

"எவரும் தந்தையை வைத்து அரசியல் செய்ய முடியாது. அந்தக் காலம் மலையேறிவிட்டது. தேர்தலில் தனது தொகுதியை வெல்லத் தகுதியில்லாதவர்கள் தலைமைக் கனவு காணக்கூடாது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கதான். வேறு எவரும் முயற்சிக்கக் கூடாது. ஒற்றுமை கருதியே பொறுமை காக்கின்றோம்.

அதற்கும் ஓர் எல்லையுண்டு என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது" என்று மட்டக்களப்பில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்திருந்தார்.

ரவியின் இந்தக் கருத்துக்கு அம்பாந்தோட்டையில் வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை பதிலடி கொடுத்துள்ளார் அமைச்சர் சஜித் பிரேமதாஸ.

"வங்கிக் கொள்ளை அடித்தவர்கள் எல்லாம் வீராப்புப் பேசுகின்றனர். அப்பாவை வைத்து அரசியல் செய்யலாம். ஆனால், மக்கள் பணத்தைக் கொள்ளையடித்து, இலஞ்சம் வாங்கித்தான் அரசியல் செய்யக்கூடாது. மக்கள் யார் பக்கம் என்பதை விரைவில் நிரூபிப்பார்கள்" என்று சஜித் தெரிவித்துள்ளார்.

அரசதலைவர் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத்தைக் குறிவைத்து ஐக்கிய தேசியக் கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்தும் சதி வேலைகளில் மைத்திரி அணியினரும், மகிந்த அணியினரும் திரைமறைவில் ஈடுபட்டுள்ளனர். இதன் தொடர்ச்சியாகவே ரவி சஜித் மோதல் உக்கிரமடைந்துள்ளது.

இந்த மோதலால் அடுத்த அரசதலைவர் வேட்பாளர் அல்லது தலைமைஅமைச்சர் வேட்பாளராக வரும் சாத்தியம் சஜித்துக்கு அறவே இல்லை என்றும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை சஜித் மீது கடும் அதிருப்தியில் இருக்கின்றது எனவும் கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (த-22)

*முன்னாள் போராளிகளின்*

## வாழ்வாதாரம் பற்றி முதல்வர் கலந்தாய்வு

கொழும்பு, ஏப். 18

மாநகரில் வசிக்கும் முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரம் குறித்து மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன் மற்றும் ஜன நாயகப் போராளிகள் கட்சியின் மட்டு. பிரதி நிதி களுக்கிடையே சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் மாலை மாநகர முதல்வரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

சந்திப்பில் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட இணைப்பாளர் நகுலேஸ் மற்றும் கிழக்கு மாகாண ஊடகப் பேச்சாளர் சாந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாநகரம் தழுவிய ரீதியில் காணப்படும் முன்னாள் போராளிகள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் வாழ்வாதாரம் என்பவற்றை உயர்த்தும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுத்தல், போராளிகளின் பிள்ளைகளின் கல்வி நிலையை மேம்படுத்தும் முகமான ஒத்துழைப்புகள், உதவி களை நல்குதல் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக மாநகரசபையினூடாகவும் நலன் விரும்பிகளின் ஒத்துழைப்பு ஊடாகவும் பல்வேறு செயற்றிட்டங்கள் தற்போதும் இடம் பெற்றுவருகின்றன.

தொடர்ந்து செயற்றிட்டத்தை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதாக மாநகர முதல்வர் இதன்போது தெரிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த)



தமிழ் - சிங்கள புத்தாண்டில் தலைக்கு எண்ணெய் தேய்க்கும் நிகழ்வு, ஹற்றன் நீக்ரோதாரம விகாரையில் நேற்றுக் காலை 7.40 மணிக்கு நடைபெற்றது. விகாரையின் தலைமைத் தேரர் சங்கைக்குரிய மாகம விமலதேரர் தலைமையில் இது நடைபெற்றது. எண்ணெய் தேய்க்கும் நிகழ்வுக்கு தமிழ், சிங்கள, முஸ்லிம் இனத்தவர்கள் கலந்து கொண்டனர். பொலிஸ் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## சம்பளத்தை அன்பளிப்பாக வழங்கினார் நாமல் எம்.பி.

கொழும்பு, ஏப். 18

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தனது ஏப்ரல் மாதச் சம்பளத்தை மஹரகம புற்றுநோய் மருத்துவமனைக்கு வழங்கியுள்ளார் என்ற தெரிவிக்கப்படுகின்றது.

இதை அவர் தனது டுவிட்டர் வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார். (த)

## போதைப் பொருள் வைத்திருந்தாரென சட்டத்தரணி உட்பட மூன்று பேர் கைது

கொழும்பு, ஏப். 18

கொள்ளுபிட்டியில் ஐஸ்ரக போதைப்பொருள் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் சட்டத்தரணி உட்பட மூவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த)

# அதிகாரிகளின் பக்கச்சார்பு சிக்கல்கள் குறித்து பேச்சு

## ஆசிரிய சேவைச் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 18

யாழ்ப்பாணக் கல்வி வலய உள்ளக இடமாற்றம் நடைபெறாமை, சில அதிகாரிகளின் பக்கச்சார்பு உள்ளிட்ட விடயங்கள் குறித்து மாகாணக் கல்விப் பணிப்பாளருடன் கலந்துரையாடியுள்ளோம் என்று இலங்கை ஆசிரிய சேவைச் சங்கம் தெரிவித்தது.

இலங்கை ஆசிரியர் சேவை சங்க வடக்கு மாகாண செயலர், ஆசிரியர் விடுதலை முன்னணியின் செயலர் ஆகியோர் மாகாணக் கல்வித் திணைக்களத்தில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமாரை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர் என்று சேவைச் சங்கம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2015 ஆண்டுக்குப் பின்னர் யாழ்ப்பாண வலயத்தில் நடைபெறாத உள்ளக இடமாற்றம், சில அதிகாரிகளின் பக்கச்சார்பான செயற்பாடுகள், சில ஆசிரியர் சங்கங்களின் சுயநல போக்கு, தனி நபர் அட்டூழியங்கள், துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் நியமனம், தனியார் வகுப்புக்களால் மாணவர்கள் படும் அவஸ்தைகள், வகுப்பறை முகாமைத்துவம், கல்வித் திட்டத்தில் உள்ள குறைகள், நேர்மையான அதிபர்கள் சிலர் சில தொழிற்சங்கங்களின் பழிவாங்கலுக்கு உட்படுதல், பாடசாலை பௌதிக வளம், கல்வியில் அரசியல் தலையீடுகள் முதலிய பல விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன.

யாழ்ப்பாணக்கல்வி வலயத்தில் கல்வி நிர்வாகத்தை மேற்கொள்ள சில ஆசிரியர் சங்கங்கள்தடையாகவுள்ளன. யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் இன்னும் கடமையைப் பொறுப்பேற்கவில்லை. 2019 ஆம் ஆண்டு யாழ்ப்பாண வலய உள்ளக இடமாற்றத்துக்குரிய செயற்றிட்டங்களைத் தாம் விரைவில் முன்னெடுப்பதாகவும், முதல் நியமனத்தில் எட்டு வருடங்கள் கட்டாயமாக கடைப்பிடிக்கப்படும் எனவும் மாகாணப் பணிப்பாளர் வாக்குறுதிகள் வழங்கினார் என்று சேவைச் சங்கச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (த)

# ஆசிய அபிவிருத்தி வங்கி 800 மில்லியன் கடனுதவி

கொழும்பு, ஏப். 18

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை அதிகரிப்பதற்கான கடனை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி தீர்மானித்துள்ளது.

அதற்கமைய 800 மில்லியன் ரூபாவைக் கடனாக வழங்க அந்த வங்கி தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 4 வருடங்களில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி என்ற திட்டத்துக்கே ஆசிய அபிவிருத்தி வங்கி குறித்த நிதியுதவி வழங்கியுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

வேலை வாய்ப்புக்கள், கிராமப்புற பொருளாதார அபிவிருத்திகள், வருமானத்தை அதிகரித்தல் போன்ற வேலைத்திட்டங்களைஇதன் மூலமாகச் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (த)

# தமிழகத்திலிருந்து 25 குடும்பங்கள் 23 ஆம் திகதி நாடு திரும்புகின்றன

கொழும்பு, ஏப். 18

போர்க் காலத்தில் ஏதிலிகளாக தமிழ் நாட்டுக்குச் சென்றவர்களில் 25 குடும்பங்களைச் சேர்ந்த 48 பேர் எதிர்வரும் 23ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளனர்.

தேசியகொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், மீள்குடியேற்றம், மறுவாழ்வு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலர் வே.சிவஞானசோதி இதனைத் தெரிவித்தார்.

அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

23 ஆண்களும் 25பெண்களுமாக 48 பேர், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களுக்குச் செல்லவுள்ளனர்.

இவர்களுக்கு இலவசப்பயணச்சீட்டு, ஒன்றிணைத்தல் மானியக் கொடுப்பனவாக வயது வந்தவர்களுக்கு ரூ.10 ஆயிரம், வயது குறைந்தவர்களுக்கு ரூ.5 ஆயிரம், போக்குவரத்துக் கொடுப்பனவாக ரூ.2ஆயிரத்து 500, உணவு அல்லாத மானியக் கொடுப்பனவாகதனிநபருக்கு ரூ.5 ஆயிரம், குடும்பத்துக்கு ரூ.10 ஆயிரம் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் தூதரக அலுவலகத்தால் வழங்கப்படுகின்றது. வருபவர்களுக்கு மீள்குடி யேற்ற அமைச்சால் வானூர்தி நிலையத்தில் 5 ஆயிரம் ரூபாவும் தற்காலிக கொட்டகைகளுக்காக ரூ.25 ஆயிரம் ரூபாவும், உபகரணங்களுக்கு ரூ.3ஆயிரம்ரூபாவும் காணி துப்பரவு செய்வதற்கு ரூ.5 ஆயிரம் ரூபாவும் கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

வர்ழ்வாதாரத் திட்டங்களிலும்வீட்டுத்திட்டங்களிலும் தெரிவின்போது சிறப்புப் புள்ளிகள் வழங்கப்படுகின்றன என்று செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிடப்பில் போடப்பட்டிருக்கும்

# இலங்கை-இந்திய மீனவர் பிரச்சினை 60 நாள்களுக்குள் தீர்க்கப்பட வேண்டும்

## இந்திய மீனவர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.18

இலங்கை - இந்திய மீனவர்களின் பேச்சு கிடப்பில் போடப்பட்டுள்ளது. தற்போது தொடங்கியுள்ள மீன்பிடித் தடைக் காலத்துக்குள்ளாகவே பேச்சை மீள ஆரம்பித்து நிரந்தரத் தீர்வை எட்டவேண்டும். பாரம்பரிய இடத்தில் இருநாட்டு மீனவர்களும் பரஸ்பரமாக மீன்பிடிக்க இலங்கை,இந்திய அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று தமிழக மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மீன் இனப் பெருக்ககாலமான 60 நாள்கள் இந்தியாவில் விசைப்படகு மீனவர்கள் மீன்பிடிக்க மாட்டார்கள். இந்த 60 நாள்களுக்குள்ளேயே மீனவர்கள் பிரச்சினை தொடர்பான தீர்வைப் பெற்றுத் தரவேண்டும் என்று மீனவர்கள் கோரியுள்ளனர்.

இது தொடர்பாக இராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவர் ஜேசுராஜா மேலும் தெரிவித்ததாவது:

மீன்பிடிதடைக் காலத்தில் தமிழக அரசு வழங்கும் 5ஆயிரம் ரூபா உதவியை 10 ஆயிரம் ரூபாவாக உயர்த்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடித்துச் செல்லப்பட்ட எங்களது வாழ்வாதாரமான விசைப்படகுகளை மீட்டுத்தர வேண்டும். மீன் இனப்பெருக்க காலத்தில் விசைப் படகுகளைப் போல இயந்திரம் பொருத்திய நாட்டுப் படகுகளுக்கும் மீன்பிடிக்கச் செல்ல அரசு தடை விதிக்க வேண்டும். அப்போது தான் அரசின் திட்டம் நிறைவேறும். தடைக் காலம் முடிந்து செல்லும் விசைப்படகு மீனவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படாது.

இலங்கை கடற்படையினரின் தொடர் தாக்குதல் மற்றும் கைது நடவடிக்கையால் ராமநாதபுரம் மீன்பிடி தொழில், தடைக்காலத்துக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே பாதிப்படைந்துவிட்டது.

ஆகவே கிடப்பில் போடப்பட்டுள்ள இரு நாட்டு மீனவர்களின் பேச்சை தடைக் காலத்துக்குள்ளேயே மீள ஆரம்பித்து நிரந்தர தீர்வை எட்ட இலங்கை-இந்திய அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (த-21)

## மருந்து வகைகளின் விலைகளை பகுப்பாய்வு செய்யும் நடவடிக்கை

கொழும்பு,ஏப்.18

சந்தையிலுள்ள மருந்து வகைகளின் விலைகளை பகுப்பாய்வு செய்யும் நடவடிக்கை இறுதிக்கட்டதை அடைந்திருப்பதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குறுத்தல் அதிகார சபையின் விலைக் கட்டுப்பாட்டுக் குழு இந்தப் பணியில் ஈடுபட்டு வருகிறது.


அரசு இதுவரை 73 மருந்து வகைகளின் விலைகளை ஒழுங்குறுத்தியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதற்கமைய, புற்று நோயாளர்கள் பயன்படுத்தும் 95 சதவீதமான மருந்துகளை அரசு கொள்வனவு செய்கிறது. புற்றுநோய் மருந்துகளுக்கான விலை மனுக்கோரலின் போது, சமர்ப்பிக்கக்கூடிய உயர்ந்தபட்சவிலை 95 ரூபாவாகும் என்ற சுற்றறிக்கையையும் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.

மேலும் 27 மருந்து வகைகளின் விலைகளும் ஒழுங்குறுத்தப்படவுள்ளன. இதனைத் தொடர்ந்து தனியார் மருத்துவமனைகளை ஒழுங்குறுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் எனவும் அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். (க)

## குடும்பத்துடன் சென்று

# திருப்பதியில் லட்டு வாங்கிய மைத்திரி



யாழ்ப்பாணம், ஏப்.18

இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன திருப்பதிக்குச் சென்று ஏழுமலையானை தரிசித்து, அங்கு பிரசித்தி பெற்ற திருப்பதி லட்டைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன இரண்டு நாள்கள் பயணமாக நேற்று முன்தினம் இந்தியா சென்றிருந்தார். திருப்பதி ஏழு மலையானைச் தரிசிப்பதற்காகவே அவர் இரண்டு நாள்கள் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார் என்று இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

சிறப்பு வானூர்தி மூலம் ரேணிகுண்டா வானூர்தி நிலையத்துக்கு சென்றமைத்திரி அங்கிருந்து மகிழுந்து மூலம் திருமலைக்குச் சென்றார். அவரைத் திருமலை திருப்பதி தேவஸ்தான தலைமை செயல் அலுவலர் அணில் குமார் சின்கால், இணைச் செயல் அலுவலர் சீனிவாச ராஜு ஆகியோர் வரவேற்றனர். பத்மாவதி விருந்தினர் மாளிகையில் ஓய்வெடுத்து நேற்று அதிகாலை சுப்ரபாத சேவையில் குடும்பத்தாருடன் கலந்து கொண்டு சுவாமி தரிசனத்தில் ஈடுபட்டார். (21)

## சட்ட விரோத கசிப்பு உற்பத்தி மையம் இளைஞர்களால் சுற்றிவளைப்பு

மட்டக்களப்பு,ஏப்.18

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள பன்சேனை கிராமத்தில் சட்ட விரோதமாக இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி மையம் ஒன்று நேற்று முன்தினம் அதிகாலை பிரதேச இளைஞர்களால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

அரசதலைவரின்போதைத் தடுப்பு வேலைத் திட்டத்தின் கீழ்,வவுணதீவு பிரதேச செயலகத்தின் விழிப்பூட்டல் செயற்றிட்டத்துக்கமைய பன்சேனை இளைஞர்கள் மூலம் இந் நடவடிக்கை இடம்பெற்றது.

இதன்போது கசிப்பு (வடிசாராயம்) உற்பத்தி செய்யும் 19 பெரல்களுடன், கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் சில பொருள்களும் கைப்பற்றப்பட்டதுடன், சில பொருள்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

பொருள்களை பொலிஸார் வந்து தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரிய போதும், அதனை நேரடியாக ஒப்படைக்காமல் வவுணதீவு பிரதேச செயலர் ஊடக பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதன் போது பிரதேச செயலர் எஸ். சுதாகர், உதவிப் பிரதேச செயலர் திருமதி சுபா சதாகரன் மற்றும் கொக்கட்டிச்சோலை பொலிஸ்நில்லயப்பொறுப்பதிகாரி, பன்சேனை கிராம இளைஞர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பொலிஸாரும் வவுணதீவு பிரதேச செயலகமும் கிராம மக்களுடன் இணைந்து இவ்வாறான சிறப்புப் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளை அண்மையில் வவுணதீவு பிரதேசத்தில் ஆரம்பித்துள்ளனர். (க)

## நோயாளர்களை நிபுணர்கள் 10 நிமிடங்கள் பார்க்க வேண்டும்!

### அமைச்சர் ராஜித அறிவுறுத்து

கொழும்பு, ஏப். 18

தேசிய மருத்துவமனைகளில் விடுதிகளில் சேர்க்கப்பட்டிருக்கும் நோயாளர்களை மருத்துவ நிபுணர்கள் குறைந்தது 10 நிமிடங்கள் பார்வையிடவேண்டும் என்ற புதிய கட்டுப்பாட்டை நடைமுறைக்குக் கொண்டுவர சுகாதார சேவைகள் மற்றும் போசாக்கு அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த மாதம் தொடக்கம் இந்தக் கட்டுப்பாட்டை நடைமுறைக்குக்கொண்டுவரும் அர சிதழ் அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என்று அமைச்சுக் குறிப்பிட்டுள்ளது.

இந்த நடைமுறையைப் பின்பற்றுவதை உறுதி செய்யும் வகையில் நேரக் கண்காணிப்பு இயந்திரம் மருத்துவ நிபுணரின் அறையில் பொருத்தப்படவுள்ளது என்றும் சுகாதார அமைச்சுச் சுட்டிக்காட்டியுள்ளது.

**எதிர்ப்பு நிராகரிப்பு**

இந்தத் திட்டத்துக்கு மருத்துவ நிபுணர்கள் சங்கம் எதிர்ப்பை வெளியிட்டதுடன் நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு 7 நிமிடங்கள் போது மானது என்று சுட்டிக்காட்டியிருந்தது. எனினும் மருத்துவ நிபுணர்கள் சங்கத்தின் யோசனையை நிராகரித் துள்ள சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, மருத்துவ நிபுணர்கள் குறைந்தது 10 நிமிடங்கள் பார்வையிடவேண்டும் என்ற புதிய கட்டுப்பாட்டை நடைமுறைக்குக் கொண்டுவரும் அரசிதழ் அறிவிப்பை வெளியிடவுள்ளார்.

இதேவேளை, இந்தப் புதிய நடைமுறையைத் தனியார் மருத்துவமனைகளும் பின்பற்றும் வகையில் அரசிதழ் அறிவிப்பில் குறிப்பி டப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (க)

## 60 நாள்கள் தடை இந்தியாவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.18

மீன் இனப் பெருக்க காலமாக ஏப்ரல் 15 முதல் ஜீன் 15 வரையிலான 60 நாள்கள் விசைப் படகு மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்ல இந்திய அரசு தடை விதித்துள்ளது.

2001 ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை தமிழக அரசு 45 நாள்கள் மட்டுமே கடைப்பிடித்து வந்தது. 2017ஆம் ஆண்டு தொடக்கம் அரசு 60 நாள்கள் மீன்பிடித் தடைகாலமாக நீடித்துள்ளது. தடைக்காலம் நடைமுறைக்கு வந்ததால் ராமநாதபுரம், புதுக்கோட்டை, தூத்துக்குடி, நாகை, தஞ்சை, சென்னை, திருவள்ளுர் உள்ளிட்ட நீலாங்கரை தொடக்கம் குளச்சல் வரையிலான கிழக்கு கடற்கரைத் துறைமுகங்களில் உள்ள 13 மீன்பிடி மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரத்து 600 விசைப் படகுகள் கடலுக்குச் செல்லாமல் நங்கூரமிட்டு கரையோரம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

மீனவர்கள் மீன்பிடிவலை கள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை பாதுகாப்பாக வைக்க வீடுகளுக்குக் கொண்டு செல்கின்றனர்.

அரசுக்கு ஆண்டு தோறும் பல கோடி அண்னியச் செலாவணியை ஈட்டித் தந்த மீன்பிடி தொழிலாளர்கள் தற்போது தங்களது வாழ்வாதாரத்தைத் தேடி மாற்றுத் தொழிலுக்காகவும் மீன்பிடித் தொழில் தேடியும் வேற்று மாநிலங்களுக்கு புறப்படத் தயாராகி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மீன்பிடித் தடைக்காலத்தால் சுமார் 4 லட்சத்து 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீன்பிடித் தொழிலாளர்களும் சுமார் 15 லட்சத்துக்கும் மேறப்பட்ட மீன்பிடி சார்பு தொழிலாளர்களும் முற்றிலும் வேலையிழந்துள்ளனர் என்று மீன்பிடி தொழிலாளர் சங்கத் தலைவர் செந்தில் தெரிவித்தார்.

மீன்களின் இனவிருத்திக்காக மத்திய மாநில அரசுகள் மீன்பிடித் தடைக்காலம் ஒன்றை வரையறை செய்து நடைமுறைப்படுத்தி வருகிறது.

கிழக்குக் கடற்கரைப் பகுதிகளான தமிழ்நாடு, ஆந்திரா, ஒடிசா ஆகிய மாநிலங்களில் மீன்பிடித் தடைக்காலம் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் தொடங்கியது.

கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் தடைக் காலம் முடிந்த 15 நாள்களில் மேற்கு கடற்கரை பகுதிகளான கேரளா, கர்நாடகம், கோவா, மராட்டியம் போன்ற மாநிலங்களில் மீன்பிடி தடைக் காலம் நடைமுறைக்கு வரும்.

கிழக்குக் கடற்கரைப் பகுதிகளில் உள்ள தமிழகத்தின் திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, திருவாரூர், தஞ்சாவூர், ராமநாதபுரம், தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரி ஆகிய 13 கடலோர மாவட்டங்களை சேர்ந்த 591 மீன்பிடி கிராமங்களுக்கும், புதுச்சேரி, காரைக்கால் பகுதி மீனவர்களுக்கும் இந்தத் தடைக்காலம் பொருந்தும். (த-21)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குருதியைப் பரிசோதிக்க உடலின் சகல பகுதிகளிலுமா குருதி எடுப்பீர்கள்?

## தேர்தல் ஆணையாளர் கேள்வி

புதுடெல்லி,ஏப்.18
"நோயாளிக்குக்குருதிப்பரிசோதனை செய்வதாயின் உடலில் ஓர் இடத்தில் குருதி எடுப்பீர்களா, 20 இடத்தில் எடுப்பீர்களா?" என்று மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் தொடர்பாகத் தலைமைத் தேர்தல் ஆணையாளர் சுனில் அரோரா கேள்வி எழுப்பினார். மின்னணுவாக்குப்பதிவுஇயந்திரங்களில் முறைகேடுகள்நடப்பதாகவும், பழைய வாக்குச் சீட்டு முறையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் பல்வேறு கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. இந்த நிலையிலேயே சுனில் அரோரா இவ்வாறு கேள்வி எழுப்பினார்.
இயந்திரங்கள் என்பது தேர்தல் ஆணையகத்தின்கண்டுபிடிப்புஅல்ல. அவை 20 ஆண்டுகளுக்கு மேலாக பயன்பாட்டில்உள்ளன. அந்தஇயந்திரங்களைத் தேர்தலில் பயன்படுத்த வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது. அதைத் தேர்தல் ஆணையகம் செயற்படுத்தி வருகிறது. நோயாளிக்குக் குருதிப் பரிசோதனை செய்ய விரும்பினால், அவரது உடலில் ஓர் இடத்தில் குருதி மாதிரி எடுப்பீர்களா அல்லது20இடங்களில்எடுப்பீர்களா? இந்த இயந்திரங்கள் முழுமையானவை. அவற்றில் முறைகேடுகள் செய்யமுடியாது. ஆனால், இயந்திரங்களில் கோளாறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது - என்று அவர் மேலும் கூறினார்.



# பரப்புரையில் ஈடுபட பலருக்குத் தடை

புதுடெல்லி,ஏப்.18
இந்தியத் தேர்தல் விதிகளை மீறி நடந்து கொண்டதாக இந்தியாவின் உத்தர பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் பரப்புரையில் ஈடுபடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. 72மணித்தியாலங்களுக்கு அவர் தேர்தல்பரப்புரையில்ஈடுபடக்கூடாது என்றுஇந்தியத்தேர்தல்ஆணையகம் தெரிவித்தது.
அத்தோடு, பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவர் மாயாவதிக்கு 48 மணித்தியாலங்களும், மத்திய அமைச்சரும், பா.ஜ.க. தலைவருமான மேனகா காந்திக்கு 48 மணித்தியாலங்களும்பரப்புரைக்குத்தடைவிதித்துள்ளதுதேர்தல் ஆணையகம். தேர்தல் நேரங்களில் வெறுப்பைத் தூண்டும் விதமாகப் பேசியதாகக் குற்றம்சாட்டப்பட்டதாலேயே இவர்கள் மீது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையகம் மேலும் தெரிவித்தது.
இவர்கள்தவிர உத்தரபிரதேசமாநிலசமாஜ்வாதிகட்சியின் மூத்த தலைவர் ஆசம்கான், பொதுமேடையில் நடிகை ஜெயப்பிரதாவைப் பாலியல் ரீதியாக விமர்சித்துச் சர்ச்சையில் சிக்கி உள்ளமையும், பல்வேறு தரப்பினரால் கண்டனத்துக்கு உள்ளான அவர் மீதுவழக்குப்பதிவுசெய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# நாடு கடத்தப்பட்டார் நடிகர்!

கொல்கத்தா,ஏப்.18
மம்தாபானர்ஜிதலைமையிலான திரிணமூல் காங்கிரஸ் கட்சி சார்பில் இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில்பரப்புரையில் ஈடுபட்ட பங்களதேஷைச் சேர்ந்த புகழ்பெற்ற நடிகர் பிர்தோஸ் அகமதுவை நாட்டைவிட்டுவெளியேறுமாறு இந்திய அரசு உத்தரவிட்டது.



வியாபாரம்சார்ந்தநுழைவிசைவுமூலம்இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்ட பிர்தோஸ் அகமது, திரிணமூல் காங்கிரஸ்கட்சிக்காகக் கொல்கத்தா வின் பல்வேறு இடங்களில்கட்சித்தலைவர்களுடன் இணைந்துபரப்புரையில் ஈடுபட்டார். இதுதேர்தல்விதிமீறல்என்றுதேர்தல்ஆணையகத்தில் பா.ஜ.க முறைப்பாடளித்தது. இதையடுத்தே அவரை நாட்டைவிட்டுவெளியேற்றும் உத்தரவுபிறப்பிக்கப்பட்டது. கறுப்புப் பட்டியலிலும் பிர்தோஸ் அகமது சேர்க்கப்பட்டுள்ளதால், அவர் எதிர்காலத்தில் இந்தியாவுக்குப் பயணிப்பதில் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டி வரும் என்றும் கூறப்படுகிறது.

# ஓய்ந்தனபரப்புரைகள் இன்று வாக்குப்பதிவு

## கர்நாடகாவில் முதல் கட்டத் தேர்தல்

பெங்களூரு,ஏப்.18
இந்தியாவின் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு கர்நாடக மாநிலத்தில் இன்று ஆரம்பமாகிறது. உடுப்பி, ஹாசன், தென்கன்னடம், சித்ரதுர்கா, தும்கூரு, மண்டியா, மைசூரு, சாமராஜ்நகர், ஊரகபெங்களூரு, வட பெங்களூரு, மத்திய பெங்களூரு, தென் பெங்களூரு, சிக்கபள்ளாப்பூர், கோலார் ஆகிய 14 தொகுதிகளில் இந்த வாக்குப்பதிவு நடக்கிறது.
இதில்காங்கிரஸ், பா.ஜ.க., ம.ஜ.த., பகுஜன்சமாஜ்மற்றும் சுயேச்சைகள் என 241 உறுப்பினர்கள் போட்டியிடுகின்றனர். இந்தத்தொகுதிகளில்இன்றுவாக்குப்பதிவுநடப்பதால் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியுடன் பரப்புரைகள் நிறைவடைந்தன.
வாக்குப்பதிவுக்காக14தொகுதிகளிலும்பொலிஸ்பாதுகாப்புப்பலப்படுத்தப்பட்டுள்ளது. கர்நாடகமாநிலத்தில்நாடாளுமன்றத் தேர்தல் 2 கட்டங்களாக நடக்க இருப்பதும், அதில் முதல் கட்டமே மேற்படி 14 தொகுதிகளுக்குமுரிய வாக்குப் பதிவு என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வேலூரில் தேர்தல் நிறுத்தம்

சென்னை,ஏப்.18
வேலூரில் தேர்தல் இடை நிறுத்தப்பட்டது. தேர்தல் ஆணையகத்தின் பரிந்துரையை ஏற்று வேலூர் மக்களவைத் தொகுதியின் தேர்தலை நிறுத்துவதாக இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அறிவித்தார்.
அதைஎதிர்த்துத்தொடரப்பட்டவழக்கையும்சென்னைஉயர் நீதிமன்றம் ஒத்தி வைத்தது. மார்ச் 30ஆம் திகதியன்று முன்னாள் தி.மு.க. அமைச்சரும் அந்தக் கட்சியின் பொருளாளருமான துரைமுருகன் இல்லத்திலும் அவருக்கு நெருக்கமானவர்களின் இடங்களிலும் வருமான வரித்துறை சோதனை நடத்தியது.
இதில் துரைமுருகன் வீட்டிலிருந்து கணக்கில் காட்டப்படாத பலஇலட்சரூபாய்களும், துரைமுருகனின்மகன்கதிர்ஆனந்துக்கு நெருக்கமானவர்களிடமிருந்தும் பல கோடி ரூபாய்களும் மீட்கப்பட்டன. இது குறித்துக் கருத்துத் தெரிவித்த துரை முருகன், தங்களைத் தேர்தல் களத்தில் சந்திக்க முடியாதவர்கள் இவ்வாறு செய்வதாகக் குற்றம்சாட்டினார்.
இந்த விவகாரம் தொடர்பாகப் பொலிஸார் வழக்குகளைப் பதிவு செய்தனர். பெருந்தொகையான பணம் வேலூர்த் தொகுதியில் பிடிபட்டதால் அந்தத் தொகுதியில் தேர்தலை நிறுத்த வேண்டுமென இந்திய குடியரசுத் தலைவருக்குத் தேர்தல் ஆணையகம் பரிந்துரை செய்தது.
இந்த நிலையிலேயே அந்தத் தொகுதியில் தேர்தல் நிறுத்தப்பட்டது. இதற்குப்பலதரப்பினரும்தமதுகண்டனத்தைப்பதிவு செய்தனர். இது ஜனநாயகப் படுகொலை என, ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ கண்டனம் தெரிவித்தார்.

# ஒடிசாவில் வாக்குப்பதிவு நிறைவு

மல்காங்கிரி,ஏப்.18
ஒடிசா மாநிலத்தில் அமைதியான முறையில் வாக்குப்பதிவுகள் நடந்தேறின. ஒடிசாமாநிலத்தில் 4 கட்டங்களாகத் தேர்தல் நடக்கிறது.
அங்குள்ள 21தொகுதிகளில் முதல் கட்டமாக 4 தொகுதிகளுக்குக் கடந்த 11ஆம் திகதி மிக அமைதியான முறையில் வாக்குப் பதிவு நடந்து முடிந்தது.
இந்த 4 தொகுதிகளும் மாவோயிஸ்ட் பிரச்சினையால் பாதிக்கப்பட்ட மல்காங்கிரித்தொகுதியும் ஒன்று. அங்கும் எந்தவித அசம்பாவிதங்களுமின்றி வாக்குப்பதிவுகள் நடந்து முடிந்தன. 2014ஆம் ஆண்டு நடந்த தேர்தலின் போது குறித்த தொகுதிக்கு உட்பட்ட 15 வாக்குச் சாவடிகளைத் தாக்கி அங்கிருந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை மாவோயிஸ்ட்கள் எடுத்துச் சென்றமை குறிப்பிடத்தக்கது.



# இன்றைய நாள்

**மேடம்:** நண்பருக்கு தேவையறிந்து உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்யவும். லாபம் சுமாராக இருக்கும். பெண்கள் குடும்ப நலனில் கவனம் செலுத்துவர்.

**இடபம்:** பேச்சு, செயலில் நிதானம் வெளிப்படும். புதியவர் வருகையால் தொழில் வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். மிதமான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாகலாம்.

**மிதுனம்:** புதிய நண்பர்களின் அறிமுகமும் உதவியும் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் கூடுதல் மூலதனம்செய்வீர்கள். வெகுநாள்வாங்க நினைத்த பொருளை வாங்குவீர்கள்.

**கடகம்:** எதிர்ப்பாளரால் உருவான தொந்தரவு விலகும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். ஆதாயம் கூடும். பிள்ளைகள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**சிம்மம்:** திட்டமிட்ட பணிகளில் குளறுபடி ஏற்படலாம். நலம் விரும்புவரின் ஆலோசனை நிம்மதிக்கு வழிவகுக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும்.

**கன்னி:** உடல்நலத்தில் கூடுதல் கவனம் தேவை. நண்பரின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் மறை முகப்போட்டி குறுக்கிடலாம். லாபம் சுமாராக இருக்கும். குடும்பத் தேவை நிறைவேறும்.

**துலாம்:** பகைவரிடம் விலகி கவுரவம் பாதுகாத்திடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையால் அவதிப்படுவர். ஒவ்வாத உணவுகளை தவிர்ப்பது நல்லது.

**விருச்சிகம்:** மனதில் இருந்த கவலை தீரும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**தனுசு:** மனதில் புத்துணர்வு உருவாகும். பணிகளில் ஆர்வமுடன் செயல்படுவீர்கள். தொழிலில் உற்பத்தி விற்பனை வியத்தகு அளவில் செழிக்கும். உபரி பணவரவு சேமிப்பாகும்.

**மகரம்:** மனதில் இனம்புரியாத குழப்பம் ஏற்படலாம். தொழில் வியாபாரம் தாமத கதியில் இயங்கும். சேமிப்பு பணம் திடீர் செலவால் கரையும். நண்பரின் செயலை குறை சொல்ல வேண்டாம்.

**கும்பம்:** சூழல்நிலை உணர்ந்து பேசுவது நல்லது. தொழிலில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற கூடுதல் அவகாசம் தேவைப்படும். மிதமான வருமானம் கிடைக்கும்.

**மீனம்:** பணியில் நேர்த்தியும் கலை ரசனையும் நிறைந்திருக்கும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். நிலுவைப் பணம் வசூலாகும். கலையம்சம் நிறைந்த பொருள் வாங்குவீர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுனாமியால் சேதமடைந்த 'புகுஷிமா'வின்


# அணுக் கழிவுகளை அகற்றும் முதற்கட்டம் ஆரம்பம்

டோக்கியோ,ஏப்.17

உலகில் நடந்த மிகப் பெரிய அணு உலை விபத்துகளில் ஒன்றாக ஜப்பானின் புகுஷிமா அணு உலை விபத்துக் கருதப்படுகிறது. 2011ஆம் ஆண்டு ஏற்பட்ட நிலநடுக்கம் மற்றும் சுனாமியால் விபத்துக்குள்ளாகிச் சிதைவடைந்த குறித்த அணு உலை மிகப்பெரிய அணுக் கதிர்வீச்சுக் கசிவைத் தோற்றுவித்தது.

இந்த அணு உலையில் இருந்து அணுக்கரு எரிபொருளை அகற்றும் பணியை ஆரம்பித்தது அந்த அணு உலையை இயக்கிய டோக்கியோ எலெக்ட்ரிக் (டெப்கோ) என்கிற நிறுவனம். அதன் முதற் கட்டமாக மூன்றாம் எண் என்று இலக்கமிடப்பட்டிருக்கிற அணு உலைக்கு அருகே உள்ள எரிபொருள் சேமிப்புக் கிடங்கில் இருந்து, அணுக் கசிவுகள் கலந்த எரிபொருள் மீதிகளை தானியங்கிச் செயன்முறை (றிமோட் கொன்றோல்) மூலம் இயங்கும் கருவியிக் துணையுடன் வெளியில் எடுக்கிறது. குறித்த பகுதியில் இருந்து அணு எரிபொருளை அகற்றுகின்ற இந்தப் பணி மிகச் சிக்கலானது என்றும் இது நிறைவடைவதற்கு இரண்டு வருடங்கள் தேவைப்படும் என்றும் குறித்த நிறுவனம் எதிர்வு கூறுகிறது. இந்த அணு உலையில் இருந்து அகற்றப்படும் எரிபொருள் வேறு இடத்துக்குக் கொண்டு சென்று தொடர் பாதுகாப்பில் வைக்கப்படும்.

கழிவுகள் அடைக்கப்பட்ட கதிரியக்கக் கொள்கலன்களை (சிலிண்டர்கள்) பாரவூதிப் பெட்டிகளில் அடைத்து வேறு இடத்துக்குக் கொண்டு சென்று தண்ணீருக்கடியில் வைத்துப் பாதுகாக்கப்படும் என்றும் குறித்த நிறுவனம் மேலும் தெரிவிக்கிறது. இந்தக் கழிவுகள் கசிந்து காற்றில் வெளிப்பட்டாலோ, நீரில் கலந்தாலோ ஆபத்தான கதிரியக்க வாயு வெளியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.






# வெனிசூலாவுக்கு நிவாரண உதவி

கரகஸ்,ஏப்.18

வெனிசூலாவுக்கு ஒருதொகை நிவாரணப் பொருள்களை அனுப்பி வைத்தது செஞ்சிலுவைச் சங்கம். வெனிசூலா அதிபர் மதுரோவுக்கும் பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கத்துக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இந்த உணவுப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

முதற்கட்டமாகக் கடந்த செவ்வாய்க்கிழமை பனாமாவில் இருந்து ஒரு தொகுதி நிவாரணப் பொருள்கள் வானூர்தி மூலமாக வெனிசூலாவுக்கு அனுப்பப்பட்டன.

மதுரோவின் இந்த நடவடிக்கையைப் பாராட்டும் வெனிசூலாத் தரப்பினர், தற்போது கிடைக்கப்பெற்ற நிவாரணப்பொருள்கள் போதுமானவை அல்ல, இன்னும் அதிகளவு நிவாரணம் வெனிசூலாவுக்குத் தேவை என்று குறிப்பிட்டனர்.

**பின்னணி**

வெனிசூலாவின் அரசியல் நிலையற்ற தன்மையால் அந்த நாட்டு மக்கள் பெரும் இன்னல்களை எதிர்கொண்டனர்.

உணவுப் பொருள்கள், மருந்துப் பொருள்கள், குடிநீர் என அத்தியவசியத் தேவைகளுக்குத் தட்டுப்பாடும், பற்றாக்குறையும் அங்கு நிலவியது. பொருளாதார நிலையில் நலிவடைந்ததைக் காரணம்காட்டி வெனிசூலா அரசை அந்த நாட்டு எதிர்க்கட்சித் தலைவர் குவைடோ எதிர்க்கிறார். அமெரிக்கா வெனிசூலா மீது பல தடைகளை விதித்தது. எதிர்க்கட்சித் தலைவர் குவைடோவுக்கு ஆதரவு அளித்து வெனிசூலா அரசைக் கவிழ்ப்பதற்கு முயற்சிக்கிறது. இவற்றால் பாதிக்கப்பட்ட வெனிசூலா மக்கள் பெரும் துன்பப்படுகிறார்கள். வறுமை தலைவிரித்தாடுகிறது. மருத்துவ மனைகள், வர்த்தக நிலையங்கள் என அனைத்தும் மூடப்பட்டுவிட்டன. தமது இக்கட்டான நிலை காரணமாக அவர்கள் வெனிசூலா அரசுக்கு எதிராக வன்முறைகளில் ஈடுபடுகின்றனர்.

குவைடோவின் ஆதரவாளர்கள் வெனிசூலா மக்களுடன் இணைந்து வன்முறையைப் பெரியளவில் மாற்றி விடுவதாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிடுகின்றன.

# அரிய வகை ஆமை சாவு!

பீஜிங்,ஏப்.17

உலகின் அரிதாகக் காணப்படுகின்ற மென்மையான ஓடு கொண்ட ஆமைகளில் ஒன்று சீனாவில் கடந்த சனிக்கிழமை இறந்தது. சீனாவில் உள்ள ஷூஷோ உயிரியல் பூங்காவில் பாதுகாக்கப்பட்டுவந்த 'யாங்ட்ஷி' என்று அழைக்கப்படும் 90வயதுடைய அந்தப் பெண் ஆமை வயது மூப்புக் காரணமாகச் சாவடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த வகை ஆமைகள் உலகில் நான்கே இருக்கின்றன.

இப்போது அவை மூன்றாகக் குறைந்துள்ளன. அவற்றில், ஓர் ஆண் ஆமை சீன வனவிலங்குப் பூங்காவிலும், இரண்டு ஆமைகள் வியட்நாம் காடுகளிலும் உள்ளன. வேட்டையாடுதல், வாழ்விடத்தை அழித்தல், நீர் மாசு உள்ளிட்ட காரணங்களால் இந்த ஆமையினம் அழிவின் விளிம்புக்குச் சென்றது ஆய்வுகளில் கண்டறியப்பட்டது. இந்த வகை ஆமையைப் பெருக்குவதற்குச் செயற்கையாக விந்தணுவைச் செலுத்தி ஐந்து முறை முயற்சிகள் மேற்கொண்டும் அது பலனளிக்கவில்லை. செயற்கையாக விந்தணுவைச் செலுத்தியதுதான் இந்த ஆமை சாவடைந்ததற்குக் காரணமா என்று சந்தேகிக்கப்படுகிறது. மிக அதிக வயதை எட்டிய அந்த ஆமை எப்படி இறந்தது என விசாரணைகள் நடந்து வருகின்றன.






# சிறையில் அடைக்கப்பட்டார் சூடானின் 25ஆண்டுகால அதிபர்

கார்த்தூம்,ஏப்.18

சூடான் நாட்டை 25 ஆண்டு காலம் தொடர்ந்து ஆண்ட முன்னாள் அதிபர் உமர் அல் பஷீர், கார்த்தூம் நகரில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டார். சூடானில் ஆட்சிக்கவிழ்ப்பு நடந்தபின்னர் அல் பஷீர் பற்றிய தகவல்கள் எவையும் வெளி வரவில்லை. ஆனால், நேற்று முன்தினம் அவர் கார்த்துமிலுள்ள கோபெர் சிறையில் அடைக்கப்பட்டதாக சூடான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.



**பின்னணி**

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சூடானில் 1993ஆம் ஆண்டிலிருந்து அதிபராகப் பதவி வகித்து வந்தவர், உமர் அல் பஷீர்(வயது75). உள்நாட்டுப்போரில் போர்க்குற்றம் இழைத்ததாக அவர்மீது பன்னாட்டு நீதிமன்றில் வழக்கு பதிவாகி, குற்றம் சாட்டப்பட்டது. இவரது ஆட்சிக்கு எதிராக மக்கள் போராட்டம் நடத்தினர். இந்த நிலையில், கடந்த டிசெம்பர் மாதம் சூடானில் விலைவாசி உயர்ந்தது. மக்கள் அவதிக்குள்ளாகினர். உமர் அல் பஷீரைப் பதவி விலகக்கோரிய போராட்டங்கள் தொடர்ந்தன. சற்றும் எதிர்பாராத திருப்பமாக அந்த நாட்டின் இராணுவ அமைச்சர் அவாத் இப்ன் அவுப், கடந்த 11ஆம் திகதி இராணுவத்தின் உதவியுடன் உமர் அல் பஷீரின் ஆட்சியைக் கவிழ்த்தார்.

ஆட்சிக்குப் பொறுப்பேற்கும் வகையில் தலைவராகப் பதவி ஏற்றார். பின்னர் கடந்த 14ஆம் திகதியன்று அவர் பதவி விலகினார்.

ஆட்சியை வீட்டு நீக்கப்பட்ட உமர் அல் பஷீர் இரகசிய இடத்தில் அடைத்து வைக்கப்பட்டுள்ளதாகச் சூடான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

# தோவாலயத்தை மீள எழுப்புவோம்! அறைகூவல் விடுத்தார் பிரான்ஸ் அதிபர்

பாரீஸ்,ஏப்.18

பிரான்சில் 850 ஆண்டுகள் பழமையான நோட்ரடாம் கதீட்ரல் தேவாலயமானது தீக்கிரையாகியிருந்தது. தீப்பற்றிய சில நிமிடங்களில் தேவாலயம் முழுவதும் பரவிய தீயால் தேவாலயத்தின் மேற்கூரை மற்றும் பக்கவாட்டுச் சுவர்கள் பலத்த சேதமடைந்து இடிந்து விழுந்தன.

அத்துடன் தேவாலயத்தின் கோபுரங்களில் ஒன்று முற்றிலுமாக எரிந்தது.


பழமை மிக்க கலையம்சங்களுடன் மிளிர்ந்த குறித்த தேவாலயம் தீக்கிரை யான சம்பவம் உலகம் முழுதும் கவலையை விதைத்திருந்தது. உட்புறம் உள்ள மர வேலைப்பாடுகள் முற்றிலுமாக அழிந்துவிட்டன.


கோதிக் பாணியிலமைந்த குறித்த கட்டடத்தில் இருக்கும் கலைப் பொருள்கள் மற்றும் விலைமதிப்பற்ற பொருள்களை மீட்கும் பணியில் அவசரகால குழுக்கள் ஈடுபடுத்தப் பட்டிருக்கின்றன. சம்பவ இடத்தைப் பார்வையிடச் சென்ற பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மக்ரோன்; கூறும்போது,

இந்த தீ விபத்து ஒரு சோக நிகழ்வு, நாம் அனைவரும் ஒன்றிணைந்து புகழ்பெற்ற இந்தத் தேவாலயத்தை மீண்டும் கட்டி எழுப்புவோம். இதற்காகப் பன்னாட்டு அளவில் நிதி திரட்டும் பணி தொடங்கப்படும். தேவாலயத்தை ஏற்கனவே இருந்ததைவிட மிக அழகாக கட்டுவோம், அடுத்த 5 வருடத்துக்குள் தேவாலயம் கட்டி முடிக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறேன். மனித தவறுகளால் ஏற்படும் பாதிப்புகளை நிறைய முறை சரிசெய்துள்ளோம். அந்த வகையில் இதையும் விரைந்து சரிசெய்வோம் என்றார்.

பிரான்ஸைச் சேர்ந்த 'எல்.வி.எம்.ஹெச்', 'கிரிங்', 'எல். ஒரெல்' என்கிற வடிவமைப்பு நிறுவனங்கள் மூன்றும் குறித்த தேவலாயத்தைச் சீரமைப்பதற்காக சுமார் 700 மில்லியன் டொலர்களை வழங்க முன்வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






பிரான்சின் தலைநகர் பரிஸில் அமைந்துள்ள அந்த நாட்டுப் பாரம்பரியமும் யுனெஸ்கோ அமைப்பின் தொல்பொருள் சின்னமுமான நாட்ரே டாம் தேவாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மிகப்பெரும் தீ விபத்து ஏற்பட்டது. தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டு கட்டடங்களைக் குளிர்விக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தீயின் பின்னர் தேவாலயத்தின் நிலமை தொடர்பில் ஒளிப்படக் கோர்வையாக வெளியிட்டுள்ளது பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ்.

## இரட்டைப்...

(வயது - 4), யூட் பிரின்ஸ் ஹென்ரிக்ஸ் (வயது - 48), அவரது மனைவியான மரியா பென்சியா ஹென்ரிக்ஸ் (வயது - 42), அவர்களது மகளான செரேப் ஹென்ரிக்ஸ் (வயது -10), அவர்களது மகனான யூட் பிரின்ஸ் ஹெய்ட் ஹென்ரிக் (வயது - 19) ஆகியோரே இந்தக் கோர விபத்தில் உயிரிழந்துள்ளனர். அதேவேளை, யூட் பிரின்ஸ் ஹென்ரிக்ஸின் மகளான செகானி ஹென்ரிக்ஸ் (வயது - 13) மற்றும் ரெசானி பெர்கஸால் (வயது - 16) ஆகியோர் படுகாயமடைந்து மகியங்கனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ம-21)

## கோலாகல...

கள் அனைத்தும் பெரும் எடுப்பில் முன்னெடுக்கப்பட்டு நிறைவுபெற்றுள்ளன.

இந்திர விழாவை முன்னிட்டு, வல்வெட்டித்துறை ஊழிக்காடு தொடக்கம் வல்வெட்டித்துறை பொலிகண்டி வரைக்குமான சுமார் நான்கு கிலோமீற்றர் தூரத்துக்கு 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மின்குமிழ்களால் அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளன. சுமார் 300க்கும் மேற்பட்ட குலை வாழைகள் இந்த விழாவுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்துக் கடவுளர்களின் திருவுருவங்கள் பொருத்தப்பட்ட பிரமாண்டமான 10 கட்அவுட்கள் பெரியளவில் தயாரிக்கப்பட்டுள்ளன. சுமார் 100 புகைக்கூண்டுகள் விடப்படவுள்ளன. அவற்றில் ஐந்து கூடுகள் அறுபது அடிகள் உயரமுடிவை. வாணவேடிக்கைகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஏழு இசைக் குழுக்கள் இசை வழங்கத் தயாராகியுள்ளன. வில்லுப்பாட்டு, நாடகம், நடனம், பாரம்பரிய நிகழ்வுகள் என்பவற்றுடன் கடலில் மேடை அமைத்தும் ஓர் இசை நிகழ்வு நடத்தப்படவுள்ளது. 50 வருடங்களுக்கும் மேலாக இந்த விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. இந்த விழாவை யாழ்ப்பாணத்திலும் ஏனைய பகுதிகளிலும் இருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் நேரில் சென்று பார்வையிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-26)

## கண்ணிவெடி...

சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர். த ஹலோ ரட்ஸ் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் இருவரே அவ்வாறு காயமடைந்தவர்களாவர்.

நேற்றுக் காலை முதல் முகமாலைப் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போதே, பகல் 2.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வெடித்த சத்தம் கேட்டபோது ஏனைய பணியாளர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று அங்கு படுகாயமடைந்த நிலையில் இருந்த இருவரையும் காப்பாற்றியதுடன், அவர்கள் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

(ம-106)

## மாவட்ட...

டைக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு வரும் பொதுமக்களிடம், 'உங்களுக்குத் தேவையான ஆவணங்களை துரிதமாகப் பெற்றுத் தருகின்றேன்' என்றுகூறி அவர்களிடம் இருந்து பணத்தைப் பெற்று நபரொருவர் ஏமாற்றுகின்றார் என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைத்தன. குறித்த நபர் மறைகாணிகளின் உதவியால் அடையாளம் காணப்பட்டார். அவர் மாவட்டச் செயலக சிற்றுண்டிச் சாலையில் நேற்று இன்னொரு நபருடன் பேச்சில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது பிடிக்கப்பட்டார். குற்றத்தை குறித்த நபர் ஏற்றுக்கொண்டதை அடுத்து அவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ம)

## சஜித்தின்...

பிரதித் தலைவருமான சஜித் பிரேமதாச விடுத்த கோரிக்கையை தலைமை அமைச்சரும் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துள்ளார் என்று கட்சியின் உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் போட்டியிடத் தயாராகிவரும் அமைச்சர் சஜித் பிரேமதாச - அதற்கு முதல் தனது தந்தையாரின் தொகுதியில் இருந்து களமிறங்க ஆவல் கொண்டே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

ஆனாலும், இது கட்சிக்குள் தேவையற்ற சர்ச்சைகளை உருவாக்கலாம் என்பதால் நிராகரித்துள்ள ரணில், அம்பாந்தோட்டையில் இருந்தே பணிகளைச் செய்யுமாறு சஜித்தைக் கேட்டுள்ளார் எனச் சொல்லப்படுகின்றது.

கொழும்பு மாவட்டத்தின் முக்கிய புள்ளியான அமைச்சர் ரவி கருணாநாயக்க சஜித்துடன் மோத ஆரம்பித்திருப்பதற்கு இதுவும் ஒரு காரணம் எனச் சொல்லப்படும் அதேசமயம், தலைமை அமைச்சர் ரணிலும் கொழும்பு மாவட்டத்துக்குள் புதிய அமைப்பாளர்களை நியமிக்க விரும்பவில்லை என அறியமுடிந்தது. (ம-22)

## தமிழ்...

யாழ்ப்பாணம், ஏப். 18

தமிழ் அரசுக் கட்சியின் அமைப்பு விதிகளுக்கு அமைய தலைவராகப் போட்டியிட விரும்புபவர்கள் விண்ணப்பிக்க வேண்டிய கடைசித் தினம் நாளையாகவுள்ள நிலையில் நேற்றுவரை எவரும் விண்ணப்பிக்கவில்லை எனத் தெரியவருகின்றது.

தமிழ் அரசுக் கட்சியின் தேசிய மாநாடு எதிர்வரும் 26ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள நிலையில் கட்சி அமைப்பு விதிகளின் பிரகாரம் புதிய தலைவராக போட்டியிட விரும்புவோரின் பெயர் ஒரு வாரத்தின் முன்பே கட்சியின் [illegible] அங்கத்தவர்கள் அல்லது இரு [illegible] பரிந்துரைக்கப்பட வேண்டும். அதன் பிரகாரம் புதிய தலைவருக்காக பரிந்துரைக்கும் இறுதி நாள் நாளைய தினத்துடன் நிறைவடையவுள்ளது. இந்த நிலையில் இதுவரை எவரது பெயரும் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்படவில்லை. இருப்பினும் இன்று அல்லது நாளை ஒரு பரிந்துரை சமர்ப்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அனேகமாக தற்போதைய தலைவர் மாவை சேனாதிராசாவின் பெயரே பரிந்துரைக்கப்படலாம் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம-105)

## எந்நேரத்திலும்....

சித்திரைப் புத்தாண்டு பாரம்பரிய முறைப்படி தலைக்கு எண்ணெய் வைக்கும் நிகழ்வு பெல்லன்வில ரஜமகா விகாரையில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்றது. இதில் முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவும், முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்சவும் கலந்துகொண்டனர். நிகழ்வின் இறுதியில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே மகிந்த ராஜபக்ச மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசைக் கவிழ்க்கும் உரிமை எமக்கு உள்ளது. பெரும்பான்மைப் பலத்துடன் அரசைக் கவிழ்த்தே தீருவோம். இன்று மின் துண்டிப்பு, நீர் மற்றும் அதிக வரி காரணமாக மக்கள் துன்பப்படுகின்றனர். இதனை நாம் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருக்கமாட்டோம். எதிர்காலத்தில் அனைத்துத் தேர்தல்களிலும் நாம் வெற்றிப் பெறுவோம். எமது சகல கட்சிகளும் ஒன்றிணைந்து தீர்மானித்து, உறுதியாக வெற்றி பெறக்கூடியவரையே அரச தலைவர் வேட்பாளராக முன்னிறுத்துவோம். அவசரப்பட்டு தீர்மானம் எதனையும் நாம் எடுக்கமாட்டோம்' என்றார்.

கோத்தபாய ராஜபக்சவுக்கு எதிராக அமெரிக்காவில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குத் தொடர்பில் கருத்துத் தெரிவித்த மகிந்த, 'அது கோத்தபாய மீது சிலருக்கு இருக்கும் பயத்தை வெளிக்காட்டுகின்றது' எனக் கூறினார். (ம-22)

## மின்னல்...

குறித்த நபர்கள் இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டனர். மீசாலை வடக்கு தட்டாங்குள பிள்ளையார் வீதியைச் சேர்ந்த அம்பலவாணர் சிவசுப்பிரமணியம் (வயது - 65), அப்புக்குட்டி சிவசுப்பிரமணியம் (வயது - 65) ஆகியோரே அவ்வாறு மின்னலால் தாக்கப்பட்டவர்களாவர். (ம-159.9)

## காப்புறுதிக்கான...

கமக்கார அமைப்புக்களின் அதிகார சபைத் தலைவர் கந்தையா தியாகலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் யாழ். மாவட்ட கமக்கார அமைப்புக்களின் அதிகார சபைத் தலைவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் முக்கிய பொருளாதார வளங்களாக விவசாயம், மீன்பிடி என்பன உள்ளன. மீன்பிடியில் ஈடுபடும் கடற்றொழிலாளர்களுக்கு தற்போது இருக்கும் காப்புறுதி வாய்ப்பை விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும் என்று நாம் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வருகின்றோம். இருப்பினும் அரசு செவிசாய்க்கவில்லை. ஆனால் அந்தக் காப்புறுதியை வழங்க வேண்டியதன் நியாயப்பாட்டை மயிலங்காட்டில் நேற்று (நேற்றுந்தினம்) இடம்பெற்ற இடிமின்னல் தாக்குதல் உணர்த்தியுள்ளது.

அதாவது குறித்த சம்பவத்தில் ஒரு விவசாயியும் இரு விவசாய கூலித் தொழிலாளர்களும் தொழிலில் ஈடுபட்ட இடத்தில் உயிரிழந்தனர். இருப்பினும் அவர்களுக்கு சாதாரண இடர்களின்போது உயிரிழப்பவர்களுக்குக் கிடைக்கும் ஒரு லட்சம் ரூபா மட்டுமே உச்சபட்சமாக கிடைக்கும். இருப்பினும் கடற்றொழிலாளர்கள் தமது நீண்ட போராட்டத்தின் பயனாக காப்புறுதி வாய்ப்பைப் பெற்றுள்ளனர். அதாவது வருடம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபா காப்புறுதிப் பணமாக செலுத்தியிருப்பின் கடற்றொழிலில் ஈடுபடும்போது ஏற்படும் அசம்பாவிதத்துக்கு ஒரு மில்லியன் ரூபா இழப்பீட்டினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதனைச் சுட்டிக்காட்டி அந்த வசதியை எமது விவசாயிகளுக்கும் பெற்றுத் தருமாறு பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்து வருகின்றோம். இருப்பினும் எந்த அரசுமே கண்டுகொள்ளவில்லை. இவ்வாறான காரணங்களால்தான் விவசாயம் இன்று அழிவடையும் நிலமைக்குச் செல்கின்றது. எமது கோரிக்கையைக் கருத்தில்கொண்டு விவசாயிகளுக்கும் இந்தக் காப்புறுதி வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும் எனக் கோருகின்றோம் என்றார்.

(ம-105)

## போதையில்...

மருத்துவமனையில் பணிபுரியும் ஊழியர்களுடனும் பொலிஸார் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் என்று மருத்துவமனை வட்டாரத்தால் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

சுன்னாகம் பகுதிநோக்கி உந்துருளியில் பயணித்த இரு பொலிஸாரும் மதுபோதையில் உந்துருளியைச் செலுத்திச் சென்றதோடு வீதியால் பயணித்த பெண் ஆசிரியர் ஒருவரையும் மோதித்தள்ளினர். இதன்போது வீழ்ந்த இரு பொலிஸாரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சமயம் இருவரும் போதையின் உச்சத்தில் மருத்துவமனையில் இருந்த அலுவலர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அங்கு பணிபுரியும் சிங்கள மொழி தாதியர்கள் உதவ முற்பட்டபோதும் அவர்களையும் தகாத வார்த்தைகளால் ஏசியதால் குறித்த தாதியர்களும் ஒதுங்கிக் கொண்டனர். இந்த விடயம் மருத்துவமனையின் பணிப்பாளரின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது. (ம-105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போட்டி முடிவுகள்

மன்னார், ஏப். 18
சாவற்காட்டு கில்லறி விளையாட்டுக்கழகம் அருட்சகோதரன் கில்லறி ஜோசப்பின் 100 ஆவது பிறந்தநாளை முன்னிட்டும், கில்லறி விளையாட்டுக் கழகத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டும் வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் அணிக்கு 9 பேர் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

சென்.லூட்சியா பாடசாலை அணிக்கும் நெடுங்கண்டல் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சென்.லூட்சியா பாடசாலை அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பனங்கட்டுக்கொட்டு சென். ஜோசப் விளையாட்டுக்கழக அணிக்கும் நானாட்டான் டைமன் ஸ்ரார் விளை யாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பனங்கட்டுக்கொட்டு சென்.ஜோசப் விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

முத்தரிப்பு சென்.ஜோசப் விளையாட்டுக்கழக அணிக்கும் எமில் நகர் இருதயநாதர் விளை யாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பதிவு செய்யவில்லை. ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

நானாட்டான்றீகன்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணிக்கும் தோட்டவெளி ஐக்கிய விளை யாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் தலா 2 கோல்களைப் பதிவு செய்தனர். ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

சென்.லூட்சியா விளை யாட்டுக் கழக அணிக்கும் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பதிவு செய்யவில்லை. ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
(ஒ.23)



# செட்டிக்குளம் அணி எல்லேயில் வெற்றி

வவுனியா, ஏப். 18
வவுனியா மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான எல்லேப் போட்டியில் செட்டிக்குளம் பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது.
வவுனியா முஸ்லிம் மகா வித்தியா லயத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இறுதி ஆட்டம் இடம்பெற்றது.
செட்டிக்குளம் பிரதேச செயலக அணியை எதிர்த்து வவுனியா பிரதேச செயலக அணி மோதியது. முதலில் ஆடிய வவுனியா பிரதேச செயலக அணி ஓர் ஓட்டத்தைப் பெற்றது.
செட்டிக்குளம் பிரதேச செயலக அணி 2 ஓட்டங்களைப் பெற்று வெற்றியை தனதாக்கியது. (ஒ.23)



# பெண்களுக்கான எல்லே செட்டிக்குளம் சம்பியன்

வவுனியா, ஏப். 18
வவுனியா மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான எல்லேப் போட்டியில் செட்டிக்குளம் பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது.
வவுனியா முஸ்லிம் மகா வித்தியா லயத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இறுதி ஆட்டம் இடம்பெற்றது.
செட்டிக்குளம் பிரதேச செயலக அணியை எதிர்த்து வவுனியா பிரதேச செயலக அணி மோதியது. முதலில் ஆடிய வவுனியா செட்டிக்குளம் பிரதேச செயலக அணி 2 ஓட்டங்களைப் பெற்றது. பதிலளித்து ஆடிய வவுனியா பிரதேச செயலக அணி ஓர் ஓட்டத்தை மாத்திரம் பெற்று தோல்வியைத் தழுவியது. (ஒ.23)



# பன்னாட்டுத் தொடரில் பங்கேற்கிறார் மன்னார் வீரன்

மன்னார், ஏப். 18
பன்னாட்டுப் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டிக்கு மன்னாரைச் சேர்ந்த செபஸ்டியன் மார்க் வெனிலன் மார்க் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
உலகப் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான தடகளத் தொடர் இத்தாலியில் நடைபெறவுள்ளது. இவர் சப்பிரகமுவா பல்கலைக் கழகம் சார்பாக கலந்து கொள்ளவுள்ளார்.
முப்பாய்ச்சலில் 14.17 மீற்றர் பாய்ந்து தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ஒ.422)

# இன்றைய ஆட்டங்கள்

வல்வெட்டித்துறை தீருவில் இளைஞர் விளையாட்டுக்கழகத்தின் 72ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மின்னொளியிலான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று வியாழக்கிழமை கழக மைதானத்தில் ஆரம்பமாகின்றன.
இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தொண்டமனாறு கலையரசி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மோகனதாஸ் விளை யாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் சென்ரல் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ஒ.23)



# கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சுருட்டி யாழ். மத்திய கல்லூரி மகத்தான வெற்றி

*ரி-20 ஆட்டத்தில் அபாரம்!*

யாழ்ப்பாணம், ஏப். 18
கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை 223 ஓட்டங்களால் வீழ்த்தி அபார வெற்றியைப் பதிவு செய்தது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி.
சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும், கல்லூரியில் துடுப்பாட்டம் ஆரம்பிக்கப்பட்டு 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையில் ரி-20 துடுப்பாட்டத் தொடர் இடம்பெற்று வருகின்றது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும், கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையிலான ஆட்டம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 260 ஓட்டங்களை விளாசியது. சாரங்கன் 91 ஓட்டங்களையும், நிதுசன் 46 ஓட்டங்களையும், ஜெயதர்சன் 36 ஓட்டங்களையும், [illegible] 27 ஓட்டங்களையும், மது[illegible] ஓட்டங்களையும், அனஸ்ராஜ் 21 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.
கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பில் பந்து வீச்சில் விஜிதரன் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.
261 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 37 ஓட்டங்களுக்குள் சுருண்டது. றொக்சன் அதிகபட்சமாக 9 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.
பந்து வீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி [illegible]காந், இயலரசன், [illegible]ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினார்கள். (ஒ.23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பஞ்சாப் அணி அபார வெற்றி



12ஆவது ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் - ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் மோதின. இதில் பஞ்சாப் அணி 12 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி முதலில் பஞ்சாப் அணியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. பஞ்சாப் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது. ராகுல் 52 ஓட்டங்களையும், மில்லர் 40 ஓட்டங்களையும், கெய்ல் 30 ஓட்டங்களையும், அகர்வால் 26 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். அஸ்வின் ஆட்டமிழக்காது 4 பந்துகளில் 17 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் அதிகபட்சமாக ஆர்ச்சர் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய ராஜஸ்தான் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக ரிப்பதி, பட்லர் களமிறங்கினர். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் பந்துகளை வீணடித்தனர். அஸ்வினுக்கு பதிலடி கொடுப்பார் என எதிர்பார்க்கப்பட்ட பட்லர் ஏமாற்றியிருந்தார். அதிகபட்சமாக ரிப்பதி 50 ஓட்டங்களைப் பெற்றார். பின்னி ஆட்டமிழக்காது அதிரடியாக ஆடி 11 பந்துகளில் 33 ஓட்டங்களைக் குவித்தார். அவர் வெற்றிக்காக இறுதி வரை போராடிய போதிலும் அதனை எட்ட முடியவில்லை.

பந்து வீச்சில் அர்சடீப் சிங், அஸ்வின், மொகமட் சமி தலா இரண்டு இலக்குகளையும், முருகன் அஸ்வின் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக பஞ்சாப் அணி வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் தெரிவு செய்யப்பட்டார்.

# உலகக் கிண்ணத் தொடர்: இங்கிலாந்து அணி அறிவிப்பு



இங்கிலாந்தில் ஆரம்பமாகவுள்ள உலகக் கிண்ணத்துக்கான இங்கிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டது. இதில் ஜாப்ரா ஆர்ச்சர் இணைக்கப்பட்வில்லை.

இந்தப் போட்டியில் 10 அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, இந்தியா, பங்களாதேஷ் அணிகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் போட்டியை நடத்தும் இங்கிலாந்து அணி வீரர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் வேகப்பந்து வீச்சு, சகலதுறை ஆட்டக்காரர் ஜாப்ரா ஆர்ச்சர் பெயர் இடம் பெறவில்லை.

உலகக் கிண்ணத்துக்கான அறிவிக்கப்பட்ட இங்கிலாந்து அணி விவரம்: மோகன் (அணித் தலைவர்), பெயர்ஸ்டோ, ஜேசன் ராய், ஜோ ரூட், பென் ஸ்டோக்ஸ், ஜோஸ் பட்லர், மொயீன் அலி, கிறிஸ் வோக்ஸ், லியாம் பிளங்கெட், அடில் ரஷித், மார்க் வுட், அலெக்ஸ் ஹேல்ஸ், டாம் குர்ரான், ஜோ டென்லி, டேவிட் வில்லே

# விரக்தியில் கிண்டலாக பதிலளித்தார் அம்பதி ராயுடு

உலகக் கிண்ணப் போட்டிக்கான இந்திய அணியில் இடம் கிடைக்காத விரக்தியில், தேர்வுக்குழு மீது அம்பதி ராயுடு கடுமையாக சாடியுள்ளார்.

உலகக் கிண்ணப் போட்டி இங்கிலாந்தில் ஆரம்பமாகின்றது. இதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்ட நிலையில் அந்த அணியில் அம்பதி ராயுடு, ரிஷப் பந்த் ஆகியோர் இடம்பெறவில்லை. இது குறித்து பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன.

சமீப காலமாக ராயுடு சொதப்பி வந்ததால் இடம் கிடைக்கவில்லை. மேலும், விஜய் சங்கர் பந்து வீச்சு, துடுப்பாட்டம், களத்தடுப்பு ஆகிய பிரிவிலும் சிறந்து விளங்குவதால் அவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது என்று இந்திய அணியின் தேர்வுக்குழுத் தலைவர் குறிப்பிட்டார். இதனை ஆங்கிலத்தில் "விஜய் சங்கர் ஒவ்வர்ஸ் இஸ்த்ரிடைமென்ஸ்" என்று தெரிவித்தார்.

இந்த நிலையில் தனக்கு இடம் கிடைக்காத விரக்தியில் அம்பதி ராயுடு தனது டுவிட்டர் பக்கத்தில் "உலகக் கிண்ணப் போட்டியை பார்க்க நான் புதிய செட் '3டி' கண்ணாடிகளுக்கு பதிவு செய்துள்ளேன்'' என்று கிண்டலாக பதிலளித்துள்ளார்.



# மின்னொளி இன்மையால் விளையாட்டு வீரர்கள் அவதி

வவுனியா,ஏப்.18

வவுனியா நகரசபைமைதானத்தில் மாலை நேரங்களில் மின்விளக்குகள் ஒளிராமையால் விளையாட்டு வீரர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக தெரிவித்துள்ளனர்.


வவுனியா நகரசபை மைதானத்தை மாலை நேரங்களில் விளையாட்டு வீரர்கள் உட்பட பொதுமக்கள் உடற்பயிற்சிக்காக பயன்படுத்திவரும் நிலையில் கடந்த சில நாள்களாக மாலை 6 மணிக்கு மேல் மைதானத்துக்கு மின் விளக்குகள் போடப்படாமையால் இருண்டு காணப்படுவதாக விளையாட்டு வீரர்கள் தெரிவித்தனர்.

மைதானம் மற்றும் சில உள்ளக விளையாட்டு அரங்குகள் மின்னொளி இல்லாமல் இருளடைந்து காணப்படுவதுடன், மாலை நேரப்பயிற்சியில் ஈடுபடும் விளையாட்டு வீரர்கள் இருட்டில் தமது பயிற்சிகளை சிரமத்தின் மத்தியில் மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

விடயம் தொடர்பாக நகரசபையின் உபநகரபிதா சு.குமாரசாமியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. மைதானத்துக்கு மின்விளக்குகளை பொருத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஊழியர்களை பணித்துள்ளதாகவும், ஒருசில நாள்களில் அதற்கான தீர்வு எட்டப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க-110)

# அன்று எனக்கு இன்று ராயுடுவுக்கு

கம்பீர் கவலை



இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள உலகக் கிண்ண போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டதை அடுத்து பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஏனெனில் இந்திய அணியில் ரிஷப் பந்த், அம்பதி ராயுடுநீக்கப்பட்டதையடுத்து பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் கம்பீர் இது குறித்து தெரிவிக்கையில்;

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணியில் இளம் இலக்குக் காப்பாளர் ரிஷப் பந்த் இணைக்கப்படாதது குறித்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அம்பதி ராயுடுவை தெரிவு செய்யாதது விவாதத்துக்குரியது தான். ஒருநாள் கிரிக்கெட்டில் மிகத் திறமையான வீராகக் காணப்படும் அம்பதி ராயுடுவை இணைக்காதது மிகப்பெரிய துரதிர்ஷ்டமே. ஏனைய வீரர்கள் தெரிவில் புறக்கணிக்கப்பட்டதைவிட ராயுடுவை இணைக்காதது தான் எனக்கு மிகவும் அதிர்ச்சியாகவும். இதயத்தை நொறுக்குவதாகவும் உள்ளது.

ராயுடுவுக்காக நான் மிகவும் வேதனைப்படுகிறேன். 2007ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியின் போது எனக்கும் இதே நிலை ஏற்பட்டது. உலகக் கிண்ணப் போட்டிக்கு நம்மை தயார்ப்படுத்தி வரும் நிலையில் அணியில் இடம் இல்லை என்றால் அதனால் ஏற்படும் வேதனை எத்தகையது என்பதை நான் அறிவேன். உலகக் கிண்ணப் போட்டியில் ஆட வேண்டும் என்பது தான் இளம் வயதில் இருந்தே ஒரு வீரரின் கனவாக இருக்கும். அதனால் தான் நான் ராயுடுவுக்காக வருந்துகிறேன்.

ரிஷப் பந்த் சேர்க்கப்படாதது அவருக்கு அது பின்னடைவு என்று சொல்ல முடியாது. அவர் குறுகிய வடிவிலான கிரிக்கெட் போட்டிகளில் தொடர்ச்சியாக இடம் பெறவில்லை. கிடைத்த வாய்ப்புக்களையும் பயன்படுத்திக் கொள்ளத் தவறி விட்டார். அதனால் அவருக்கு இது பின்னடைவு அல்ல. அவர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி வருகிறார். அதை நினைத்து மகிழ்ச்சி அடைய வேண்டும். இதே போல் தொடர்ந்து நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும். தேர்வு விவகாரம் குறித்து அதிகமாக சிந்தித்து கொண்டு இருக்கக்கூடாது. மொத்தத்தில் அணியில் யார் இருக்கிறார்கள், யார் இல்லை என்பது முக்கியம் அல்ல. உலகக் கிண்ணத்தை வென்று நாட்டுக்குக் கொண்டு வருவதில் கவனம் செலுத்த வேண்டும்- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல்லில் இருந்து அல்ஜாரி ஜோசப் விலகல்

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னணி இளம் வேகப்பந்து வீச்சாளர் அல்ஜாரி ஜோசப் ஐ.பி.எல். போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணியில் இடம் பெற்று இருந்தார்.
மலிங்க இல்லாத காரணத்தால் ஹைதராபாத் அணிக்கெதிராக அறிமுகம் ஆன ஜோசப்,அந்தப் போட்டியில் 12 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளைக் கைப்பற்றி ஐ.பி.எல்லில் சாதனையைப் படைத்தார்.
மும்பையில் நடைபெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கெதிராக களத்தடுப்பில் ஈடுபட்ட போது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. இதனால் அந்த போட்டியில் அதன்பின் களத்தடுப்பு செய்யவில்லை.
இந்த நிலையில் தோள்பட்டை காயத்தால் ஐ.பி.எல். தொடரில் இருந்து விலகியுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.





## மெஸ்ஸி கலக்கல்

# பார்சிலோனா அபார வெற்றி

ஸ்பானியக் கழகங்களுக்கிடையில் சம்பியன்ஸ் லீக் போட்டி இடம்பெற்று வருகின்றது. இதில் நேற்று இடம்பெற்ற போட்டியில் பார்சிலோனா அணி 3:0 என்ற கணக்கில் வெற்றி அரையிறுதிக்கு முன்னேறியது.
பார்சிலோனா - மன்செஸ்ரர் யுனைரெட் அணிகள் மோதிய போட்டியில் பார்சிலோனா வீரர் மெஸ்ஸி அபாரமாக இரண்டு கோல்களை அடித்தார். முதல் பாதி ஆட்டம் ஆரம்பித்து 16ஆவது மற்றும் 20ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி இரண்டு கோல்களைப் பதித்தார். முதல் பாதி ஆட்டத்தில் பார்சிலோனா அணி 2 : 0 என்ற கணக்கில் முன்னிலையிலிருந்தது.
இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்த போது இரண்டு அணி வீரர்களும் முட்டி மோதிக் கொண்டு ஆக்ரோசமாக ஆட்டத்தை ஆரம்பித்தனர். ஆட்டத்தின் 61ஆவது நிமிடத்தில் பார்சிலோனா வீரர் பிலிப் கரின்கோ ஒரு கோலைப் போட்டார். ஆட்டத்தின் இறுதி நிமிடம் வரையிலும் யுனைரெட் அணியினர் போராடிய போதிலும் அவர்களால் கோல்கள் எதனையும் பெற முடியாது போக இறுதியில் பார்சிலோனா அணி 3: 0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

# ஐ.பி.எல்லை வைத்து கோக்லியை எடைபோட வேண்டாம் – பெர்குசன்

இந்திய அணித் தலைவர் விராட் கோக்லி ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் அணியின் தலைவராக விளங்குகின்றார். இவர் ஐ.பி.எல். போட்டியில் தலைமைப் பொறுப்பேற்று இதுவரையான காலப்பகுதிகளில் எந்தவொரு கிண்ணத்தையும் அணிக்கு பெற்றுக் கொடுக்கவில்லை. இதனால் இவர் மீது பல்வேறு விமர்சனங்கள் எழுந்திருந்தன. இந்திய அணியின் தல்லைவராக கோக்லி இருந்தாலும் அவரை டோனி தான் வழி நடத்துகின்றார் என்றும், ஒரு போட்டியைக்கூட வெல்லாத அணிதலைவராக பெங்களூர் அணி கோக்லியை அணித் தலைவர் பொறுப்பில் வைத்திருப்பதால் அவர் பெங்களூர் அணி நிர்வாகத்துக்கு நன்றி சொல்ல வேண்டும் என்றும் விமர்சனங்கள் எழுந்திருந்தன. நடப்பு ஐ.பி.எல். வருடத்திலும் அந்த அணி தொடர் தோல்விகளைச் சந்தித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.
இந்த நிலையில் ஐ.பி.எல். தொடர் வேறு, பன்னாட்டு போட்டி வேறு. விராட் கோக்லி 'சர்வதேச சுப்பர் ஸ்டார்' என்று கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக விளையாடி வரும் நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர் பெர்குசன் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
விராட் கோக்லி சர்வதேச சுப்பர் ஸ்டார். அவர் இந்திய அணிக்காக விளையாடுவதை காட்டிலும் பெங்களூர் அணிக்காக விளையாடுவதில் மிகப்பெரிய மாறுபாடு உள்ளது.
அவர் விரும்பியபடி ரி-20 தொடரில் வெற்றி கிடைக்காமல் இருந்திருக்கலாம். ஆனால், உலகக் கிண்ணத்தில் அவர் மோசமாக விளையாடுவார் என்று சொல்ல முடியாது.
இது வேறுபட்ட போட்டி, வேறுபட்ட அணி, வேறுபட்ட விளையாட்டு. நியூசிலாந்து அணி அவர் மீது ஒரு பார்வை வைக்கும். அவர் அதிக ஓட்டங்களைக் குவித்துள்ளார். மிகவும் அபாயகரமான வீரர் அவர்- என்றார்.



# கே.எல். ராகுல் புதிய சாதனை



மொஹாலியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் - கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகள் மோதிய போட்டியில் பஞ்சாப் அணி வீரர் கே.எல்.ராகுல் 52 ஓட்டங்களைப் பெற்ற போது புதிய சாதனையை எட்டினார்.

இந்தப் போட்டியில் கே.எல்.ராகுல் அடித்த அரைச்சதம் வெற்றிக்கு முக்கியப் பங்காற்றினார். பஞ்சாப் அணி புள்ளிப்பட்டியலில் 4ஆம் இடத்துக்கு முன்னேறியது.
இந்த ஆட்டத்தில் கே.எல். ராகுல் 47 பந்துகளுக்கு 52 ஓட்டங்களைப் பெற்றார். இதன் மூலம் கிங்ஸ்லெவன் பஞ்சாப் அணியில் இணைந்தபின் அந்த அணிக்காக ஆயிரம் ஓட்டங்களைச் சேர்த்த வீரர் எனும் பெருமையைப் பெற்றார். பஞ்சாப் அணியில் ராகுல் இணைந்த பின்னர் 23 இன்னிங்ஸ்களில் இந்தச் சாதனையை ராகுல் எட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.
இதற்கு முன்னர் இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவர் குமாரா சங்ககார 37 போட்டிகளில் 1009 ஓட்டங்கள் பெற்றிருந்தார். ஆனால், ராகுல் 23 இன்னிங்ஸ்களில் ஆயிரம் ஓட்டங்களை எட்டியுள்ளார். இதில் ஒரு சதம், 10 அரைச்சதங்கள் அடங்கும்.
பஞ்சாப் அணிக்காக அதிக ஓட்டங்கள் சேர்த்தவர்களில் ஆஸ்திரேலிய வீரர் ஷான் மார்ஷ் 69 இன்னிங்ஸ்களில் 2 ஆயிரத்து 477 ஓட்டங்கள் பெற்று முதலிடத்தில் உள்ளார்.

வீட்டுடன் காணி உடன் விற்பனைக்கு
சல்லிக்கலட்டி அச்சுவேலி மேற்கில் வீட்டுடன் 4½ பரப்புக் காணியுடன் விற்பனைக்கு (CS 24771) (14.17)
076 740 3380/077 129 8201

SAAMSON Experts in English Training
இன் 3 மாத சனி,ஞாயிறு ஆங்கிலப் பயிற்சிநெறி
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 20.04.2019 சனி
பிரிவு 01 : காலை 10-12 பிரிவு 02 : மாலை 03.05
அரச தனியார் ஊழியர்கள், ஆசிரியர்கள், இளைஞர் யுவதிகள், உயர்கல்வி மாணவர்கள் இணையமுடியும்
ஆங்கிலம் சரளமாக பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பி வழங்கப்படும்
SAAMSON 403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவிலடி, யாழ்நகர். 077 621 4567 021 222 4282

வேலையாள்கள் தேவை
Print Star Digital Image க்கு தையல் வேலைக்கு வேலையாள்கள் தேவை. தொடர்பு - 076 565 6534

Rooms வாடகைக்கு
112/1. மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். Rooms மாத வாடகைக்கு விடப்படும். தொடர்பு - 076 565 6534

FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்ச்
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)
40, பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781 ஆரம்பம் : 20.04.19 சனி காலை 8 மணி
181, பிரதான வீதி, நெல்லியடி. 0779 789 456 / 0762 669 614 ஆரம்பம் : 22.04.19 3.30pm
திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1
IELTS,SPOKEN ENGLISH & இத்தாலி மொழி வகுப்புக்கள்.

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
யாரும் படிக்கலாம்.
www.ambafrancelk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.